# ANNUAL RESEARCH SESSION 2022

# PROCEEDINGS
## Abstracts

## EXPLORING CONTEMPORARY SRI LANKAN ISSUES AND REDESIGNING THE FUTURE

Faculty of Arts and Culture
Eastern University, Sri Lanka

# Exploring Contemporary Sri Lankan Issues and Redesigning the Future

**Annual Research Session-2022**

Faculty of Arts & Culture
Eastern University, Sri Lanka

Title : Exploring Contemporary Sri Lankan Issues and Redesigning the Future


**Editorial Board**

Editor : Mrs.Gowry Luxmykanthan

Co-editors : Mrs.Jeyapiratheeba Anton Arulrajah

Mr.K.Gukan

Mr.M.Prahasan

Mrs.Prashanthi Ilango

Mr.V.Sasikaran



Edition : 2022

Published by : Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka

ISBN : 978-624-5731-14-5

# Organizing committee

**Chairman**

Prof.J.Kennedy

**Coordinator**

Dr.V.Gunapalasingam

**Secretary**

Mr. M.L.Mohemed Helfan

**Committee Members**

Mrs.Jeyapiratheeba Anton Arulrajah

Mrs.Gowry Luxmykanthan

Mr.K.Gukan

Mr.M.Prahasan

Mrs.Prashanthi Ilango

Mr.V.Sasikaran

**Advisory Board**

Prof.V.Gunaretnam

Prof.T.Krishnamohan

Prof.V.Inpamohan

Prof.S.Santhirasegaram

# PANEL OF REVIEWERS

| | | |
|---|---|---|
| 1. | Prof. V. Gunaretnam | Eastern University, Sri Lanka |
| 2. | Prof. T. Krishnamohan | Eastern University, Sri Lanka |
| 3. | Prof.T.Bhavan | Eastern University, Sri Lanka |
| 4. | Prof. V. Inpamohan | Eastern University, Sri Lanka |
| 5. | Prof. S. Santhirasegaram | Eastern University, Sri Lanka |
| 6. | Dr.S.Maunaguru (Retired Prof) | Eastern University, Sri Lanka |
| 7. | Mrs.M.Sitralega (Retired Prof) | Eastern University, Sri Lanka |
| 8. | Mr.M.Selvarajah (Retired Prof) | Eastern University, Sri Lanka |
| 9. | Dr.S.Yogarajah (Retired Prof) | Eastern University, Sri Lanka |
| 10. | Dr.P.Pushparatnam (Retired Snr. Prof) | University of Jaffna |
| 11. | Dr.Ammankili Murugathas (Retired Snr. Prof) | Eastern University, Sri Lanka |
| 12. | Dr.C.Arulmoly (Retired Prof) | Eastern University, Sri Lanka |
| 13. | Dr. K. Rajendram | Eastern University, Sri Lanka |
| 14. | Dr. M. Nadira | Eastern University, Sri Lanka |
| 15. | Mr. C. Sivanayagam | Eastern University, Sri Lanka |
| 16. | Mrs. R. V. Francis | Eastern University, Sri Lanka |
| 17. | Mr. P. Sachithanantham | Eastern University, Sri Lanka |
| 18. | Dr. S. Kesavan | Eastern University, Sri Lanka |
| 19. | Dr. S. Jeyasankar | Eastern University, Sri Lanka |
| 20. | Mrs.S.Maheswaranathan | Eastern University, Sri Lanka |
| 21. | Mr. K. Sathiyasegar | Eastern University, Sri Lanka |
| 22. | Mr. A. J. Hussain | Eastern University, Sri Lanka |
| 23. | Mr. M. Ravi | Eastern University, Sri Lanka |
| 24. | Dr. Jeyapraba Suresh | Eastern University, Sri Lanka |
| 25. | Mr. M. T. M. Rizvi | Eastern University, Sri Lanka |
| 26. | Dr. P. Pretheeba | Eastern University, Sri Lanka |
| 27. | Dr.S.Anuzsiya | South Eastern University of Sri Lanka |
| 28. | Mrs. P. Moses | Eastern University, Sri Lanka |
| 29. | Mr. R. Kiruparajah | Eastern University, Sri Lanka |
| 30. | Mr. S. Jeganathan | Eastern University, Sri Lanka |
| 31. | Mrs.Shanthini Arulanantham | University of Jaffna |
| 32. | Mr. K. Mathiseelan | Eastern University, Sri Lanka |
| 33. | Mr. R. Sahayaseelan | Eastern University, Sri Lanka |
| 34. | Dr.S.Muhunthan | University of Jaffna |
| 35. | Dr.Vigneswary Pavanesan | University of Jaffna |
| 36. | Mrs. J. Anton Arulrajah | Eastern University, Sri Lanka |
| 37. | Mr. G. Vickneswaran | Eastern University, Sri Lanka |
| 38. | Mr. A. Yogarajah | Eastern University, Sri Lanka |
| 39. | Dr. K. Suresh | Eastern University, Sri Lanka |
| 40. | Dr. S. Sivaretnam | Eastern University, Sri Lanka |
| 41. | Dr.Jeyaranjini Gnanathas | Eastern University, Sri Lanka |
| 42. | Mr. S. K. Shivahaneshan | Eastern University, Sri Lanka |

| | |
|---|---|
| 43. Mrs.Dilanthy Thavakumar | Eastern University, Sri Lanka |
| 44. Mr; A. L. M. Mujahid | Eastern University, Sri Lanka |
| 45. Mr. M. B. Fowzul | Eastern University, Sri Lanka |
| 46. Mr. S. Chandrakumar | Eastern University, Sri Lanka |
| 47. Mr. V. Alagaratnam | Eastern University, Sri Lanka |
| 48. Dr.C.Y.Thangarajah | Eastern University, Sri Lanka |
| 49. Mr.K.Gnanaretnam | Open University of Sri Lanka |
| 50. Rev. Fr. A. A. Navaretnam | Eastern University, Sri Lanka |
| 51. Mrs. T. Sachithanantham | Eastern University, Sri Lanka |
| 52. Mr.K.Mohanathasan | Eastern University, Sri Lanka |
| 53. Dr.R.Sarveswara | University of Jaffna |
| 54. Dr.Kalawathy Chandramohan | Open University of Sri Lanka |
| 55. Mr. C. Sasitharan | Eastern University, Sri Lanka |
| 56. Dr. R. Premkumar | Eastern University, Sri Lanka |
| 57. Mr. A. Kanneraj | Eastern University, Sri Lanka |
| 58. Dr.J.S.Rohan Savarimuttu | Eastern University, Sri Lanka |
| 59. Mr. K. Ravichandran | Eastern University, Sri Lanka |
| 60. Dr.T.Pratheepan | Uva Wellasa University |
| 61. Mrs. M.Y.M. Suheera | South Eastern University of Sri Lanka |
| 62. Mr.T.Selvamanoharan | University of Jaffna |
| 63. Mrs. V. Selvanayagam | Eastern University, Sri Lanka |
| 64. Mrs. N. Chenthurran | Eastern University, Sri Lanka |
| 65. Dr. K. Shrikarunaakaran | Eastern University, Sri Lanka |
| 66. Mrs. R. Thakshaayini | Eastern University, Sri Lanka |
| 67. Mrs. G. Luxmykanthan | Eastern University, Sri Lanka |
| 68. Mr. N. Vaman | Eastern University, Sri Lanka |
| 69. Mr. N. Subaraj | South Eastern University of Sri Lanka |
| 70. Mrs.Selvakumari Sivalingam | South Eastern University of Sri Lanka |
| 71. Mr. K. Gukan | Eastern University, Sri Lanka |
| 72. Mr.K.Ketheeswaran | Open University of Sri Lanka |
| 73. Mrs. Vijitha Thivakaran | Eastern University, Sri Lanka |
| 74. Mr. M. Prahasan | Eastern University, Sri Lanka |
| 75. Dr.T.Vivanantharasa | Eastern University, Sri Lanka. |
| 76. Dr. N. Pushparajah | Eastern University, Sri Lanka |

# MESSAGE FROM THE VICE CHANCELLOR



It is with great pleasure and pride I am forwarding this message on the occasion of the Annual Research Session – ARS 2022, organised by the Faculty of Arts and Culture , Eastern University, Sri Lanka under the theme of **"Exploring Contemporary Sri Lankan issues and Redesigning the Future"** which is timely and relevant theme of great consequence will be held on 1st November, 2022.

The Annual Research Session publishes the results of multidisciplinary research covering areas of Contemporary Issues: Governance and Development, Contemporary Challenges in Education, Contemporary Social Issues, Religions and Worship Traditions, History and Personalities, Geography and Environmental issues, Literature & Human Values, Philosophy and Values and Arts and Aesthetics.

Research is a process that, by applying the method of scientific attempts to obtain information relevant and reliable (credible and credit), to understand, verify, correct or apply knowledge. Research is formalized curiosity which creates new knowledge. Therefore, for researchers, it is very useful to frequently attend and present their recent research papers at conferences and seminars, and receive feedback and comments.

I believe that the theme of the ARS 2022 has led the research community in particular within the University to bring forward with technological advancements to overcome the contemporary Sri Lankan issues and redesigning the future. It can be expected that ARS 2022 will provide a platform for all the academic community and other graduates to present their valuable research findings and interact with experts in the sector, peers, and prospective stakeholders towards the contemporary Sri Lankan issues. Also, this will provide a good opportunity to enhance the research culture within the University.

I take this opportunity to thank and congratulate each one of the participants for attending this ARS and the Keynote speaker for sharing their expertise and experience. I sincerely hope that your research findings and dissemination of research knowledge will help us to positively contribute towards the development of Sri Lankan contemporary issues and redesigning the future.

Finally, I take this opportunity to appreciate all dedicated members of the organising committee, academic staff, sponsors and volunteers for their untiring support and contribution for succeeding this ARS 2022.

**Prof. V. Kanagasingam,**
**Vice Chancellor,**
**Eastern University, Sri Lanka,**
**01.11.2022.**

**FROM THE DESK OF THE CHAIR …**



"If you would not be forgotten, as soon as you are dead and rotten, either write things worth reading, or do things worth writing." – Benjamin Franklin

This is true in all the cases, and it is more relevant and effective in the case of the theme of this Annual Research Conference – 2022 of the Faculty of Arts and Culture of the Eastern University, Sri Lanka. The theme is most relevant to the present Sri Lankan context, "Exploring Contemporary Sri Lankan Issues and Redesigning the Future."

Every threat or challenge opens another door of opportunity in many ways, there is no doubt on this. This is what we call from ages as "necessity is the mother of invention." Once we discover the actual cause of the threat or challenge, the solution will be at our feet. Sri Lanka is now undergoing many threats and challenges in many fields, viz. livelihood, education, social setups, etc. in the name of economic crises. Though it is unfortunate to the Nation, whether we like it or not, this situation arrived. It is the time to find new avenues to overcome these challenges and find out new solutions in the form of experiences and research. It is the prime duty of the academia, though a student or a teacher. This conference paws ways to reach this target to reshape and redesign the country and I strongly trust that will help our Nation to come back from the present crises.

Faculty of Arts & Culture, EUSL has its long tradition of disseminating knowledge to the needy, especially to the wider community both across the nation and the globe. One such dissemination is conducting research conferences with the support of the students and staff of the Faculty. Thus, this conference, focusing solutions and suggestions to the present Sri Lankan scenario.

This conference would be a failure, if the organizing team is weak. But I am unable to find mistakes even at micro level, since the organizing team is so strong, energetic, lively, and firm. I congratulate the Coordinator, Secretary, and every member of the organizing committee of this ARS-FAC 2022.

I extend my thanks and appreciation to the EUSL administration, particularly the Vice Chancellor, Bursar, and the Registrar who constantly supported for the successful conduction

of this Annual Research Secession even during this severe economic crisis which directly affects the state universities.

I then extend my sincere gratitude to the Senior Assistant Registrar and every staff of the Office of the Dean of Faculty of Arts & Culture for their constant support in this successful nature of this conference.

I thank each researcher, for, you are the base for this conference who whole heartedly gave your researches to this conference and accepted all the comments without any hesitation that the reviewers pointed out and made all necessary amendments on your writing part. And I sincerely thank all the reviewers who accepted our invitations to review the articles. Reviewing is not a simple process, I know it very well, but you took this task and did your assigned job without any hesitation and within the timeframe.

Finally, I wish all the best for the success of this Annual Research Conference 2022 of the Faculty of Arts & Culture which will definitely show many ways to come out from this present scenario of our great Nation.

**Prof. J. Kennedy,**
**Dean,**
**Faculty of Arts & Culture,**
**Eastern University, Sri Lanka,**
**November 2022.**

## ஆய்வரங்க இணைப்பாளரின் செய்தி



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடம், மனிதப்பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் சார் ஆய்வுகளுக்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளிக்கின்ற அதேவேளை மாற்று ஆய்வுப் புலங்களையும் ஊக்குவிக்கின்றது. இவ்வகையில் கலை கலாசார பீடம் வருடாந்தம் ஆய்வு மாநாடு ஒன்றினை ஒழுங்கமைத்து நடாத்தி வருகின்றது. மேற்குறித்த புலங்களில் புலமைசார் ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பீடு செய்து அவற்றினை அளிக்கை செய்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. அவற்றிலே விசேட கற்கை நெறியினை நிறைவு செய்கின்ற மாணவர்களின் வருங்கால ஆய்வு முயற்சிகளுக்கு வழிப்படுத்தலை முதன்மை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மாநாடு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இன்றைய உலகில் நவீனமான சிந்தனைகளும் புதிய கண்டுபிடிப்புகளும் நாளுக்கு நாள் பல்கிப்பெருகிக் கொண்டு செல்வதனை அவதானிக்க முடிகின்றது. ஐரோப்பிய மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளின் விஞ்ஞானத் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுடன் போட்டி போட்டு முன்னேற்றமடையக் கூடிய சூழல் வளர்முக நாடுகளிடம் வறிதாகவே காணத்தக்கது. அரசியல், பொருளாதாரம், சமூக – சமய நல்லிணக்கம், மொழி, இலக்கியம், புவியியல் முதலிய இன்னோரன்ன துறைகளில் காணத்தக்க பின்னடைவுகள் அனைத்துப் புலங்களிலும் மிகுந்த தாக்கத்தினைச் செலுத்துகின்றன எனலாம். இவற்றினைக் கருத்திற்கொண்டே எமது ஆய்வு மாநாட்டின் தொனிப்பொருள் “ Exploring Contemporary Sri Lanka Issues And Redesigning The Future ” என வடிவமைக்கப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது.

இவ்வாய்வு மாநாட்டினை சிறப்பான வகையில் ஒழுங்கமைப்பதற்கு அனுமதியளித்த உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் அவர்களுக்கு முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் எமது பீடாதிபதி பேராசிரியர் ஜீ.கென்னடி அவர்களது பங்களிப்பு இம்மாநாட்டில் குறிப்பிடற்குரியது. மற்றும் ஆய்வு மாநாட்டிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலோசனை சபையினரும் எமது செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருந்தமை கவனத்திற்கொள்ளத்தக்கது. எமது மாநாட்டின் இதழாசிரியர் திருமதி கௌரி லக்சுமிகாந்தன் செயலாளர் திரு.எம் எல். முஹமட் ஹில்பான் மற்றும் உறுப்பினர்களான திருமதி ஜெ.அன்ரன் அருள்ராஜ், திரு.கோ.குகன், திரு.மா.பிரகாசன், திருமதி.பி.இளங்கோ, திரு.வீ.சசிகரன் ஆகியோரின் காத்திரமான பங்களிப்பினாலேயே இம்மாநாடு குறித்த நாளில் இடம்பெறுகின்றமை முக்கிய அம்சமாகும். அத்துடன் எமது பீடத்தின் சிரேஸ்ட பதிவாளர், உதவி நிதியாளர், ஊழியர்கள் அனைவருக்கும் எமது மாநாட்டுக்குழுவின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கலாநிதி. வ.குணபாலசிங்கம்,**
**வருடாந்த ஆய்வு மாநாட்டு இணைப்பாளர் - 2022,**
**கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

## ABSTRACT OF KEYNOTE ADDRESS

ANNUAL RESEARCH SESSION-2022

### இலங்கை உலகளாவிய தரப்படுத்தலில் குறைந்த வருமானமட்ட நாடு என தரமிறங்கியுள்ளது இதற்கான அவசியமென்ன?



இன்று இலங்கை மக்கள் அமைதி இழந்தவர்களாகவும் போகும் வழி வரைபடம் எதுவும் இல்லாதவர்களாகவும் பொருளாதாரப் பலமற்றவர்களாகவும் அடுத்தவேளை உணவுக்கும் எரிபொருளுக்கும் அடுத்தவரை நம்பியிருக்கும் துர்ப்பாக்கியநிலையில் இருப்பதையிட்டு வெட்கமும் கவலையுமடைகிறோம். இந்நிலையில் பல்வேறு நாடுகளிடமிருந்து வாங்கிய கடன் 51 பில்லியன் அமெரிக்க டொலரையும் அதன் வட்டியையும் திரும்பச் செலுத்தும் வழியறியாமல் இப்போதைக்கு திரும்பச் செலுத்தமாட்டோம் என்று 12-04-2022 அன்று அறிவித்தோம். இதுவே நாம் தரமிறங்க முதற் காரணமாகும். இலங்கையராகிய நாம் இன்று பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளோம். உலக நாடுகளே எங்களுக்கு உதவுங்கள் எம்மக்கள் உண்ண போதுமான உணவில்லை; குழந்தைகளுக்கு போதுமான உணவுமில்லை; போசாக்கான உணவுமில்லை; உணவுப் பாதுகாப்புமில்லை; நோய்வாய்பட்டவர்களுக்கு மருந்து வசதிகளுமில்லை; மக்கள் மூன்றுவேளை உணவும் உண்ணமுடியவில்லை; போக்குவரத்து வசதிகளுக்கு பெற்றோலியத்தைப் பெற போதுமான டொலரும் இல்லை; விவசாயத்துக்குத் தேவையான உள்ளீடுகளும் இல்லை; இளவயதினருக்கு போதிய கல்வி வசதியுமில்லை; ஏனைய உலக நாடுகளெல்லாம் தங்களை ஸ்திரப்படுத்தி முன்னேறிவரும் காலத்தில் எமது நாடு – -8% எதிர்க்கணிய வளர்ச்சிப்போக்கில் கீழ்நோக்கிச் செல்கிறது. இதனால் இலங்கையை நடுத்தர வருமானமட்டத்தில் இருந்து தரம் இறக்கி குறைவருமான மட்ட நாடு எனக் கருதப்படவேண்டுமென இன்றைய ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க அமைச்சரவையைக் கோரினார்.

பொருளாதார நிபுணர் உமேஸ்பொரமுதலி நடுத்தர வருமானம் கொண்ட நாடென உலக வங்கி வழங்கிய அந்தஸ்த்தை அரசாங்கம் மாற்றமுடியாது. ஆனால் அவ்வாறான மாற்றத்தைக்கோர முடியும் என்றார்.

இந்தநிலையில் சந்தை நிபந்தனைளின் அடிப்படையில் கடன் தகுதியினை சலுகை நிதி தேவை மற்றும் இலகுகடன் சேவை வசதி ஆகியவற்றின் அடிப்படையில் அரசாங்கம் உலகவங்கி குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. இக்கோரிக்கை தற்போது பரிசீலனையில் உள்ளதாக உலகவங்கி தெரிவித்துள்ளது.

ஒரு நாட்டின் கடன் தகுதியினை கருத்திற் கொண்டு உலகவங்கி கடன் வழங்குகிறது. எனினும் இக்கடன்கள் வழங்கப்பட்டால் இக்கடனின் இறுதிசெயல்திறன் அளவீட்டுத் தரவைப் பெற திட்டத்தின் முன்னேற்றம், விளைவுகள், பயனாளிகள் மீதான தாக்கங்கள் ஆகியவை முழுவதும்

கண்காணிக்கப்படுகிறது. அதன் பின்னர் இறுதி முடிவுகள் எதிர்பார்த்த முடிவுகளுடன் ஒப்பிடப்படுகின்றது.

உலக வங்கி தனிநபர் மொத்த தேசிய வருமானத்தைப் பொறுத்து நாடுகளை பல்வேறு வருமானக் குழுக்களாக வகைப்படுத்துகிறது. குறைந்த வருமானம் கொண்ட நாடு என்ற நிலைக்கு தள்ளப்பட்ட இலங்கையின் தனிநபர் வருமானம் 1085 அமெரிக்க டொலர்களாக குறையவேண்டும். பொருளியலாளர்களின் மதிப்பீட்டில் இது சாத்தியமற்றது. இலங்கையைத் தரமிறக்கினால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து மக்கள் பட்டினியால் வாடநேரும் என்று பொருளியல் விமர்சகரான சாயுதம்சிங் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் தரப்படுத்தலின்படி குறைந்த வருமான நாட்டின் தனிநபர் வருமானம், 1085 டொலர் மற்றும் அதைவிடக் குறைவான வருமானம் குறைவருமான நாடென்றும், குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாட்டின் தனிநபர் வருமானம் 1086 முதல் 4255 டொலர் என்றும், உயர் நடுத்தர தனிநபர் வருமானம் கொண்ட நாடு 4256 முதல் 13225 டொலர் கொண்டதாகவும், உயர் வருமானம் கொண்ட நாட்டில் தனிநபர் வருமானம் 13226 டொலரும் அதற்கு மேற்பட்டதாக இருக்கும் என வகைப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இலங்கை குறைந்த வருமானமட்ட நாடு என்ற நிலைக்குத் தரம் இறங்குவதற்கு யார் காரணம்? அரசாங்கமும் அரசியல்வாதிகளும் தான் என்றால், இதிலிருந்து மீட்டெடுக்க திட்டமிடவேண்டியவர்களும் அவர்களே. அவர்களின் ஊழல் செயற்பாடும் முறையற்ற நிர்வாகமும் முறையற்ற நிதி முகாமைத்துவமுமே காரணமென நெருக்கடிக் கால ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இலங்கை அன்னியராட்சியிலிருந்து விடுபட்ட பின்னர் சுதந்திர இலங்கைக்கான புதிய பொருளாதாரக் கட்டமைப்பை ஏன் உருவாக்கவில்லை? அன்றைய அரசியல்வாதிகள் அரசியல் அதிகாரத்தில் மோகங் கொண்டிருந்தனர். புதிய இலங்கைக்கான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்காது பிரித்தானியர் விட்டுச்சென்றதை தொடர்வதாகவே இருந்தனர். இதுவே இன்றைய நெருக்கடிக்கு தோற்றுவாயாக அமைந்தது. பிரித்தானியர் ஆட்சியிலிருந்து விடுபட்ட இந்தியா சுதந்திரமடைந்ததோடு தூர நோக்கோடு தமக்கென ஒன்பது ஐந்தாண்டு பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தை முன்னிறுத்தி பொருளாதாரத்தை முன்கொண்டுசென்றது. இலங்கை பெருந்தோட்ட பொருளாதாரத்தை மாத்திரம் நம்பி பொருளாதாரச் செயற்பாடுகளை தொடர்ந்தது. இலங்கை தன்னை மாற்றாமல் தொடர்ந்தும் உலகப் பொருளாதாரத்தில் தங்கியிருக்கும் நாடாக இருந்தது. தனது வளத்தை மையமாகக் கொண்ட சுயசார்புப் பொருளாதாரத்திற்குத் தன்னைத் தயார்ப்படுத்தவில்லை. பெருந்தோட்ட ஏற்றுமதிப் பொருளாதாரமாக தொடர்ந்தது. இதனால் எப்போதும் வெளிநாட்டு அதிர்வுகளை எதிர்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இன்று குறை வருமானமட்ட நாடு என அறிவிக்கும்படி அமைச்சரவைக்கு பிரேரணை சமர்பிக்குமளவிற்கு உலகளாவியரீதியில் தரம் தாழ்த்திக்கொண்டுள்ளது. இதற்கான பின்னணியை நோக்குவது அவசியமாக உள்ளது. இன்று ஏற்பட்டுள்ள சமூக, அரசியல், பொருளாதார நெருக்கடியும், அதன்வழி வந்த இளைஞர் அமைதியின்மைக்கும் அரசாங்கத்தின் பிரதம மந்திரியும் மேன்மைதங்கிய ஜனாதிபதியும் பதவி விலகுமளவிற்கு ஏற்பட்ட நெருக்கடி முன்னைய கால நெருக்கடிகளின் திரண்ட விளைவாகும். இந்நிலையில் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது இலங்கைப் பொருளாதாரத்தை

வழிப்படுத்திய அரசியல் மற்றும் அரசியல்வாதிகளின் வகிபாகம்பற்றி நுணுக்கமாக ஆராய்வது இச்சந்தர்ப்பத்தில் அவசியமாக உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியின்பின் ஜனநாயக அரசாங்கத்தை கையகப்படுத்திய நான்கு பிரபுத்துவ குடும்பங்கள் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு வகைசொல்ல வேண்டியவர்களாக உள்ளனர் என பாராளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதி டலஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டினார்.

1 D.S சேனநாயக்க குடும்ப ஆட்சி

2 பண்டாரநாயக்க குடும்ப ஆட்சி

3 ஜெயவர்த்தன குடும்ப ஆட்சி

4 ராஜபக்ச குடும்ப ஆட்சி

இன்றுள்ள அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளை தீர்க்க அரசியல் பொருளாதார சமூக மாற்றம் ஒன்று அவசியம் என்பதை முதன்மைப்படுத்தி எல்லாக் கட்டமைப்பும் முறைமைகளும் மாற்றமுறுதல் வேண்டுமென்ற கோரிக்கை மாற்றத்தை முன்னிறுத்தும் மக்களிடமிருந்தும், எதிர்கால சந்ததியை பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர்களிடமிருந்தும் இடையறாது எழுந்துள்ளது

**பேராசிரியர் வி பி சிவநாதன்,**
**ஓய்வுநிலைப் பேராசிரியர்,**
**பொருளியற்றுறை,**
**கலைப் பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## உள்ளடக்கம்

## Contemporary Issues: Governance and Development

1. தொழிலாளர் சம்பளத்தில் கல்வி மற்றும் அனுபவத்தின் விளைவு (கொழும்புத்துறை J/62 கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்டது) 01
**குணசாயினி மகேந்திரன்**
2. The Green Tourism Role in the Hospitality Industry: A Systematic Literature Review 02
**Vinoja Sridharan, Kamalakumari Karunaanithy**
3. Women's Informal Employment In Sri Lanka: An Empirical Analysis 03
**Navaratnam Balamurali**
4. கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமை முகாமைத்துவ ஜனாதிபதி செயலணியும் அது மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் பேசும் மக்களின் அடையாளத்தில் ஏற்படுத்திய தாக்கங்களும்: ஓர் விமர்சன நோக்கு 04
**மாதங்கி உதயகுமார், அ. கண்ணேராஜ்**
5. இலங்கையின் முஸ்லிம் தனியார் சட்டமும் அதன் அண்மைக்கால போக்கும்: விஷேட ஆய்வு நிந்தவூர் காதி நீதிமன்றம் 05
**தாஜுதீன் முஹம்மது முபாஸ், செ.சிவநாயகம்**
6. அடிப்படை உரிமை மீறல்கள் - மலையக சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு 06
**புளோரிடா சிமியோன்**
7. முரண்பாடுகளை தீர்ப்பதில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் வகிபங்கும் தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் அதன் நடைமுறையும்: ஓர் இஸ்லாமிய சட்டவியல் நோக்கு 07
**அ.ஜ.முஹம்மட் அஸ்லம், முஹம்மது ஹனீபா முஹம்மது நைறூஸ், இக்பால் சௌஜான்**

## Contemporary Challenges in Education

8. கனிஷ்ட இடைநிலை வகுப்புக்களில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் பெற்றோரின் பங்களிப்பு (பட்டிருப்பு வலய, மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்ட 1AB, 1C, வகை - 2 பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு 08
**யோ.அகல்யா, செ.அருள்மொழி**
9. இடர்கால சூழலில் பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்கள் எதிர்கொள்ளும் முகாமைத்துவச் சவால்கள் 09
**கனகசுந்தரம் குவேந்திரா, செ.அருள்மொழி**
10. Covid – 19 காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்கள் 10
**வே.லமினா, ரா.தக்ஷாயினி**

11. க.பொ.த (சா/த) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் வீட்டுச் சூழலின் பங்களிப்பு 11
**டி. விதுக்ஷனா**

12. பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் செல்வாக்கு (ஏறாவூர் கோட்டப் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு) 12
**முகமட் உசனார் நவ்பர்காந்**

13. நிகழ்நிலைக் கற்பித்தலினால் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் 13
**சங்கர் மீருஜா**

## History and Personalities

14. திருகோணமலை -மட்டக்களப்பு இயேசு சபை ஆயர்களும் அவர்கள் சேவைக் காலத்தில் எதிர்நோக்கிய சவால்களும் 14
**தனுகா யோகநாதன், நிலாந்தினி செந்தூரன்**

15. நவீன வானியல் துறையில் ஈழத் தமிழரின் முதல் வழிகாட்டி பேராசிரியர் அலன் ஆபிரகாம் 15
**ரமேஷ் பென் டில்கரன்**

16. நாயக்க மன்னர்களில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் - ஓர் வரலாற்று ஆய்வு 16
**தனுஷா மோகனதாசன், நிலாந்தினி செந்தூரன்**

17. மந்துவில் கிராமம் - ஒரு வரலாற்று நோக்கு 17
**கமலநாதன் நிரோஜினி, சி.கி.சிவகணேசன்**

18. ஐரோப்பியர் காலக் கல்லறைகளும் கல்வெட்டுக்களும் - ஒரு ஆவணப்படுத்தல் (ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தை மையப்படுத்தியது). 18
**சந்தியோமயர் சதீஸ்குமார், சி.கி.சிவகணேசன்**

19. மட்டக்களப்பு சைவத் தமிழ் அறிஞர் வித்துவான் ச.பூபாலபிள்ளை ஓர் ஆய்வு 19
**ருஜானி நிமலேஸ்வரன்**

## Contemporary Social Issues

20. கொவிட்-19 பெருந்தொற்றுநோயின் போதான குடும்ப வன்முறை மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருளாதாரக் காரணிகள்: யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வரணிக் கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு 20
**ஞா.சார்த்திகா**

21. கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் வாழ்கின்ற மாற்றுத்திறனாளர்களின் சமூக ஓரங்கட்டப்படுதலை மையப்படுத்திய ஓர் சமூகவியல் ஆய்வு 21
**துரைராசா யுஜந்தன்**

22. நவீனமயமாதல் செயன்முறையும் சுதேசிய பழங்குடிகளின் வாழ்வியல் மாற்றங்களும் - அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பிரதேசத்தை மையப்படுத்திய சமூக மானிடவியல் ஒப்பீட்டாய்வு 22
**சு.சதுர்சிகா, கு.விக்னேஸ்வரன்**

23. இளவயதுத் திருமணத்திற்கான காரணங்களும், அதன் தாக்கங்களும்: இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்களை மையப்படுத்திய ஒரு சமூகவியல் ஆய்வு 23
**இக்பால் சௌஜான், ராஸிக் அஹ்மட் சர்ஜுன், கன்சூல் கரீம் பாத்திமா நஸ்மா**

24. சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதார ஆபத்துக்கள்: வவுனியா மாவட்டத்தின் நகரசபை மற்றும் பிரதேச சபைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு 24
**பா.பிரசாந்தி, சி.சிவகாந்தன்**

25. மீனவர்களின் தொழில்சார் ஆரோக்கியம், வாழ்க்கைப்பாணி மற்றும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை: குச்சவெளி பிரதேச செயலகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு 25
**சா.மதுஷா, சி.சிவகாந்தன்**

## Arts and Aesthetics

26. ஆற்றுகைப் பண்பும் காட்சி நிலையும்: பாரதியின் குயில் பாட்டினை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு 26
**கு.ரவிச்சந்திரன், கா.அற்புதன்**

27. தமிழர் பாரம்பரிய தோல்வாத்தியங்களான மத்தளம், பறை, உடுக்கை உருவாக்க முறைமையும் அதன் தொழிநுட்பங்களும் - ஓர் ஆய்வு 27
**கு.ரவிச்சந்திரன், சு.சஞ்சீபன்**

28. சி.மௌனகுருவின் நாடகங்களிலும் ஆற்றுகைகளிலும் பௌராணிகத் தொன்மங்கள் 28
**செ.வெவோகா, சாந்தி கேசவன்**

29. Cooking as a public performance - A study based on “Ezhuththani” play 29
**R.Sulaxshana**

30. வவுனியா பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் பற்றிக் (Batik) உற்பத்தியினை பயிலுவதன் ஊடாக அதன் அழகியல் வடிவமைப்புக்களில் தமிழர் மரபுசார் வடிவமைப்புக்களை வெளிப்படுத்தல் 30
**சதாசிவம் மகிலினி, துஷ்யந்தி சத்தியஜித்**

## Religions and Worship Traditions

31. பெரியதம்பிரான் சடங்காற்றுகையில் ஏற்பட்ட மாற்றங்கள்: மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு 31
**சு.சந்திரகுமார், கு.மதுசாந்**

32. இந்துப் பாரம்பரியத்தில் ஓலைச்சுவடி - ஆரையம்பதி பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 32

**வரதராசா வஷ்மியா, சாந்தி கேசவன்**

33. கதிரவெளி வதனமார் வழிபாட்டு முறைகளும், சமூக வழமைகளும் 33

**உ. ஜீவதர்சன்**

34. கதிரவெளிப் பெரியசுவாமி கோயில் வழிபாட்டு மரபுகளும், மாற்றங்களும் 34

**அ.தனோஜன்**

35. பத்தாசிசார் வழிபாட்டுப் பாடல்கள் பிரதிபலிக்கும் இந்து சமயப் பண்பாட்டம்சங்கள் 35

**கிருபைரெத்தினம் சர்வேஸ்வரன்**

36. மட்டக்களப்பு இந்துக்களின் வழிபாட்டில் குலக்குறியம் 36

**கோ.ஆரணி, ந.சுபராஜ்**

## Geography and Environmental issues

37. Discourse Study Conducted on Illegal Sand Mining in Sri Lanka 37

**Kaushalya. G. N, Liyanage. D. L. N. P, Jayawardene. K. J. A. C. M**

38. பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவில் நிலச்சரிவு அனர்த்தம்: ஓர் இடரீதியான நோக்கு 38

**டேனியல் காமதேனு கிறிஸ்டினா, செ.வசந்தகுமாரி**

39. கினிகத்தேனை கிராம சேவகர் பிரிவு எதிர்நோக்கி வரும் சூழலியல் பிரச்சினைகள் 39

**ஆ.மோகனதர்ஷினி**

40. வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் காணப்படும் சூழலியல் பிரச்சினைகளும் அவற்றை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளும் 40

**தேவசகாயம் என்டன் சகாயராணி**

## Literature & Human Values

41. நந்தினிசேவியரது சிறுகதைகள் : உள்ளடக்கம், உருவம் பற்றிய ஆய்வு 41

**அரியநாயகம் சிவரூபினி, நதிரா மரியசந்தனம்**

42. சடங்குப் பாடல்கள் வெளிப்படுத்தும் இலக்கியச் சிறப்புக்கள் - ஆரையம்பதி பிரதேசத்தில் பயில்நிலையிலுள்ள சடங்குப் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 42

**கஸ்தூரி சர்வேஸ்வரன், சி.சந்திரசேகரம்**

43. சைவசித்தாந்த சிந்தனைகள் தொடர்பான ஆய்வுகள் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆய்வரங்க கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டது. 43

**தி.குறிஞ்சி**

44. சைவ சித்தாந்தம் மற்றும் கிறிஸ்தவ வேதாகமம் கூறும் ஆன்மா எனும் எண்ணக்கரு: ஓர் ஒப்பீட்டு ஆய்வு 44

**சித்திரவேல் மேரி ஆஞ்சலா, சோ.ஜெகநாதன்**

45. இலங்கை முஸ்லிம்களின் சமய, சமூக எழுச்சிக்கு மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் - ஒரு வரலாற்றுப் பார்வை 45
**ஏ. ஜ.ஃ.பர் ஹுஸைன்**

## Philosophy and Values

46. பெண் ஏன் அடிமையானாள்?, இரண்டாம் பாலினம் (The Second Sex) ஆகிய நூல்களின் நோக்கில் பெண் விடுதலை - ஒரு பெண்ணிய மெய்யியல் ஒப்பீட்டாய்வு 46
**சந்திரபோஸ் பபிதாதர்ஷி, இரத்தினசபாபதி பிரேம்குமார்**

47. திருக்குறளிலும் நாலடியாரிலும் நட்பு எனும் எண்ணக்கரு – ஒரு தத்துவார்த்த ஒப்பீட்டு ஆய்வு 47
**அ.அணேஜா**

48. சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற மாற்றீட்டுத் தண்டனை ஏற்பாட்டினால் சிறு குற்றமிழைத்தோர் எதிர்நோக்கும் சமூகத்தாக்கம் - மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசங்களை மையப்படுத்திய ஓர் ஒழுக்கவியல் ரீதியான ஆய்வு 48
**சபேசன் சஜிதா, முனியாண்டி ரவி**

49. குடும்ப பிரச்சினைகளும் தீர்வுகளும் - ஒரு குடும்ப உளவளத்துணை நோக்கு களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப்பிரிவை மையப்படுத்திய ஆய்வு 49
**சுரேஸ்குமார் யுகானா, சோ.ஜெகநாதன்**

50. கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் பிரச்சினைகள்- உளவியல் நோக்கு மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவை மைப்படுத்திய ஆய்வு 50
**பவளசிங்கம் சசித்தா**

# தொழிலாளர் சம்பளத்தில் கல்வி மற்றும் அனுபவத்தின் விளைவு (கொழும்புத்துறை J/62 கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்டது)

குணசாயினி மகேந்திரன்
பொருளியற்றுறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
sayinimahendran@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

நன்கு கல்விகற்ற மற்றும் விசேட நுட்பத்தினை கொண்ட சனத்தொகையே அறிவினைத் திரட்ட, பரப்ப, பயன்படுத்த, உருவாக்க மிகவும் அவசியமானதாகக் கருதப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் கல்வியானது பாடநூலை மையமாகக் கொண்டிருக்கும் நிலையில் மனித மூலதன உருவாக்கமானது அவர்களது சம்பளத்தினை அதிகரிக்கின்றதா? என்பது கேள்விக்குரியதாகும். இதனைக் கருத்திற் கொண்டு கொழும்புத்துறை J/62 கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட தொழில்புரியும் நபர்களின் சம்பளத்தின் மீது மனித மூலதனத்தின் தாக்கத்தினை மையப்படுத்திய இவ்வாய்வினூடாக மனித மூலதனத்தின் கூறுகளில் ஒன்றான கல்வி தொழிலாளர் சம்பளத்தில் எதிர்க்கணிய தாக்கத்தினையும் அனுபவமானது நேர்க்கணியத் தாக்கத்தினையும் ஏற்படுத்துவதனைக் காணமுடிகின்றது. சம்பளத்தின் மீது கல்வி மற்றும் அனுபவத்தின் தாக்கம் தொடர்பாக ஆய்வு செய்வதற்கு 104 தொழில்புரியும் நபர்கள் படைமுறை மாதிரி எடுத்தலின் அடிப்படையில் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்து தரவுகள் திரட்டப்பட்டு தரவுகளானவை இணைவுக்குணகப் பகுப்பாய்வு, பிற்செலவு பகுப்பாய்வு, சிதறல் வரைபடம், விபரணப் பகுப்பாய்வு போன்றவற்றின் மூலம் Ms Excel, SPSS (சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளிவிபரவியல் பொதி) கணினி மென்பொருளினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பிற்செலவு பகுப்பாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின்படி ஆய்வுப் பிரதேசத்தில் தொழிலாளர்களுடைய கல்விகற்ற ஆண்டுகள் அவர்களுடைய சம்பளத்துடன் எதிர்க்கணிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றது. அதாவது 1% பொருண்மை மட்டத்தில் கல்வி கற்ற ஆண்டானது ஒரு ஆண்டினால் அதிகரிக்கும்போது சம்பளமானது 1670.1 ரூபாவால் குறைவடைகின்றது. அவர்களது அனுபவம் சம்பளத்துடன் நேர்க்கணியத் தொடர்பினைக் கொண்டுள்ளது. அதாவது 1% பொருண்மை மட்டத்தில் அனுபவ ஆண்டானது ஒரு ஆண்டினால் அதிகரிக்கும்போது சம்பளமானது 421.4 ரூபாவால் அதிகரிக்கின்றது. எனவே கல்வி கற்ற ஆண்டுகளானது மனித மூலதனத்தினை விருத்தி செய்து அவர்களது சம்பளத்தினை அதிகரிப்பதற்குப் பதிலாக குறைந்த கல்வியாண்டைக் கொண்டவர்கள் அதிக சம்பளத்தினை பெற வழிவகுக்கின்றமையானது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரையில் பாடப்புத்தக அணுகுமுறைக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்காது செயல்முறைக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி மாணவர்களது புதிய சிந்தனை மற்றும் அறிவுருவாக்கம் போன்றவற்றினை அதிகரிப்பதற்கு தூண்டுதல் வழங்காமையே இதற்கு காரணமாகும். இலங்கையின் தொழிற்சந்தை தேவையை சந்திப்பதற்கான உயர் கல்வியானது சமகால தொழில்நுட்ப மாற்றங்களை உள்வாங்கக்கூடிய வகையில் தரமுயர்த்தப்படுவதன் மூலம் அவர்களின் எதிர்கால சம்பளத்தினை அதிகரிக்கச் செய்து நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளிடையே மீண்டெழும் தன்மையைக் கட்டியெழுப்பி பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய வகையில் மனித மூலதன விருத்தியானது காணப்பட வேண்டும் என்பதனைக் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

**திறவுச் சொற்கள்:** கல்வி, சம்பளம், மனித மூலதனம், அனுபவம், கொழும்புத்துறை

# The Green Tourism Role in the Hospitality Industry: A Systematic Literature Review

Vinoja Sridharan[1], Kamalakumari Karunaanithy[2]
[1,2]Department of Economics, Faculty of Arts, University of Jaffna, Jaffna, Sri Lanka
[1]sridharanvinoja23@gmail.com, [2]kkamal@univ.jfn.ac.lk

## Abstract

This study is to distinguish the elements and trends and bring out the apparent benefits and challenges related to green tourism initiatives in the hospitality industry. This study is based on analyzing a total of 50 articles directing attention to the green tourism role in the hospitality industry, published between 1998 and 2022. The current study reveals four themes: the elements and trends and the apparent benefits and challenges related to green tourism initiatives in the hospitality industry. Since the study is based on a literature survey, the systematic literature review was used as a methodology to address the research questions- what are the elements and trends, and what are the benefits and challenges related to green tourism initiatives in the hospitality industry? As found in the literature survey the most important elements of green tourism in the hospitality industry featured: ecological obligation protection, local economic essentialness, cultural variety, and experiential lavishness. The current trend identified in the literature is green tourism initiative: it gives an important happenstance to guests while getting to the next level of personal satisfaction and safeguarding the local area; it has a significant instructive part as an opportunity to learn respect for nature and local culture; provides a chance for some self-reflection propelled by the excellence of the environmental factors; also benefits the local area (recruiting staff locally obtaining neighborhood produce, local contributions in navigation, and sorting out the tourism activities). The benefits identified in the literature were decreasing ecological effects, financial contemplations, competitive advantage, brand recognition, company image, and other benefits, namely, helping public relations, individual moral obligation, and political contemplations. The internal and external challenges in the hospitality industry are an absence of respondent information, the apparent cost of applying or enrollment, a lack of time, and the amount of work involved in compliance. Moreover, the researcher proposes some suggestions in the tourism sector area to feature the significance of the green and sustainable tourism sector.

**Keywords**: eco-friendly, environmental factors, green tourism, hospitality industry, sustainability

# WOMEN'S INFORMAL EMPLOYMENT IN SRI LANKA: AN EMPIRICAL ANALYSIS

Navaratnam Balamurali
Department of Social Studies, Open University of Sri Lanka, Nugegoda, Sri Lanka
nbala@ou.ac.lk

**Abstract**

The study of labour force participation in the informal sector is very useful for implementing and formulating employment opportunities and human resource development policy programs. This study analyses the determinants of informal employment with a special focus on women by analyzing the factors associated with the probability of women's participation in informal employment. We used Sri Lankan Labour Force Survey micro level data set in 2019, employing multinomial logistic regression modelling to investigate differential impacts of socio-economic determinants of informal employment. It was identified that informal employment in formal sector is not recognized in national statistics, but attached to the formal sector instead. 38 percent of informal employment in the formal sector is performed by women. Also, it was found that most males and females in the informal work are married. With reference to the probability of employment, contrary to what is found in most developing countries, in Sri Lanka women are less likely to participate in informal economy compared to non-participant men. Compared to non-participant married women, never married women are more likely to be informally employed. Although widowed women were less likely to participate in the informal economy, divorced and separated groups were more likely to do so, which was also the case for overall female heads of household. While negative relationship was found between the probability of female participation in the informal economy and the age category, more education and literacy in at least two languages including English are found to be reducing the likelihood of women's participation in informal employment which is also what one finds with regards to men. All in all, this study emphasizes the importance of identifying informal employment in formal sector in national statistics and of concentrating on education, literacy, and female-heads of household - particularly the ones who are divorced and separated- in programs aimed at improving the employment conditions of women.

**Keywords:** Informal employment, Labour force survey, multinomial logistic regression

# கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமை முகாமைத்துவ ஜனாதிபதி செயலணியும் அது மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பேசும் மக்களின் அடையாளத்தில் ஏற்படுத்திய தாக்கங்களும்: ஓர் விமர்சன நோக்கு

மாதங்கி உதயகுமார்,[1] அ. கண்ணேராஜ்[2]
[1,2]சமூக விஞ்ஞானங்கள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]mathangielizabath@gmail.com, [2]kanneraja@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

2019இல் அதிகாரத்துக்கு வந்த கௌரவ கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் நாட்டின் அரசியலமைப்பின் உறுப்புரிமை 33 இற்கமைய கிழக்கு மாகாணத்திற்கான தொல்பொருள் மரபுரிமை முகாமைத்துவ ஜனாதிபதி செயலணியொன்றை அமைத்தார். இந்த செயலணி அமைக்கப்பட்டது முதல் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியது. அத்துடன் இது தனது செயற்பாடுகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பித்தபோது மாவட்ட மக்களிடையே பல்வேறு வகையான பதற்ற நிலைமைகளையும், அமைதியின்மைகளையும் ஏற்படுத்தியிருந்தது. இவ்வாறான செயற்பாடுகள் மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களது உரிமைகளை மீறுவதாகவும், பாதுகாப்பற்ற நிலைமைகளை ஏற்படுத்துவதாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த வகையில் மேற்படி செயலணியின் தோற்றமும், அதன் செயற்பாடுகளும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பேசும் மக்களது அடையாளங்களில் தாக்கம் செலுத்தி உள்ளதா? என்பதை ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இவ்வாய்விற்காக முதல்நிலைத் தரவுகளும், இரண்டாம்நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக மாவட்டத்தின் முக்கிய அரசியல் தலைமைகள், அரச அதிகாரிகள், தொல்லியல் தொடர்பான ஆர்வலர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்றோர்கள் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டனர். அதன் மூலம் இச்செயலணியின் உள்நோக்கங்கள் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாகவும், அதனால் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் எதிர்நோக்கிய அசௌகரியங்கள் தொடர்பாகவும் தகவல்கள் திரட்டப்பட்டன. திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும், அவதானிப்புகள் மற்றும் அனுமானங்கள் ஊடாகவும் ஆய்வின் முடிவுகள் பெறப்பட்டன. ஆய்வின் முடிவுகளாக இச்செயலணியின் உருவாக்கத்திற்கான பல மறைமுக நோக்கங்கள் காணப்படுகின்றமையையும், மத ரீதியாக, மொழி ரீதியாக, வதிவிட ரீதியாக தமது சுதந்திரம் மறுக்கப்படுகின்றமையும், தமிழ் பேசும் மக்களது அடையாளங்கள் சிதைக்கப்படுவதையும் அறிய முடிந்தது. அதேவேளை மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பிரதேசங்களை இலக்கு வைத்தே தொல்பொருள் செயலணியின் செயற்பாடுகள் அமைந்திருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

**திறவுச் சொற்கள்:** கிழக்கு மாகாணம், தொல்பொருள் அடையாளங்கள், ஜனாதிபதி செயலணி, தமிழ் பேசும் மக்கள், சிறுபான்மையோர் உரிமைகள்

# இலங்கையின் முஸ்லிம் தனியார் சட்டமும் அதன் அண்மைக்கால போக்கும்: விஷேட ஆய்வு நிந்தவூர் காதி நீதிமன்றம்

தாஜுதீன் முஹம்மது முபாஸ்[1], செ.சிவநாயகம்[2]
[1,2] சமூக விஞ்ஞானங்கள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]mufasnmohamed@gmail.com, [2]sivac69@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

பல்லின மக்கள் வாழும் இலங்கை நாடானது பல்வேறு சட்ட முறைமையை கொண்டுள்ளது. இவற்றுள் முஸ்லிம் தனியார் சட்டத்தின் அண்மைக்காலப் போக்கானது பல்வேறு விமர்சனங்களைக் கொண்டு காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக முஸ்லிம் தனியார் சட்டம் நீக்கப்பட்டு பொதுச் சட்டத்தின் கீழ் முஸ்லிம்களின் விவாக, விவாகரத்துத் தொடர்பான விவகாரங்களைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் அண்மைக்காலமாக இச்சட்டத்தை நீக்க வேண்டுமென்பதற்காக முன்வைக்கப்படும் பிரதான வாதங்களில் ஒன்றுதான் முஸ்லிம் தனியார் சட்டத்தினால் பெண்களுக்கு உரிய நீதி கிடைப்பதில்லை என்ற வாதமாகும். அதனை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் தனியார் சட்ட ஏற்பாடுகள் மற்றும் காதி நீதிமன்றம் தொடர்பாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்கலாம். முஸ்லிம் தனியார் சட்ட ஏற்பாடுகள் என்னும் போது திருமண வயது, பெண்கள் கையொப்பம், பலதாரமணம், காதி நீதிமன்றம், பெண் காதி நீதிபதிகள், பதிவு முறைகளிலும் மற்றும் விவாகரத்தின் போதான தீர்ப்புக்களால் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்கண்டு அவற்றை தீர்த்துக்கொள்வதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக முஸ்லிம் தனியார் சட்டத்தினை முற்றாக நீக்குவதனை விட இச்சட்டங்கள் மூலமான விமர்சனங்களை இனங்கண்டு முஸ்லிம் பெண்களினுடைய ஜனநாயக உரிமைகளை வலுப்படுத்தும் நோக்கில் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது பொருத்தமானதாக அமையும். இச்சூழ்நிலையினை விளங்கிக் கொள்வதற்காக நிந்தவூர் பிரதேச காதி நீதிமன்றத்தினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவதுடன் முதலாம் நிலைத் தரவுகளாக வினாக்கொத்து, நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளாக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் பகுப்பாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** முஸ்லிம் தனியார் சட்டம், காதி நீதிமன்றம், முஸ்லிம் பெண்கள், காதி நீதிபதி

# அடிப்படை உரிமை மீறல்கள் - மலையக சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

புளோரிடா சிமியோன்
சமூக விஞ்ஞானங்கள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
floridasimeon18@gmail.com, floridas@esn.ac.lk

**ஆய்வு சுருக்கம்**

கி.பி.1820-1840 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இந்தியாவின் தென்மாநிலத்திலிருந்து இலங்கை பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக ஆங்கிலேயரால் அழைத்து வரப்பட்ட இந்திய வம்சாவளி மக்களே இன்றைய மலையகத் தமிழர்கள் ஆவர். இவர்கள் இன்று நாட்டின் மொத்த சனத்தொகையில் 5.3% ஆக குடியேறி வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் இம்மலையக சமூகம் 200 வருட காலத்தை கடந்தவிட்ட நிலையில் நீண்ட காலமாக இவர்கள் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் நிர்வாகப் பொறிமுறையிலிருந்து ஓரங்கட்டப்பட்டு வந்துள்ளதுடன் தோட்ட முகாமைத்துவத்தின் கட்டுப்பாடுகளுக்குட்பட்ட வாழ்க்கை முறையினையே கொண்டிருக்கின்றனர். இலங்கையில் தேசிய ரீதியான அபிவிருத்தி அடைவுமட்டங்களில் உரிமை மறுக்கப்பட்டவர்களாக பொதுச்சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பாரபட்சமாக நடாத்தப்படுகின்ற ஓர் இனக்குழுவாக காணப்படுகின்றனர். இது சர்வதேச மனித உரிமை சட்டங்களையும் அது தொடர்பான ஏற்பாடுகளையும் மீறும் ஒரு செயற்பாடாகக் கருதப்படுகிறது. இத்தகைய பின்னடைவான நிலையில் அபிவிருத்தி மட்டத்தினை எட்டுதல் வேண்டும் என்பது காலத்தின் தேவையாக காணப்படுகின்றது. ஆகவேதான் இவ்வாய்விற்கான தகவல்கள் முதலாம்தர மற்றும் இரண்டாந்தர தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளன. முதலாந்தர தரவுகள் பெருந்தோட்ட மக்களை அதிகளவில் பிரதிநிதித்துவபடுத்தும் பிரதேச சபைகளிலிருந்து நோக்க மாதிரியெடுப்பு மூலம் தெரிவுசெய்யப்பட்ட பிரதேச சபையை மையப்படுத்தி பெறப்பட்டவையாகும். மேலும் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் நிர்வாக மட்டங்களில் மலையக மக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுவதனை கோட்பாட்டுத் தளங்களையும் நடைமுறை அனுபவங்களையும் மையப்படுத்தி மனிதவுரிமை ஆய்வியல் நோக்கில் உரிமை மீறல்களையும் அதற்கான தீர்வுகளையும் முன்மொழிவையும் சிபாரிசு செய்ய இவ்வாய்வு முனைகின்றது.

**திறவுச் சொற்கள்:** மனித உரிமை, மலையக மக்கள், சட்டங்கள், அபிவிருத்தி, பொதுச்சேவை

# முரண்பாடுகளைத் தீர்ப்பதில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் வகிபங்கும் தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் அதன் நடைமுறையும்: ஓர் இஸ்லாமிய சட்டவியல் நோக்கு

அப்துல் ஜப்பார் முஹம்மட் அஸ்லம்[1]*, முஹம்மது ஹனீபா முஹம்மது நைறூஸ்[2], இக்பால் சௌஜான்[3]
[1,2,3]இஸ்லாமியக் கற்கைகள் துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்
*ajaslam345@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் நாளுக்கு நாள் பிரச்சினைகளும் மோதல்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன. இவ்வாறு இடம்பெறும் மோதல்கள் தனிநபர், இனக்குழுக்கள், சமூகம், நாடு என வியாபித்துச் செல்கின்றமையை அவதானிக்க முடியும். மறுபுறம் மோதல் முரண்பாட்டுத் தீர்வு, மத்தியஸ்தம் தொடர்பான புதிய கற்கைகள் போன்றன உலகின் பல முன்னணி கல்வி நிறுவனங்களால் வழங்கப்பட்டுவருகின்றன. இருப்பினும், இஸ்லாத்திற்கு முற்பட்ட ஜாஹிலியாக் காலத்திலேயே முதன் முதலில் மத்தியஸ்தத்தைக் குறிக்க ''ஸுல்ஹ்'' மற்றும் ''தஹ்கீம்'' போன்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன. இஸ்லாத்தின் வருகையுடன் அல்-குர்ஆனின் போதனைகளுடன், நபி (ஸல்) அவர்களின் விரிவான நடைமுறைகளில் நவீன மத்தியஸ்தத்தின் இயல்புகளைக் கண்டு கொள்ள முடிவதுடன், இஸ்லாத்தில் முதல் மத்தியஸ்தராகவும் இறைதூதர் திகழ்ந்துள்ளார். இப்பின்னணியிலேயே இஸ்லாமிய சட்டவியல் நோக்கில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்றால் என்ன, அது தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் எவ்வாறு பிரயோகிக்கப்படுகிறது போன்றவற்றை கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது ஒரு நூலக ஆய்வாக காணப்படுவதுடன் இதில் பண்பு சார் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்குத் தேவையான முதலாம் நிலைத் தரவுகள் நேரடியாக அல்-குர்ஆன், ஸுன்னா போன்றவற்றிலிருந்து பெறப்பட்டதுடன் இவற்றிற்கு மேலதிகமாக இரண்டாம் நிலைத் தரவு மூலங்களான ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள், இணைய ஆக்கங்கள், அறிக்கைகள் போன்றனவும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன. பெறப்பட்ட தகவல்கள் அனைத்தும் விபரண முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவானது இஸ்லாமிய சட்டவியல் நோக்கில் மத்தியஸ்தம் என்பது பர்ளு ஐய்னாகவும், சில நிலைகளில் பர்ளுக் கிபாயாவாகவும் அமைந்துள்ளதுடன், உலகின் பல நாடுகளின் சட்ட ஏற்பாடுகளில் மத்தியஸ்தத்திற்கான முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக உலகளாவிய இஸ்லாமிய மனித உரிமைகள் பிரகடனம், கெய்ரோ மனித உரிமைகள் பிரகடனம் காணப்படுவது போன்று மோதல் தீர்வுக்கான மத்தியஸ்தம் தொடர்பில் தனியான கோட்பாடுகள் உருவாக்கப்பட்டு உலக நாடுகளின் சட்ட யாப்புகள் வரை அவை விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய தேவை உள்ளமையை இவ்வாய்வு பரிந்துரை செய்கிறது.

**திறவுச் சொற்கள்:** மத்தியஸ்தம், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், மோதல் தீர்வு, ஸுல்ஹ், தஹ்கீம்

# கனிஷ்ட இடைநிலை வகுப்புக்களில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் பெற்றோரின் பங்களிப்பு (பட்டிருப்பு வலய, மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்ட 1AB, 1C, வகை - 2 பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு)

யோ.அகல்யா[1] செ.அருள்மொழி[2]
[1,2] கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]yrahalya@gmail.com, [2]chelliah.arulmoly@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

“கனிஷ்ட இடைநிலை வகுப்புக்களில் மெல்லக்கற்கும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் பெற்றோரின் பங்களிப்பு” எனும் தலைப்பில் அமைந்த இவ்வளவை நிலை ஆய்வின் முக்கிய நோக்கம் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் பெற்றோர் பங்களிப்பிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான விதந்துரைப்புக்களை முன்மொழிவதாகும். இக்கோட்டத்தின் பட்டிருப்பு வலயத்திலுள்ள 37 பாடசாலைகளிலிருந்து வசதி மாதிரி எடுப்பின் மூலம் பத்துப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. இவற்றில் 1AB பாடசாலை ஒன்றும் 1C பாடசாலைகள் ஐந்தும் வகை-2 பாடசாலைகள் நான்கும் உள்ளடங்குகின்றன. நோக்க மாதிரியின் அடிப்படையில் பத்து அதிபர்களும் படையாக்க மாதிரி முறையின் அடிப்படையில் 5:1 எனும் விகிதத்தில் 51 ஆசிரியர்களும் 3:1 எனும் விகிதத்தில் 103 மெல்லக் கற்கும் மாணவர்களும் இம்மாணவர்களை அடிப்படையாகக்கொண்டு 2:1 எனும் விகிதத்தில் 52 பெற்றோர்களும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு அவர்களிடம் வினாக்கொத்து, நேர்காணல், அவதானம், ஆவணம் போன்ற ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இவற்றின் மூலம் தரவுகள், தகவல்கள் பெறப்பட்டு அவை பண்பு ரீதியாக மற்றும் அளவு ரீதியாக Microsoft Excel படி முறைகளினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு, வியாக்கியானமும் கலந்துரையாடலும் இடம்பெறுகின்றது. தரவுப்பகுப்பாய்வு முறை மூலம் பெறப்பட்ட ஆய்வு முடிவுகளாக பெற்றோரின் கவனயீனம், ஒத்துழையாமை, வேலைக்கு அமர்த்துதல், தண்டனை வழங்குதல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் இனங்காணப்பட்டன. அதன்படி மெல்லக் கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் பிள்ளைகளது கற்றலில் அர்ப்பணிப்பின்றி செயற்படும் நிலை அதிகமாக இடம்பெறுவது கண்டறியப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பெற்றோரின் பங்களிப்பிலுள்ள குறைபாடுகளைக் குறைக்கும் நோக்கில் விதந்துரைப்புக்களும் இவ்வாய்வினூடாக முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்**: மெல்லக் கற்கும் மாணவர்கள், கற்றல் மேம்பாடு, பெற்றோர் பங்களிப்பு

# இடர்கால சூழலில் பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்கள் எதிர்கொள்ளும் முகாமைத்துவச் சவால்கள்

கனகசுந்தரம் குவேந்திரா[1], செ.அருள்மொழி[2] ,
[1,2] கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]Kuvendra5@gmail.com, [2]Chellaih.arulmoly@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இடர்கால சூழலில் பாடசாலை முகாமைத்துவத்தினை திறம்பட முன்னெடுப்பதற்கு பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் அதிபரின் முகாமைத்துவ திறன் முக்கியமானதாகும். இவ்வாறு பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்தும் போது அதிபர் பல சவால்களை எதிர்நோக்குகின்றார். இவ்வாய்வின் முக்கிய நோக்கம் இடர்கால சூழலில் பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்தும் போது அதிபர்கள் எதிர்கொள்கின்ற முகாமைத்துவ பிரச்சினைகளைக் கண்டறிந்து மேம்படுத்துவதற்கான விதப்புரைகளை முன்மொழிவதாகும். இவ்வாய்வு அளவைநிலை ஆய்வு முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு மட்டக்களப்பு கல்வி வலய ஏறாவூர்ப்பற்று - 1 கோட்ட 10 பாடசாலைகளின் அதிபர்களும் SDEC இல் அங்கம்பெறும் பெற்றோர்களும் நோக்க மாதிரி அடிப்படையில் முழுமையாகவும், ஆசிரியர்கள் பால் ரீதியாக படையாக்கப்பட்டு ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட 10 பாடசாலைகளிலும் 3:1 என்ற விகித அடிப்படையிலும், மாணவத்தலைவர்கள் பால்ரீதியாக படையாக்கப்பட்டு 2:1 என்ற விகிதத்திலும் தெரிவுசெய்யப்பட்டு முறையே நேர்முகம்காணல், வினாக்கொத்து மூலமாக பல தரவுகள் சேகரிக்கப்பட்டு சதவீத அளவீட்டு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் இடர்காலத்தில் அதிபரின் பொருத்தமான மாற்றங்கள், அம்மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதிலுள்ள முகாமைத்துவ சவால்கள், அச்சவால்களை எதிர்கொள்வதற்கான முகாமைத்துவ திறன்கள், அதிபர்கள் முகாமைத்துவ சவால்களை முகங்கொடுப்பதிலுள்ள பிரச்சினைகள், சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கான ஆலோசனைகள் போன்ற ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்பு ரீதியாகவும், அளவு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு எடுத்துக்கூறப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகளிலிருந்து இடர்கால சூழலில் கல்விச் செயற்பாட்டிற்கு பொருத்தமான முகாமைத்துவ மாற்றங்களை அதிபா்கள் நடைமுறைப்படுத்தும் வேளையில் முகாமைத்துவ சவால்களை எதிர்கொள்கின்றனர். ஆசிரியர்கள், பெற்றோர்கள் போன்றோரின் ஒத்துழைப்பையும், மேல்நிலையிலுள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்பையும் அதிபர்கள் தமது முகாமைத்துவ மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றனர். அதிபரானவர் இடர்கால சூழலில் பாடசாலை முகாமைத்துவத்தினை மேற்கொள்ள பாடசாலைக்கு உள்ளேயும், வெளியிலும் பல சவால்களை எதிர்கொண்டவர்களாக காணப்படுகின்றனர். எழுகின்ற சவால்களைத் தீர்த்து நிலையான ஸ்திர தன்மையுடைய பாடசாலை முகாமைத்துவத்தினை மேற்கொள்வதற்கு அதிபர்களுக்கென விசேடமான முகாமைத்துவ திறன்கள் ஆலோசனைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** இடர்கால சூழல், வகிபங்கு, முகாமைத்துவம்

# Covid – 19 காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்கள்

வே.லமினா[1], ரா.தக்ஷாயினி[2]
[1,2]கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]lamina567@gmail.com, [2]thakshaayinir@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

Covid - 19 காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்கள் எனும் தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டமைந்த இவ்வாய்வானது, இக்காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களின் நலன்களைக் கருத்திற் கொள்ளும் வழிமுறைகள் இனங்காணப்பட்டு, அவர்களுக்குரிய கற்றல் - கற்பித்தல் முறைகள் கண்டறியப்பட்டு, இம்மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்களை இனங்கண்டு அவர்களுக்கான தீர்வாலோசனைகளை முன்வைப்பதாக அமைகிறது. யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட விசேட அலகுடைய பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நோக்கமாதிரியின் அடிப்படையில் விசேட அலகுடைய 13 பாடசாலைகளிலிருந்து அதிபர்களும்(13), ஆசிரியர்களும்(26), விசேட தேவையுடைய மாணவர்களும்(76), பெற்றோர்களும்(76) தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்விற்காக தரவுசேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாகப் பெறப்பட்ட அளவறிசார் தரவுகள் Excel மூலமாகவும் பண்பறிசார் தரவுகள் வியாக்கியானம் செய்யப்பட்டு பெறுபேறுகளும் முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் Covid –19 காலப்பகுதியில் விசேடதேவையுடைய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்களாக வளப்பற்றாக்குறை, வேறுபட்ட வகையுடைய விசேடதேவையுடைய மாணவர்களுக்கு ஒரே நேரத்தில் கற்பித்தலை ஒழுங்கமைக்க முடியாமை, பெற்றோர்களின் பங்களிப்பின்மை, விசேடதேவையுடைய மாணவர்களின் ஈடுபாடு குறைவடைந்து காணப்படுதல், விசேடதேவையுடைய மாணவர்களின் வரவு குறைவாக காணப்படுதல் என்பன கண்டறியப்பட்டன. இவ்வாய்வுப்படி விசேட கல்வியை ஆசிரியர்கள் முழுமையாக விளங்கி அர்ப்பணிப்புடனும், செயற்றிறனுடனும், கற்பித்தலுக்கான நுட்பங்களை வினைத்திறனாகக் கையாண்டு, விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பித்தலை முன்னெடுக்கும் வகையில் விதப்புரைகள் முன்மொழியப்பட்டன.

**திறவுச் சொற்கள்:** Covid – 19 காலப்பகுதி, விசேடதேவை, கற்றல், செயற்பாடுகள், ஆசிரியர்கள், சவால்கள்

# க.பொ.த (சா/த) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் வீட்டுச்சூழலின் பங்களிப்பு

டி.விதுக்ஷனா
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
vithukshana08@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையைப் பொறுத்த வரையில் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சிறந்த அடைவினைப் பெறுவது என்பது மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு அவசியமான ஒரு தேவையாக உள்ளது. இருப்பினும் மண்முனை மேற்குக் கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவானது மிகவும் தாழ் நிலையில் உள்ளது. இதனை எடுத்தியம்புவதாக ''க.பொ.த (சா/த) பரீட்சையில் மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் வீட்டுச்சூழலின் பங்களிப்பு'' எனும் தலைப்பிலான இவ்வளவை நிலை ஆய்வானது தரம் 12, 13 மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மண்முனை மேற்கு கல்விக் கோட்டத்திலுள்ள 2 1AB பாடசாலைகளினதும், 4 1C பாடசாலைகளினதும் அதிபர்கள் 6 பேரும், ஆங்கிலப் பாட ஆசிரியர்கள் 14 பேரும், ஆங்கிலப் பாடத்திற்கான சேவைக்கால ஆலோசகர் ஒருவரும் நோக்க மாதிரியின் மூலமும், தரம் 12, 13 மாணவர்கள் 172 பேரும் படையாக்கப்பட்டு இலகு எழுமாற்று மாதிரி மூலமும், அம்மாணவர்களின் பெற்றோர்கள் 34 பேரும் இலகு எழுமாற்று மாதிரி மூலமும் தெரிவுசெய்யப்பட்டு ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து வினாக்கொத்து மூலமும், அதிபர்கள், பெற்றோர்கள், ஆங்கிலப் பாடத்திற்கான சேவைக்கால ஆலோசகர் போன்றோரை நேர்காணல் மூலமும், மாணவர்களின் வீட்டுச் சூழலை அவதானத்தின் மூலமும், அடைவு தொடர்பாக ஆவணம் மூலமாகவும் அளவு மற்றும் பண்பு ரீதியானதாகத் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவை எண் சதவீத அளவீட்டு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் காட்டும் ஈடுபாடும், 5 வருட அடைவின் போக்கும், ஆங்கிலப் பாடத்தில் மாணவர்கள் அடைவைப் பெறுவதற்கான வீட்டுச்சூழலின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை இனங்காணல், ஆங்கிலப்பாடம் தொடர்பான பெற்றோர்களின் மனநிலையை ஆராய்தல், ஆங்கிலப் பாடத்தில் வீட்டுச்சூழலின் பங்களிப்பினையும், அவற்றுக்கான தீர்வாலோசனைகளையும் கண்டறிதல் போன்ற ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்பு, அளவு ரீதியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் முடிவுகளுள் 91.55% ஆன மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தின் மீது மிகக் குறைவான ஈடுபாட்டைக் கொண்டு காணப்படுவதோடு அதற்கு அவர்களின் வீட்டுச்சூழலே காரணமெனவும் குறிப்பிட்டுள்ளனர், மாணவர்களின் வீட்டுச்சூழலான பெற்றோரின் கல்வி மட்டம், தொழில், வருமானம், ஒழுக்கச் செயற்பாடுகள், ஊக்கல், மனநிலை போன்றன மாணவர்களின் ஆங்கிலப் பாட அடைவில் தாக்கம் செலுத்தக்கூடியன, ஆங்கிலப்பாடம் மாணவர்களின் எதிர்காலத் தொழிலுக்கு அவசியமில்லை எனும் மனப்பாங்கோடு மாணவர்களின் பெற்றோர்கள் காணப்படுகின்றனர் போன்ற முடிவுகளும், பெற்றோர்கள் மற்றைய பாடங்களைப்போல் எதிர்கால வாழ்க்கைக்கு மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடமும் அவசியம் என்பதை உணர்ந்து கொள்வதோடு தங்கள் பிள்ளைகளுக்கும் அவை பற்றி விழிப்புணர்வூட்டி தகுந்த வீட்டுச்சூழலை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்ற விதப்புரைகளும் இவ்வாய்வில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** க.பொ.த (சா/த) பரீட்சை, மாணவர்களின் அடைவு, வீட்டுச்சூழல், பங்களிப்பு

# பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் செல்வாக்கு (ஏறாவூர் கோட்டப் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு)

முகமட் உசனார் நவ்பர்காந்
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
nouferkhan@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

வளர்ந்து வரும் தொழிநுட்ப தொழில் நுணுக்க அறிவுப் பெருக்கமானது மனிதனை வாழ்வில் எதிர் நீச்சல் போட்டாலே வாழ முடியும் என்ற நிலைக்கு உட்படுத்தியுள்ளது. இதற்கு ஈடுகொடுக்க வேண்டுமாயின் பல்வேறுபட்ட விடயங்களையும் சமகால நிகழ்வுகளையும் உள்வாங்கும் திறன் கொண்டவர்களாகவும் இருத்தல் காலத்தின் தேவையாகும். அதற்கு முதுகெலும்பாகத் திகழ்வது நூலகமே. இதனடிப்படையிலே ஏறாவூர் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் காணப்படுகின்ற நூலகங்களின் முக்கியத்துவம் தொடர்பாகவும் அதனை பயன்படுத்துகின்ற சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றல் தொடர்பாகவும் இவ்வாய்வு ஆராய்கின்றது. இதன்படி இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக மட்டக்களப்பு மத்தி வலயத்தின் ஏறாவூர் கல்விக் கோட்டத்தில் உள்ள 07 பாடசாலைகளும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்விற்கான ஆய்வு மாதிரிகளாக 07 அதிபர்கள், 50 ஆசிரியர்கள், 105 மாணவர்கள், 5 நூலகப் பொறுப்பாளர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பெறப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் பொருத்தமான மென்பொருள் முறைகளின் ஊடாக பகுப்பாய்வு, வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளுக்குள் உள்வாங்கப்படுவதுடன் பகுப்பாய்வின் மூலம் பல்வேறு முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 75.23 சதவீதமான முடிவுகளில் பாடசாலை நூலகங்கள் பொருத்தமான இடத்தில் அமையவில்லை முடிவுகள் பெறப்பட்டுள்ளன (வீதிக்கு அருகில் நூலகங்கள் காணப்படுவதனால் வாகனங்களின் சத்தம் அதிகமாகவும், புறாக்களின் தொல்லை அதிகமானதாகவும், எச்சங்கள் நிரம்பியும் நூலகங்கள் காணப்படுகின்றன). ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 80 சதவீதமான முடிவுகளில் நூலகங்களில் தேவைக்கு போதுமானளவு பௌதீக வளங்கள் காணப்படவில்லை (மாணவர்களுக்கு போதுமானளவு தளபாடங்கள், கட்டிட வசதிகள் இல்லாத நிலையும் காணப்பட்டது). பாடசாலையில் நூலகங்கள் வினைத்திறனாக செயற்படுவதற்குப் போதுமானளவு பௌதீக மற்றும் மனித வளம் இல்லாத நிலையும், இதனால் மாணவர்கள் தாமாக நூலகத்தை பயனபடுத்துவதில் காட்டும் அலட்சியப்போக்கு காரணமாக சுயகற்றல் செயற்பாடுகள் பாதிப்படைகின்றமை போன்ற பல பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளன. இதனடிப்படையில் பாடசாலை நூலகத்தை வினைத்திறனாக்குவதன் மூலம் மாணவர்களின் சுயகற்றற் செயற்பாடுகளை முன்னெடுக்கும் மாணவர்களின் தேவைப்பாடு கருதி பொருத்தமான சமகால நூல்களிற்கான கொள்வனவில் கவனம் செலுத்துதல், வலயக்கல்வி அலுவலகத்திடம் பாடசாலை நூலகத்தின் நிலைமையை எடுத்துக்கூறி அரசின் நிதி உதவியை பெற்று நூலகத்தை விஸ்தரிக்க முயற்சித்தல் போன்ற வகையில் விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** பாடசாலை நூலகங்கள், வினைத்திறன், சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள், சுயகற்றல்

# நிகழ்நிலைக் கற்பித்தலினால் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

சங்கர் மீருஜா
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
meerujasangar673@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

நிகழ்நிலைக் கற்பித்தலினால் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்னும் தலைப்பில் இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது. இவ்வாய்வானது இடர் காலத்தின்போதும் கற்றல் கற்பித்தலை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக் கற்பித்தல் முறையினை ஆரம்பப்பிரிவில் நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு அதனை மேம்படுத்துவதற்கான விதப்புரைகளை முன்மொழிவதனை பிரதான நோக்காகக் கொண்டு மட்டக்களப்பு கல்வி வலயத்தின் ஏறாவூர்பற்று ஒன்று கோட்டத்திற்குட்பட்ட ஆரம்பப்பிரிவை உள்ளடக்கிய பாடசாலைகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசப் பாடசாலைகளிலிருந்து நோக்க மாதிரித் தெரிவின் அடிப்படையில் 09 பாடசாலைகளும், அப்பாடசாலைகளில் ஆரம்ப பிரிவிற்கு கற்பிக்கும் ஆசிரியர்களிலிருந்து 2:1 எனும் விகிதத்தில் 32 ஆசிரியர்களும், ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களிலிருந்து படையாக்கப்பட்ட மாதிரித் தெரிவின் அடிப்படையில் 220 மாணவர்களும், மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களிலிருந்து 3:1 என்னும் விகிதத்தில் 73 பெற்றோர்களும் நிகழ்நிலைக் கற்பித்தலினால் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு நிவர்த்தி செய்யும் வகையில் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாதிரிகளிடமிருந்து தேவையான தரவுகளைப் பெறுவதற்காக வினாக்கொத்துக்கள், நேர்காணல் படிவம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபடங்கள் என்பவற்றில் குறித்துக்காட்டப்பட்டுள்ளன. தரவுகளின் பகுப்பாய்விலிருந்து பெறப்பட்ட ஆய்வு முடிவுகளாக நிகழ்நிலைக் கற்பித்தலை மேற்கொள்ளக்கூடிய வகையில் ஆசிரியர்கள் வாண்மைத்திறன் அற்றவர்களாகக் காணப்படுகின்றமை, இவர்களுக்குப் போதுமான பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை, இவர்களை மேற்பார்வை செய்கின்றமை குறைவாகக் காணப்படுகின்றமை, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் நிகழ்நிலைக் கற்பித்தலில் ஈடுபடக்கூடிய சாதனங்கள் இல்லாத நிலை காணப்படுகின்றமை, நிகழ்நிலைக்கேற்ற வகையில் கற்பித்தல் முறைகளை மாற்றிக் கற்பிக்காத நிலை காணப்படுகின்றமை, மாணவர் பங்களிப்பு குறைவாக காணப்படுகின்றமை, பெற்றோர் பங்களிப்பு குறைவாகக் காணப்படுகின்றமை போன்ற பல பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன. இதனால் மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தலை தொடர்ச்சியாக வழங்குவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பன கண்டறியப்பட்டதுடன் அவற்றிற்கான விதப்புரைகளை முன்வைப்பது அவசியமானது.

**திறவுச் சொற்கள்:** நிகழ்நிலை, கற்பித்தல், ஆரம்பப்பிரிவு, ஆசிரியர்கள்

# திருகோணமலை - மட்டக்களப்பு இயேசு சபை ஆயர்களும் அவர்கள் சேவைக்காலத்தில் எதிர்நோக்கிய சவால்களும்

தனுகா யோகநாதன்[1], நிலாந்தினி செந்தூரன்[2]
[1,2]வரலாற்றுத்துறை, கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]jesusthanu8@gmail.com , [2]nilanthinic@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

போர்த்துக்கேயர் காலத்தில் அறிமுகமான கத்தோலிக்கம் பிரித்தானியர் காலத்தில் வேகமாக வளர்ச்சி கண்டு, நிறுவன அடிப்படையில் மறைமாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஆயர்கள் தலைமையில் செயற்படத் தொடங்கியது. இம்மறைமாவட்டங்களில் ஒன்றான திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்களின் பணி கிழக்குப் பிரதேச மக்களின் சமுக, பொருளாதார நிலைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தாலும், அவர்களின் சேவைக்காலம் பல சவால்கள் நிறைந்ததாகவே காணப்பட்டமையை சமகால சூழலும் அவர்களது குறிப்புக்களும் உறுதிப்படுத்துகின்றன. வெளிநாட்டு ஆயர்களான இவர்கள் சுதேசிகளின் கடுமையான எதிர்ப்புக்களின் மத்தியில், மொழிப் பிரச்சினையால் நேரடியாக அவர்களோடு உரையாடல்களை மேற்கொள்ள முடியாத நிலையில் சவால்களினூடாகவே பல சேவைகளை முன்னெடுத்தனர். குறிப்பாக சீரற்ற போக்குவரத்து வசதி, காலநிலை மாற்றம், மக்களின் இறுக்கமான வாழ்வியலுடன் இணைந்த சாதிக்கட்டமைப்பு போன்ற பல சவால்களுக்கு மத்தியில் சேவைகளை முன்னெடுத்தனர். எனவே ஆய்வின் வரையறை கருதி, இயேசு சபை ஆயர்களான சாள்ஸ் லவிஞ்(Charles Lavinge), கஸ்டன் றொபிசெ(Gaston Robichez), கிளனி(Glennie) ஆகியோரது சேவைக்காலத்தில் எதிர்நோக்கிய சவால்களே ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இவர்களுடைய காலத்தில் கிழக்கிலங்கையில் இறுக்கமாகக் காணப்பட்ட சாதிமுறையுடன் இணைந்த சமூகக் கட்டமைப்பு நலிவுறத் தொடங்கியது. அத்தோடு முறையான திருமண தொடர்பு, பதிவு முறைகள், புனர்வாழ்வு, அரச வேலை வாய்ப்புக்கள், கல்வி, பாடசாலைகள், ஆதரவற்ற இல்லங்கள், வீடுகள் போன்றவற்றை அமைத்து திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட இயேசு சபை ஆயர்கள் சவால்களுக்கு மத்தியில் சேவைகளை ஆற்றியுள்ளார்கள். இன்று கிழக்கிலங்கையில் கிறிஸ்தவ சமயம் தனித்துவமான கலாசார பண்பாட்டம்சங்களோடு கட்டமைக்கப்பட்ட நிறுவனமாக மட்டக்களப்பு, திருகோணமலை என இரு மறைமாவட்டங்களாகப் பிரிந்து செயற்படுவதற்கு இவ்வாயர்களது காத்திரமான பங்களிப்பே சான்றாகின்றது.

**திறவுச் சொற்கள்:** மறைமாவட்டம், அப்போஸ்தலிக்கம், திருச்சபை, ஆயர்கள்

# நவீன வானியல் துறையில் ஈழத் தமிழரின் முதல் வழிகாட்டி பேராசிரியர் அலன் ஆபிரகாம்

ரமேஷ் பென் டில்கரன்
வரலாற்றுத்துறை, கலைப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
dilharanben@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க மிஷனரியினரால் யாழ்ப்பாணத்தின் வட்டுக்கோட்டையினைத் தலைமையிடமாகக் கொண்டு வளர்த்தெடுக்கப்பட்ட வானியல் ஆய்வுத் துறை மரபில் உதித்த ஈழத் தமிழரின் முதல் நவீன வானியல் விஞ்ஞானியாக பேராசிரியர் அலன் ஆபிரகாம் (சுப்ரமணியர் அம்பலவாணர்) விளங்குகின்றார். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த இவர் வானியல் ஆராய்ச்சித் துறையில் ஆர்வம் மிகுந்தவராகவும் அதன் முன்னேற்றத்திற்காக தமது வாழ்வினை அர்ப்பணித்தவராகவும் வானியல் ஆய்வில் உலகளாவிய அங்கீகாரம் பெற்ற முதல் இலங்கைத் தமிழர் என்ற பெருமையினை அடைந்தவராகவும் விளங்குகின்றார். சோதிடம் என்னும் போலி அறிவியலிற்குள் வானியல் அறிவு முடங்கிப் போயிருந்த யாழ்ப்பாண தமிழ் சமுதாயத்தில் இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் சோதிடத்தினை விடுத்து வானியல் அறிவின் மேன்மையினை யாழ் மக்களுக்கு எடுத்துரைக்கும் முயற்சியில் ஈடுபட்டவராக பத்திரிகை வாயிலாக பல்வேறு வானியல் கட்டுரைகள், மற்றும் சொற்பொழிவுகள் போன்றவற்றை மேற்கொண்டும் இவை தவிர தாமே வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டவராக அலன் ஆபிரகாம் விளங்குகின்றார். இவரது சாதனையின் உச்சமாகவும் சர்வதேச ரீதியில் இவருக்கு பெரும் புகழை ஈட்டித் தந்த நிகழ்வாக, ஹெலி வால் வெள்ளி தொடர்பான இவரது கணிப்பு விளங்குகின்றது. மேற்கத்தேய நாடுகளில் அதி நவீன தொழில்நுட்பம் நிறைந்த வானியல் ஆய்வுக் கூடங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்த வானியல் ஆராய்ச்சியை வசதி வாய்ப்பு பெரிதும் இல்லாத யாழ்ப்பாணத்தின் ஓர் சிறிய கிராமத்தில் சிறியதோர் தொலைநோக்கியின் உதவி கொண்டு வெற்றுக் கண்களையும் மற்றும் கணித சமன்பாடுகளையும் பயன்படுத்தி வானியல் ஆராய்ச்சியினை முன்னெடுத்து இறுதியில் பிரித்தானிய வானியல் ஆராய்ச்சி கழகமே போற்றும் சர்வதேச வானியல் அறிஞராக எழுச்சி பெற்றமை பிரம்மிக்கத்தக்க சாதனையாகும். அந்த வகையிலே யாழ்ப்பாண மக்களிடையே ஏற்பட்ட நவீன அறிவியல் மரபில் எவ்வகையில் அலன் ஆபிரகாம் ஒர் முன்னோடியாக விளங்குகின்றார் என்பதனையும் நவீன வானியல் துறையில் அலன் ஆபிரகாமின் செயற்பாடுகளும் அவர் அடைந்த சாதனைகள் எத்தகையது என்பதனை ஆராய்வதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** வானசாஸ்திரம், வானியல், அலன் ஆபிரகாம், யாழ்ப்பாணம், அமெரிக்கமிஷன்

# நாயக்க மன்னர்களில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் - ஓர் வரலாற்று ஆய்வு

தனுஷா மோகனதாசன்[1], நிலாந்தினி செந்தூரன்[2]
[1,2]வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]ushamohan121@gmail.com, [2]nilanthinic@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை அரசியல் வரலாற்றில் நாயக்கர்களுடைய தொடர்பு நீண்ட காலம் இடம்பெற்றது. அதிலும் குறிப்பாக கண்டி இராசதானியை மையப்படுத்திய வகையில் நாயக்க மன்னர்களின் ஆட்சி 1739 – 1815 ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. அந்த வகையில் கண்டி இராசதானியின் இறுதி மன்னனான ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனுடைய ஆட்சிக்கால முக்கியத்துவத்தினை ஆராய்வதும், நாயக்க வம்ச ஆட்சியாளர்களான ஸ்ரீ விஜய இராஜசிங்கன் (1739-1747), கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (1747-1782), ராஜாதி இராஜசிங்கன்(1782-1798) போன்றவர்களிலிருந்து ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் தனித்துவம் பெறுகின்றானா? அவ்வாறெனின் அதற்கான காரணம் என்ன என்பதை ஆராயும் முகமாக நாயக்க மன்னர்களில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் - ஓர் வரலாற்று ஆய்வு என்ற தலைப்பின் ஊடாக விக்கிரம இராஜசிங்கனின் வரலாற்றை வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். வரலாற்று அணுகுமுறையினூடாக மன்னனது வரலாறு ஆராயப்பட்டுள்ளது. ஆய்வின் வரையறை கருதி கண்டி இராசதானியில் நாயக்கர் மன்னர்களுள் விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சிக்காலத்தினை(1798-1815) மையப்படுத்தியதாக அமைகின்றது. இவன் நாயக்க மன்னனாகக் காணப்பட்ட போதிலும் சிங்கள மக்களுடைய ஆதரவைப் பெற்று பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கி ஆட்சியை மேற்கொண்டதோடு தமிழுக்கும் தன்னுடைய ஆதரவை வழங்கினான். இருந்தபோதிலும் பிற்பட்ட காலங்களில் இம்மன்னனுடைய ஆட்சியானது சவால்கள் நிறைந்ததாகக் காணப்பட்டது. குறிப்பாக இவனது ஆட்சியால் அதிருப்தியுற்ற மக்கள், இவனுக்கு எதிரான பௌத்த பிக்குகளின் கிளர்ச்சி, பிரதானிகளுடைய சதித்திட்ட முயற்சிகள் மற்றும் பிரித்தானியருடைய இராஜதந்திர செயற்பாடுகள் போன்றவற்றால் இவனது ஆட்சி மட்டும் முடிவுறுத்தப்படவில்லை. மாறாக அதுவரை காலமும் அன்னியராட்சிக்கு உட்படாமல் தனித்துவமான இராசதானியாக விளங்கிய கண்டி இராசதானியின் வரலாற்றிலும் கறைபடிந்த வரலாற்றுச் சம்பவமாகப் பதியப்பட்டு, முழு இலங்கையும் பிரித்தானியரின் ஆதிபத்தியத்திற்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**திறவுச் சொற்கள்:** ஆட்சியாளர்கள், ஆங்கிலேயர், பிரதானிகள், இராசதானி, கிளர்ச்சி

# மந்துவில் கிராமம் - ஒரு வரலாற்று நோக்கு

கமலநாதன் நிரோஜினி[1], சி.கி.சிவகணேசன்[2]
[1,2]வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]nirojiny41@gmail.com, [2]Shivahaneshank@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

தென்னாசியாவில் இலங்கையானது நீண்ட தொடர்ச்சியான வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்ட நாடாக விளங்குகின்றது. அந்த வகையில் வட இலங்கையில் அமைந்துள்ள மந்துவில் கிராமம் தொன்மையும், தொடர்ச்சியுமான வரலாற்றைக் கொண்டுள்ளமையை நிரூபிக்கும் வகையில் ஏராளமான தொல்லியற் சின்னங்கள் காணப்படுகின்றன. எனினும் அங்கு விரிவான அகழ்வாய்வுகள் நடைபெற்றிருக்காமை குறிப்பிடத்தக்கது. மந்துவில் கிராமத்தின் தொல்லியல் எச்சங்களை அடையாளம் காண்பதனூடாக, பண்பாட்டுப் பாரம்பரியங்களை இனங்காண்பதுடன் இக்கிராமத்தின் வரலாற்றை வெளிக்கொண்டுவருவதற்கு முன்னோடியாக அமையும். இங்கு வரலாற்றாய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களான கலவோடுகள், ஈமத்தாழிகள், நடுகற்கள் (பெருங்கற்கால சின்னங்கள்) போன்றனவும் மற்றும் தமிழ்ப் பிராமிச் சாசனம், நாணயங்கள், புராதன குளங்கள், புராதன கட்டிடங்கள், தொன்மையான ஐயனார் வழிபாட்டிற்கான தொல்லியற் சான்றுகள், சங்கிலியன் கோட்டை என்பனவும் இவ்வாய்வில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட முதலாம் பராக்கிரமபாகுவின் நாணயமும் அத்தோடு மந்துவில் கிராமத்தின் சமூக, பொருளாதார முக்கியத்துவமும் இக்கிராமத்தின் வரலாற்றுத் தொன்மையை எடுத்துக்காட்டுபவையாக அமைகின்றன. மந்துவில் கிராமத்தில் ஆதிக்குடியிருப்பு மையங்கள் இருந்தமைக்கான சான்றாதாரங்கள் காணப்படுகின்றன. இவற்றை அடையாளப்படுத்தி, ஆவணப்படுத்துவதன் மூலம் குறித்த கிராமத்தின் தொன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

**திறவுச் சொற்கள்:** தொல்லியற் சின்னங்கள், பெருங்கற்காலம், பண்பாடு

# ஐரோப்பியர் கால கல்லறைகளும் கல்வெட்டுக்களும் - ஆவணப்படுத்தல் (ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தை மையப்படுத்தியது)

சந்தியோமயர் சதீஸ்குமார்[1], சி.கி.சிவகணேசன்[2]
[1,2]வரலாற்றுத்துறை, கலை கலாசார பீடம் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]ksathees63@gmail.com, [2]shivahaneshank@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

வரலாற்றுத் தொன்மைவாய்ந்த வட இலங்கையில் பல துறைமுகங்கள காணப்படுகின்றன. அவற்றுள் ஊர்காவற்றுறையும் ஒன்றாகும். இத்துறைமுகத்தோடு வர்த்தகம், பண்பாடு மற்றும் அரசியல் தொடர்புகளை காலத்துக்கு காலம் பல உள்நாட்டு வெளிநாட்டு அரசுகள் ஏற்படுத்தியிருந்தன. அவ்வகையில், கி.பி.16 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் அதிகாரம் செலுத்திய ஐரோப்பிய ஆட்சியாளர்களும் அத்தகைய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மக்கள் மத்தியில் பெருங்கற்கால பண்பாடு நிலவிய புராதன காலம் முதல் பிண அடக்கம் தொடர்பான பல்வேறு நம்பிக்கைகள், அடையாளங்கள் இருந்து வருகின்றன. அவ்வகையில் இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறை இப்பிராந்தியத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் மத்தியில் முக்கிய பண்பாட்டுக் கூறாக வளர்ச்சி பெற்றிருந்தது. ஆனால் ஐரோப்பியர் வருகையின் பின் பிணங்களைப்புதைக்கும் மேற்கத்திய கத்தோலிக்க முறைமையும் வேறுபட்ட வடிவங்களில் நினைவுச்சின்னங்களை அமைக்கும் முறையும் புகுந்து கொண்டது. அவ்வாறு ஊர்காவற்றுறை பிராந்தியத்தில் அமைக்கப்பட்ட பிண அடக்க ஞாபகச்சின்னங்களான, கல்லறைகள், கல்வெட்டுகள், அடையாளச் சின்னங்கள் தொடர்பிலான மரபுரிமைச்சின்னங்கள் பற்றியதாக இவ்வாய்வு அமைகின்றது.

**திறவுச் சொற்கள்**: பெருங்கற்காலப்பண்பாடு, மரபுரிமைச் சின்னங்கள், நடுகற்கள்

# மட்டக்களப்பு சைவத் தமிழ் அறிஞர் வித்துவான் ச.பூபாலபிள்ளை - ஓர் ஆய்வு

ருஜானி நிமலேஸ்வரன்
nrujani@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

பிரித்தானியராட்சிக் காலமானது நாட்டில் சமூக மற்றும் பண்பாட்டுத்துறையில் மாற்றங்கள் பலவற்றினைக் கொண்டமைந்தது. இத்தகைய சமூகச் சூழல் சில சுதேச இந்துக்களிடையே தமிழையும், இந்து சமயத்தையும், பண்பாட்டையும் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வினைத் தூண்டியது. மொழி, சமயம், பண்பாடு முதலியவற்றில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதில் தனிமனித ஆளுமைகளின் பங்களிப்பு மிக முக்கியமானதாக அமைந்துள்ளமையினைக் காணலாம். இதனடிப்படையில் வித்துவான் ச.பூபாலப்பிள்ளை அவர்களின் மறுமலர்ச்சிச் செயற்பாடுகளை வெளிக்கொணர்வதனை முக்கிய நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது விபரண ஆய்வு முறை, வரலாற்று ஆய்வு முறை முதலிய ஆய்வு முறையியல்களினூடாக நிகழ்த்தப்பட்டுள்ளது. வித்துவான் ச.பூபாலபிள்ளை அவர்களின் இலக்கியங்கள் இவ்வாய்விற்கான மூலங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் வித்துவான் ச.பூலபிள்ளை இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பின் மிக மூத்த தமிழறிஞரும், எழுத்தாளரும், புலவரும் ஆவார். ஆங்கில மொழியினைக் கற்று அம்மொழி மூலமாகவே பூபாலபிள்ளை தொழில் பார்த்த போதிலும் சைவத்தின் மீதும் தமிழ்மொழி மீதும் இயல்பாகவே பற்றுடையவராக காணப்பட்டார். மட்டக்களப்புப் பிரதேசமும் மக்களும் சிறப்புற தனது ஆளுமைகளை முற்றாக பயன்படுத்திப் பல செயற்பாடுகளில் ஈடுபட்டார். கிறிஸ்தவ சமய மதமாற்றமும் ஆங்கில மொழி மோகமும் நடைப்பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் பூபாலபிள்ளை அவர்கள் தமது சுதேச சமயத்தினையும் மொழியினையும் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் இலக்கியங்களை கருவியாகப் பயன்படுத்தியமையினைக் காணலாம். ஆழ்ந்த தமிழ்மொழியறிவும், இலக்கிய ஆர்வமும், ஆய்வுக் கண்ணோட்டத்தில் ஒருங்கிணைந்த விளைவே இவரது இலக்கியங்களாகும். இவரது ஆளுமையில் தமிழும் சமயமும் இரண்டெனினும் ஒன்றினது வளர்ச்சி மற்றையதன் வளர்ச்சிக்கு உறுதுணையாகியது. இவரது தனிமனித ஆளுமையினால் சமய, கல்வி, சமூகச் செயற்பாடுகளின் மூலம் மட்டக்களப்புப் பண்பாட்டில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டமையினைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனடிப்படையில் வித்துவான் ச.பூபாலபிள்ளை அவர்களின் வாழ்க்கை முறையினையும், அவர் மேற்கொண்ட பணிகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச் சொற்கள்:** மட்டக்களப்பு, பண்பாடு, வித்துவான் ச.பூபாலப்பிள்ளை, இலக்கியங்கள்

# கொவிட்-19 பெருந்தொற்றுநோயின் போதான குடும்ப வன்முறை மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருளாதாரக் காரணிகள்: யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வரணிக் கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

ஞா.சார்த்திகா
சமூகவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
sarthisarthi1995@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

வெளிவரும் தரவுகள் மற்றும் அறிக்கைகள் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் காட்டுகின்றன. குறிப்பாக குடும்ப வன்முறை கொவிட்-19 பெருந்தொற்றின்போது தீவிரமடைந்துள்ளது. கொவிட்-19 பெருந்தொற்றின்போது குடும்ப வன்முறையுடன் தொடர்புடைய காரணிகளைக் கண்டறிவது இந்த ஆய்வின் பிரதான நோக்கம் ஆகும். இந்த ஆய்வில் கலப்புமுறை ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. நேர்காணல் மேற்கொள்பவரால் நிர்வகிக்கப்படும் வினாக்கொத்து, பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் மற்றும் விடய ஆய்வுகள் என்பவற்றின் மூலம் முதலாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வில் அனைத்து 57 பெண்களும் உள்வாங்கப்பட்டனர். கணியம்சார் தரவுகள் SPSS version 21 இனைப் பயன்படுத்தி விபரணப்புள்ளிவிபரவியல் முறைகள் மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. விடய ஆய்வுகள் மற்றும் பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் என்பவற்றின் மூலம் சேகரிக்கப்பட்ட பண்புசார் தரவுகள் கருப்பொருள் உள்ளடக்கப் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டன. பதிலளித்தவர்களில் பெரும்பாலானோரின் முதன்மையான மதமாக இந்துமதம் (84.21%) காணப்பட்டதுடன் பதிலளித்தவர்களில் 38.60 % ஆனோர் 20-30 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் முடிவுகள் காட்டுகின்றன. ஏறத்தாழ, 71.93% ஆன பெண்கள் இரண்டாம்நிலைக் கல்வித் தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ளனர். கூலி வேலை (26.32%) பல பெண்களின் முதன்மை வாழ்வாதாரமாகக் காணப்பட்டது. கடன் பிரச்சினைகள் (21.05%), வேலையின்மை (13.60%), குறைவான வருமானம் (23.68%) மற்றும் வேலைக்கு ஒழுங்காகப் போக இயலாமை (16.67%) போன்றன குடும்ப வன்முறையை எதிர்கொண்ட பெண்களின் பிரதானமான பொருளாதாரப் பிரச்சினைகளாகும் என்று முடிவுகள் குறிப்பிடுகின்றன. அத்துடன் குடும்ப அங்கத்தவர்களிடையேயான முரண்பாடு (21.11%), வறுமை (18.89%), மது மற்றும் போதைப்பொருள் பாவனை(18.15%), பிள்ளைகளின் பிரச்சினை (13.36%), சந்தேகம் (1.85%), கல்வித்தரம் குறைவு (11.85%) மற்றும் புரிந்துணர்வின்மை (14.81%) என்பன பெண்களின் குறிப்பிடத்தக்க சமூகப் பிரச்சினைகளாக இருந்தன எனவும் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே, கொவிட் 19 பெருந்தொற்றின்போது அதிகமான பெண்கள் சமூக மற்றும் பொருளாதாரக் காரணிகளால் குடும்ப வன்முறையை எதிர்கொண்டனர் என்பது ஆய்வின் பிரதான முடிவாகும்.

**திறவுச் சொற்கள்:** குடும்ப வன்முறை, கொவிட்-19, சமூகப் பிரச்சினை, பெண், பொருளாதாரப் பிரச்சினை

# கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் வாழ்கின்ற மாற்றுத்திறனாளர்களின் சமூக ஓரங்கட்டப்படுதலை மையப்படுத்திய ஓர் சமூகவியல் ஆய்வு

துரைராசா யுஜந்தன்
சமூக விஞ்ஞானங்கள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
thuraiyujanthan@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இவ்வுலகில் மனிதப் படைப்பு என்பது புனிதமானதும், மதிக்கப்படக் கூடியதாகவும் காணப்படுகின்றது. இவ்வுலகில் பிறக்கின்ற நபர்கள் இயற்கையாக அல்லது செயற்கையாக நிகழ்கின்ற ஆபத்துக்களுக்கு உள்ளாகி அங்கவீனமுடையவர்களாகவும் மாறுகின்றனர். இருப்பினும் அவ்வாறானவர்களிடத்தில் மாற்றுத்திறன்கள், ஆற்றல்கள், ஆளுமைகள் மறைந்து காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் ஆற்றல்கள், திறன்கள் அடையாளம் காணப்பட்டு அவை வலுப்படுத்தப்படுகின்ற போது அத்தகைய விசேட தேவையுடையவர்கள் சாதனையாளர்களாகவும், வெற்றியாளர்களாகவும், ஆளுமையுள்ள வர்களாகவும் மாறுகின்றனர். இவ்வாறான மாற்றுத்திறனாளர்கள் சமூகத்தின் மத்தியிலிருந்து ஓரங்கட்டப்படாது அவர்களை மனிதாபிமானத்துடன் அணுகப்படுவதும், அவர்களின் உரிமைகள் மதிக்கப்படுவதும் அவசியமானதாகக் கருதப்படுகின்றது. இத்தகையதொரு சூழ்நிலைகளில் மாற்றுத்திறனாளர்கள் சமூகப் பிறழ்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு புறக்கணிக்கப்படுகின்றமையை ஆய்வுப் பிரதேசத்தில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்தவகையில் இவ்வாய்வின் பிரச்சினையாக ‘‘மாற்றுத்திறனாளர்கள் ஓரங்கட்டப்படுதலுக்கு உள்ளாக்கப்படுதல்’’ எனும் அடிப்படையில் தரரீதியான மற்றும் எண் ரீதியான முறைமையியல்களுக்கூடாக, மாற்றுத்திறனாளர்கள் சமூகத்தில் ஓரங்கட்டப்படுவதற்கான காரணங்களை கண்டறிவதோடு அதனால் ஏற்படும் சமூகப் பொருளாதார தாக்கங்களை கண்டறியும் நோக்கோடு நோக்க மாதிரியை பயன்படுத்தி வினாக்கொத்து, தனியாள் விடய ஆய்வு, நேரடி அவதானிப்பு போன்ற முறைகள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் அனைத்தும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, விகிதாசாரங்கள், புள்ளிவிபரங்கள் போன்றவையும் வட்ட வரைபுகள், சட்ட வரைபுகள் போன்றவை குறித்துக் காட்டப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வறுமை, பாடசாலைக் கல்வி, சமூக அடக்குமுறை, தனிமனித உறவு என்பவற்றின் நிமித்தம் இவர்கள் ஓரங்கட்டப்படுவதோடு சுகாதாரப் பாதுகாப்பு, ஆதரவின்மை, சேவைகளுக்கான தடைகள், பெற்றோர்களின் பங்களிப்புக்குறைவு என்பவற்றுக்கு மாற்றுத்திறனாளர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் புறக்கணிப்படும் நிலைக்கு ஆளாக்கப்படுபவர்களாகக் காணப்படும் நிலையினையும் இவ்வாய்வின் மூலம் கண்டுகொள்ள முடிந்தது.

**திறவுச் சொற்கள்:** மாற்றுத்திறனாளர்கள், ஓரங்கட்டப்படுதல், சார்ந்திருத்தல், களங்கம், மனிதாபிமானம்

# நவீனமயமாதல் செயன்முறையும் சுதேசிய பழங்குடிகளின் வாழ்வியல் மாற்றங்களும் - அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பிரதேசத்தை மையப்படுத்திய சமூக மானிடவியல் ஒப்பீட்டாய்வு

சு.சதுர்சிகா[1], கு.விக்னேஸ்வரன்[2]
[1,2] சமூக விஞ்ஞானங்கள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]sathu19960810@gmail.com, [2]vigneswarang@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இருபதாம் நூற்றாண்டில் அனைத்து உலகையும் மாற்றியமைத்த ஒரு எண்ணக்கருவாக நவீனமயமாக்கல் விளங்குகின்றது. அந்தவகையில் ''நவீனமயமாதல் செயன்முறையும் சுதேசிய பழங்குடிகளின் வாழ்வியல் மாற்றங்களும் - அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பிரதேசத்தை மையப்படுத்திய சமூக மானிடவியல் ஆய்வு'' என்ற தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் பிரதான நோக்கம் சமூக பொருளாதார மாற்றங்களானது வனக்குறவர்களது அடையாளத்துவம், சுதேசியத்தன்மை என்பவற்றில் ஏற்படுத்திய தாக்கத்தினை அறிந்து கொள்வதோடு அவை அவர்களது வாழ்வியல் அந்தஸ்த்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை விபரிப்பதாகும். நவீனமயமாக்கலானது சமூகத்தின் அனைத்துக் கூறுகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தியது என்றவகையில் அளிக்கம்பையிலும் காஞ்சிரங்குடாவிலும் வனக்குறவர் சமூகமும் இவ்வாறாக நவீனமயமாதல் என்ற பிடியில் சிக்குண்டுள்ளது. இதனால் அவர்கள் தங்களது வாழ்வியல் அம்சங்களை மாற்றிக்கொள்வதற்காக சமூக பொருளாதார ரீதியில் முன்னேற்றங்களை ஏற்படுத்திக்கொண்டுள்ளனர். இதன் விளைவாக அவர்களது சுதேசிய தன்மை, அடையாளம் என்பன மருவிச் சென்று அழிவடையும் தருவாயில் உள்ளது. ஆகவே இவர்களது சமூகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் கூட அவர்களுக்கென்றே உரித்தான பாரம்பரிய அம்சங்களை தொடர்ந்தும் பேணி பாதுகாத்துக்கொள்வதற்கான தீர்வு மற்றும் ஆலோசனைகளை அறிவதையும் நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது அளிக்கம்பை மற்றும் காஞ்சிரங்குடா பகுதிவாழ் ஒட்டுமொத்த வனக்குறவர் சமூகத்தையும் மையப்படுத்தியதாக உள்ளது. இவ்வாய்வானது பண்பு ரீதியான விவரணப் பகுப்பாய்வு முறையினை பெருமளவில் தழுவி நிற்பதுடன் ஆய்வுக்கான முதலாம் நிலைத்தரவுகள் களவாய்வின் மூலம் பெறப்பட்டன. இவ்வாய்விற்கான மாதிரிகளாக இரு பிரதேசத்திலும் எழுமாற்றாக குடும்பங்கள் பாடசாலை மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இவ்வாய்வில் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அளிக்கம்பை பிரதேசத்தில் அதிகளவிலான சமூக பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டுள்ளபோது காஞ்சிரங்குடா பிரதேசத்தில் அது ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்றது. இருப்பினும் இவ்விரு பிரதேசங்களிலும் வனக்குறவர் சமூகத்திற்குரிய தனித்துவ அம்சங்கள் இழக்கப்பட்டுள்ளமையை அறிய முடிந்தது. இதனடிப்படையில் வனக்குறவர் சமூகத்தில் ஏற்பட்டுள்ள சமூக பொருளாதார மாற்றங்களானது நன்மையளித்தாலும் அவர்களது தனித்துவம் சுதேசிய அடையாளம் என்பவற்றை இழக்கச் செய்துள்ளது எனலாம்.

**திறவுச் சொற்கள்:** வனக்குறவர், நவீனமயமாதல், சமூகமாற்றம், சுதேசிய அடையாளம், அந்தஸ்து

# இளவயதுத் திருமணத்திற்கான காரணங்களும் அதன் தாக்கங்களும்: இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்களை மையப்படுத்திய ஒரு சமூகவியல் ஆய்வு

இக்பால் சௌஜான்[1]*, ராஸிக் அஹ்மட் சர்ஜுன்[2], கன்சூல் கரீம் பாத்திமா நஸ்மா[3]
[1,2,3] இஸ்லாமியக் கற்கைகள் துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்
*savjaniqbal@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

பல்வேறு சமூக, பொருளாதார, கலாசாரக் காரணிகளுக்காக பெண்களின் திருமண வயது முற்படுத்தப்படுகிறது. இலங்கையில் பெண்களின் திருமண வயது ஒரு சர்ச்சைக்குரிய தலைப்பாக தொடர்ந்தும் இருந்துவருகிறது. இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இளவயதுத் திருமண நடைமுறை அதிகரித்து வருவதும், இதனால் பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துள்ளதுடன், சிறுவர்களுக்கு எதிரான பல்வேறு வன்முறைகளுக்கும் இது வித்திட்டுள்ளது என்பதை பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இப்பின்னணியில் இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு மத்தியில் இடம்பெறும் இளவயதுத் திருமணங்களுக்கான காரணங்களை அடையாளப்படுத்துவதுடன், குறித்த திருமணம் பெண்களின் வாழ்வில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் கண்டறிய இவ்வாய்வு முயற்சித்துள்ளது. இது ஒரு சமூகவியல் கலப்பு ஆய்வாக இருப்பதுடன், ஆய்வுக்கான தரவுகள் எழுமாறு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 240 நபர்களிடம் வினாக்கொத்து மூலம் திரட்டப்பட்டதுடன், இளவயதில் திருமணம் மேற்கொண்டு விவாகரத்துப் பெற்ற 15 பெண்களிடம் கட்டமைக்கப்படாத நேர்காணலும் மேற்கொள்ளப்பட்டது. இவற்றிற்கு மேலதிகமாக, தேசிய மற்றும் சர்வதேச அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், இணைய வெளியீடுகள் போன்றன வாசிப்புக்குட்படுத்தப்பட்டன. ஆய்வின் கண்டறிதல்களுக்கு அமைய குறித்த ஆய்வுப் பிரதேசப் பெண்களின் இளவயது திருமணத்திற்கான காரணங்களில் பெற்றோர் இளவயதிலேயே திருமணம் முடித்திருத்தல், பெற்றோரின் திடீர் மரணம், சீதனம், வறுமை, குடும்பத்தில் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படல், பெற்றோரின் வற்புறுத்தல் மற்றும் கற்றலில் ஆர்வமின்மை போன்ற காரணிகள் அதிகளவில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதுடன், குறித்த திருமணத்தின் மூலம் சிசு மரணம், கருச்சிதைவு, மனஅழுத்தம், வாழ்க்கையில் விரக்தி போன்ற சவால்களை பெண்கள் எதிர்நோக்கி வருவதும் கண்டறியப்பட்டது.

**திறவுச் சொற்கள்:** கிழக்கு மாகாணம், இளவயதுத் திருமணம், பெண்கள், சிறுவர்கள், தாக்கங்கள்

# சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதார ஆபத்துக்கள்: வவுனியா மாவட்டத்தின் நகரசபை மற்றும் பிரதேச சபைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு

பா.பிரசாந்தி[1], சி.சிவகாந்தன்[2]
[1,2]சமூகவியல்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
[1]pirashanthi97@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தொழில்சார் சுகாதாரப் பாதிப்புகளை அதிகளவில் எதிர்கொள்கின்றனர். நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வில் கலப்புமுறை ஆய்வு வடிவத்தை பயன்படுத்தி வவுனியா மாவட்டத்தின் வவுனியா நகரசபை, வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை, நெளுக்குளம் பிரதேசசபை, ஈரட்டை பிரதேசசபை மற்றும் நெடுங்கேணி பிரதேசசபை என அனைத்துச் சமூகக் குடித்தொகையும் சேர்ந்த 96 சுத்திகரிப்புத் தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. நேர்காணல் மூலமான வினாக்கொத்து, விடய ஆய்வு, நேரடி அவதானம் மற்றும் நேர்காணல் மூலம் முதலாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வின் அனைத்துச் செயன்முறைகளிலும் ஆய்வு ஒழுக்கவியல் முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட கணியம்சார் தரவுகள் விவரணப்புள்ளி விபரவியல் பகுப்பாய்வுக்குட்பட்டது. விடய ஆய்வு மற்றும் பிரதான தகவல் வழங்குநருடனான நேர்காணல் மூலமாகப் பெறப்பட்ட பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வுக்குட்பட்டது. வவுனியா நகரசபை மற்றும் பிரதேச சபைகளில் பணிபுரிகின்ற மொத்த ஆய்வு குடித்தொகையினரும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளதால் இந்த ஆய்வில் எந்தவித மாதிரித் தெரிவும் பயன்படுத்தப்படவில்லை. ஆய்வு முடிவுகளின்படி 62.5% சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தொழில்சார் சுகாதார ஆபத்துக்களை எதிர்கொள்கின்றார்கள். மேலும் தொழில்சார் சுகாதார ஆபத்துக்களால் பாதிக்கப்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு எந்தவித நட்டஈடும் மற்றும் விடுமுறை ஓய்வு வழங்கப்பட்டிருக்கவில்லை. குடும்பத்தில் பொருளாதார பிரச்சினை காரணமாக தொழில்சார் ஆரோக்கிய பாதிப்பை எதிர்கொண்டாலும் விடுமுறை எடுக்காமல் தொடர்ச்சியாக சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். தொழில்சார் சுகாதார ஆபத்துக்களால் பாதிக்கப்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் 38.2%மானோர் அரசாங்க வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளனர். அதிலும் பாரதூரமான சுகாதாரப் பிரச்சினைகளுக்கு மட்டுமே வைத்தியரை நாடிச்செல்கிறார்கள். மேலும் 36.2% தங்களுக்குத் தாங்களே சுயமாகச் சிகிச்சை முறைமையை பின்பற்றுகின்றார்கள். இதனால் சாதாரணமாக தொழிலிடத்தில் ஏற்படும் காயங்களுக்கு சரியான சிகிச்சை முறைமை மற்றும் ஓய்வின்றி தம்முடைய சுத்திகரிப்பு தொழிலில் ஈடுபட்டு தொடர்ச்சியாக சுகாதார ஆபத்துக்களை எதிர்கொள்கின்றார்கள். மேலும் பெரும்பாலான சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தங்களின் நோயைப் புறக்கணித்தாலும், தங்களின் ஊதியத்தை இழக்கவோ வேலையை இழக்கவோ விரும்பாததால் தகுந்த சிகிச்சைகளின்றி தொடர்ந்து வேலை செய்தனர். மேலும் ஆரோக்கியமான வாழ்க்கைப்பாணியினைப் பொறுத்தவரையில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களில் அதிகமானோர் (79.2%) மதுபானம் அருந்துபவர்களாக காணப்பட்டுள்ளனர். அத்துடன் பிரதானமான முடிவாக சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுவதற்கான தனியாள் பாதுகாப்புக் கருவிகளின் கிடைப்பனவில் காணப்படுகின்ற பிரச்சினைகள், தனியாள் பாதுகாப்புக் கருவிகளின் குறைவான தரம் மற்றும் கிடைப்பதற்கு நீண்ட காலம் செல்லுதல் போன்றவற்றினால் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தொழில்சார் சுகாதார ஆபத்துக்களை எதிர்கொள்கின்றார்கள். அத்துடன் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு தொழில்சார் சுகாதார பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான முற்பாதுகாப்பு பயிற்சி விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டாலும் அதில் எந்தவித பிரயோசனமும் இல்லை. சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு தனியாள் பாதுகாப்பு கருவிகளை வழங்குவதன் மூலமும் அவர்களுக்கு சுத்திகரிப்புத் தொழில்சார் ஆபத்துக்களிருந்து தடுத்தல் தொடர்பான விழிப்புணர்வுகளை தொடர்ச்சியாக வழங்குவதன் மூலமும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களை தொழில்சார் சுகாதார ஆபத்துகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**திறவுச் சொற்கள்**: ஆண்கள், சுகாதார நடத்தை, சுத்திகரிப்புத் தொழில், தசைகூட்டு நோய்கள், தனியாள் பாதுகாப்புக் கருவிகள்

# மீனவர்களின் தொழில்சார் ஆரோக்கியம், வாழ்க்கைப்பாணி மற்றும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை: குச்சவெளி பிரதேச செயலகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

சா.மதுஷா[1], சி.சிவகாந்தன்[2]
[1,2]சமூகவியல்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
[1]mathusanthalingam@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்கள் மற்றும் அதிக இடர்நடத்தைகளை எதிர்கொள்ளும் சமூகக் குழுக்களாக மீனவர்கள் காணப்படுகின்றனர். இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் மீனவர்களின் வாழ்வாதாரமாக ஆழ்கடல் மீன்பிடி காணப்படுவதால் மீன்பிடிசார்ந்த ஆபத்துக்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வானது பண்புசார் மற்றும் கணியம்சார் ஆய்வு வடிவத்தை பயன்படுத்தி திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மீனவ கிராமங்களினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீனவர்களின் தொழில்சார் சுகாதாரப் பாதிப்புக்கள், வாழ்க்கைப்பாணி மற்றும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை மதிப்பிடுதலே ஆய்வின் பிரதான நோக்கமாகும். ஆய்வின் அனைத்துக் கட்டங்களிலும் ஆய்வு ஒழுக்கவியல் ஆய்வாளரால் பின்பற்றப்பட்டது. வினாக்கொத்து, விடய ஆய்வுகள், நேர்காணல்கள் மற்றும் இலக்குக் குழுக்கலந்துரையாடல் மூலம் ஆய்வுக்கான முதலாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. அடுக்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரி மூலம் ஆய்வுக்கான மாதிரி தெரிவுசெய்யப்பட்டது. அவற்றுள் ஆழ்கடல் மீன்பிடியினை மேற்கொள்பவர்கள் ஆரோக்கிய பாதிப்புக்கள் அதிகம் எதிர்கொள்வதனால் 211 பேர் ஆய்வுக்கான மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர். வினாக்கொத்து மூலம் சேகரிக்கப்பட்ட கணியம்சார் தரவுகள் SPSS உதவியுடன் விபரண புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன் மாறிகளுக்கு இடையிலான தொடர்புகளினை விபரிப்பதற்காக கைவர்க்கச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. மீனவர்களில் 40.8% ஆனோர் 42-53 வயதுப்பிரிவினராகவும், 53.6% ஆனோர் இடைநிலைக் கல்வியினைக் கற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இனத்தின் அடிப்படையில் தமிழர்கள் அதிகமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களாகக் காணப்படுகின்றனர். ஆழ்கடல் மீன்பிடியினை மேற்கொள்ளும் மீனவர்களில் பெரும்பாலானவர்களிடம் தொழில்சார் பாதிப்புக்கள் காணப்படுகின்றன. தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்களில் தசைக்கூட்டுப்பாதிப்பு, ஒவ்வாமை அதிகரிப்பு, கண்பார்வைக் குறைபாடு மற்றும் கால்வாதப்பிடிப்பு போன்ற பாதிப்புக்களினை எதிர்கொள்கின்றனர். இவற்றில் அதிகமான மீனவர்கள் தசைக்கூட்டுப் பாதிப்பிற்கு 38.5% உள்ளாகின்றனர். சமூகக் குடித்தொகைக் காரணிகளான வயது ($p<0.000$) மற்றும் கல்விநிலை ($p<0.000$) மீனவர்களின் தொழில்சார் பாதிப்புக்களில் புள்ளிவிபரவியல் ரீதியாக மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. அத்துடன் மீனவர்களின் ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்கள், மதுபானம் மற்றும் புகைத்தல் போன்ற இடர்நடத்தைகளால் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகளினை எதிர்கொள்கின்றனர். மீனவர்களின் ஆரோக்கியத்தினை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக நோயின் தன்மை, நோயின் தீவிரத்தன்மை, நோயினைத் தாங்கிக்கொள்ளும் தன்மை, தனிப்பட்ட சுகாதார நம்பிக்கைகள் மற்றும் சுகாதார வசதிகளின் கிடைப்பனவு போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. சமூகக் குடித்தொகைக் காரணிகளான வயது ($p<0.008$) மற்றும் குடியியல் அந்தஸ்து ($p<0.001$) மீனவர்களின் ஆரோக்கியத்தினை நாடிச்செல்லும் நடத்தையில் புள்ளிவிபரவியல் ரீதியாக மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. தொழில்சார் ஆரோக்கியப் பாதிப்புக்களிலிருந்து தடுப்பதற்கு சுகாதாரக்கல்வி, தனியாள் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொற்றா நோய்களுக்கான தொடர்ச்சியான பரிசோதனைகள் முதலானவற்றை வழங்குவதன் மூலம் மீனவர்களின் நல்வாழ்வு மற்றும் சிறந்த ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை என்பவற்றை மேம்படுத்த முடியும் என்பதை ஆய்வு வலுவாகப் பரிந்துரைக்கின்றது.

**திறவுச் சொற்கள்:** ஆழ்கடல் மீன்பிடி, இடர்நடத்தை, தொற்றா நோய்கள், நோய்நிலை அனுபவம், வயது

# ஆற்றுகைப் பண்பும் காட்சி நிலையும்: பாரதியின் குயில் பாட்டினை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு

கு.ரவிச்சந்திரன்[1], கா.அற்புதன்[2]
[1,2] நுண்கலைத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]ravichandrank@esn.ac.lk, [2]atputhan1902@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வானது பாரதியின் குயில் பாட்டில் ஆற்றுகைப் பண்பையும் காட்சி நிலையையும் மையமாகக் கொண்டதாகும். தற்கால நாடக சூழலில் ஆற்றுகை என்ற சொல்லுக்கு வலுவான முக்கியத்துவம் கொடுப்பதனைக் காணமுடிகின்றது. அந்தவகையில் நாடக ஆற்றுகையாளர்கள், பரிசோதகர்கள், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் மிக முக்கியத்துவம் கொடுப்பதனை அறியமுடிகின்றது. இவர்கள் ஒரு ஆற்றுகையை உருவாக்குவதற்கு பல வழிகளை கையாளுகின்றனர். பாடலூடாக சிறுகதையூடாக கவிதையூடாக இன்னும் பலவழிகள் ஊடாக மேற்கொள்கின்றனர். அந்தவகையில் பாரதியின் குயில்பாட்டு சிறந்த ஆற்றுகை அம்சங்களை கொண்ட ஒரு கவிதையாக காணப்படுகின்றது. அந்தவகையில், இவ்வாய்வானது குயில்பாட்டில் ஆற்றுகை அம்சங்களை எவ்வாறு கொண்டுள்ளது என்பதை ஆராய்வதுடன் அதனை ஒரு ஆற்றுகை வடிவமாக மேற்கொள்வதற்குரிய வழிமுறைகளையும் உற்று நோக்குவதாக அமைகின்றது. ஒரு ஆற்றுகையில் எவ்வாறான அம்சங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் அந்த அம்சங்களுடைய வகிபங்கு என்ன என்பதனையும் இவ்வாய்வு உற்று நோக்குகின்றது. இவ்வாய்வானது ஆற்றுகைக் கோட்பாடுகள் (Performance theory) ஆற்றுகைப் பயிற்சிகள், ஆற்றுகைக் கூறுகள், ஆற்றுகை உருவாக்கம் (Dramatic composition), ஆற்றுகை அணுகுமுறைகள் (Collaboration) போன்ற விடயங்களை ஆராய்வதாக அமைகின்றது. இவ்வாய்வில் பாரதியின் குயில் பாட்டு கவிதைப் பிரதி முதலாம் நிலைத் தரவாக அமைவதுடன் இதனோடு தொடர்புடைய இணையம், வெளியீடுகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், பத்திரிகைகள் இரண்டாம் நிலைத் தரவாக அமைகின்றன.

**திறவுச் சொற்கள்**: ஆற்றுகை, குயில் பாட்டு, கவிதை, காட்சி. நுட்பங்கள்

# தமிழர் பாரம்பரிய தோல் வாத்தியங்களான மத்தளம், பறை, உடுக்கை உருவாக்க முறைமையும் அதன் தொழிநுட்பங்களும் - ஓர் ஆய்வு

கு.ரவிச்சந்திரன்,[1] சு.சஞ்சீபன்,[2]
[1,2]நுண்கலைத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]ravichandrank@esn.ac.lk, [2]sanseepan567@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

மனித சமூகத்தில் காணப்படுகின்ற இசைக் கருவிகளுள் தோல்வாத்தியங்கள் மிகத் தொன்மையானவை. உலகில் எல்லாச் சமூகங்களிலும் காணப்படும் ஒன்றாகவும் இது காணப்படுகின்றது. மிருகங்களின் தோல், மரக்குற்றி போன்ற பொருட்களை இணைத்து வெவ்வேறு வடிவங்களில் இத்தோல்வாத்தியங்கள் உருவாக்கப்படுகின்றன. உலகில் பண்டைய காலத்தில் இருந்து சமகாலம் வரை பல சமூக, இனக்குழுமங்களால் பயன்படுத்தப்படும் பொதுவான இசைக் கருவிகளாகத் தோல் வாத்தியங்கள் காணப்படுகின்றன. இவை இடத்திற்கு இடம், சமூகத்திற்குச் சமூகம் அதன் அமைப்பிலும் அதன் இசை வெளிப்படுத்துகை முறையிலும் வேறுபாடுகள் உடையனவாகக் காணப்படுகின்றன. தமிழர் வாழும் பிரதேசங்களில் அதிகளவான தோல்வாத்தியங்கள், சடங்குகளை மையமாகக் கொண்டும் ஆற்றுகைகளை மையமாகக் கொண்டும் பொழுதுபோக்கு நிகழ்வுகளை மையமாகக் கொண்டும் பயில்நிலையில் இன்றுவரை பயன்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். உள்நாட்டு யுத்தம் மற்றும் சமூக பண்பாட்டு ஊடாட்டங்களின் தாக்கம், நகர மயமாக்கம், புதிய தொழிநுட்ப கருவிகளின் வருகை போன்ற பிற காரணிகளின் தாக்கம் ஓர் பாரம்பரிய தொழில்முறையான தோல்வாத்திய கருவிகளின் உருவாக்கச் செயற்பாட்டில் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது என்ற கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு ஓர் பண்புசார் ஆய்வாக இதனை மேற்கொண்டும் விபரண முறையியலும் அமையப்பெற்று ஓர் பங்குபற்றுதல் முறையினூடாக விபரிக்கப்படுகின்றது. ஆய்வினூடாக நீண்டகால, குறுகியகால நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் இருந்து தற்காலம் வரை தோல் வாத்திய உற்பத்தி தொழில்நுட்பமானது எவ்வாறு காணப்பட்டது என்பதனை கண்டுகொள்வதும், பாரம்பரியமான முறையில் அமைந்த பட்டறை முறைமையின் மூலம் அதன் உருவாக்கமுறையை கண்டுகொள்ளுதலும், தோல்வாத்தியங்கள் உருவாக்கப்படும் முறை தொடர்பான நுணுக்கங்களைக் கண்டுகொள்வதும் அதனை பிறர் அறியச் செய்வதும் இவ்வாய்வின் ஊடாக நிறைவேற்றப்படுகின்றது. இத்தகைய பயிற்சிகளையும் நுட்பங்களையும் கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலக பிரிவில் உள்ள குடும்பிமலைப் பிரதேசத்தில் வசிக்கும் தொழில்முறைக் கலைஞர் பொன்னுச்சாமி சுந்தரமூர்த்தி அவர்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின் ஊடாக தோல் வாத்திய உற்பத்தி தொழில்நுட்பங்களான குத்தி கடைதல், தோல் பதப்படுத்தல், வார் வெட்டி உருவாக்குதல், முத்திரை கட்டுதல், இவை அனைத்தையும் இணைத்து குத்தியில் ஏற்றுதல் போன்ற தொழிநுட்பமுறைமையான பல நுணுக்கங்களைக் கொண்டு மத்தளம், பறை, உடுக்கை போன்ற தோல் வாத்தியங்களின் பாரம்பரியமான உருவாக்க தொழிநுட்பத்தை மீண்டும் இச்சமூகத்திற்கு அறிமுகப்படுத்தும் நோக்குடன் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது.

**திறவுச் சொற்கள்:** தோல்வாத்தியம், பட்டறை முறை, பங்குபற்றுதல், தொழில்முனைவு, முத்திரைக்கட்டு

# சி.மௌனகுருவின் நாடகங்களிலும் ஆற்றுகைகளிலும் பௌராணிகத் தொன்மங்கள்

செ.வெவோகா,[1] சாந்தி கேசவன்*[2]
[1,2]இந்துநாகரிகத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
*kesavans@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

சி.மௌனகுரு அவர்களின் நாடகங்களிலும் ஆற்றுகைகளிலும் காணப்படுகின்ற பௌராணிகத் தொன்மங்கள் பற்றியதாக இவ்வாய்வு அமைகின்றது. இவரது நாடகங்கள் எனும் போது ஆற்றுகைக்குட்படுத்தப்பட்ட, ஆற்றுகைக்குட்படுத்தப்படாத நாடகங்களினைக் குறிப்பதாகும். ஏனெனில் நாடகங்கள் அனைத்தும் ஆற்றுகைக்குள் எடுத்துக் கொள்ளமுடியாது. அந்தவகையில் இவரது நாடகங்கள் ஆற்றுகைக்குட்பட்டும், ஆற்றுப்படுத்தப்படாது எழுத்துப் பிரதிகளாகவும் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். பௌராணிகத் தாக்கம் தமிழ்நாட்டிலுள்ள பல எழுத்தாளர்களிடமும் நாடக ஆசிரியர்களிடமும் காணப்படுகின்றது. பௌராணிகம் என்பது எங்கள் மத்தியில் உள்ள புராண, இதிகாச, நாடோடிக் கதைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஐதிகங்கள் ஆகும். ஐதிகங்கள் என்பது உண்மையல்லவாயினும் அதற்குள் உண்மை தேடுபவர்களும் உண்டு. அந்த ஐதிகங்களை வைத்துக் கொண்டு பலர் அப்படியே நாடகம் செய்துள்ளனர். சிலர் அதனை வைத்துக்கொண்டு அதற்குப் புதிய விளக்கம் அளித்து நாடகம் செய்துள்ளனர். சிலர் அதனை வைத்து புதிய விளக்கம் அளிப்பதுடன் சமகாலப் பிரச்சினைகளை அதனூடாகக் கொண்டு வந்துள்ளனர். சி.மௌனகுரு அவர்களது நாடகங்கள் மூன்றாம் வகைக்குரியன. இவர் பௌராணிகக் கதைகளை எடுத்து சமகாலப் பிரச்சினைகளைக் கொண்டுவந்துள்ளார். அந்த வகையில் இவர் பெண்ணடக்குமுறை, வர்க்க அடக்குமுறை, சாதியடக்கு முறை, தொழிலாளர் அடக்குமுறை, இன அடக்குமுறை, சூழல் பாதுகாப்பு போன்ற சமகால பிரச்சினைகளைத் தமது நாடகங்களில் கொண்டு வருகின்றார். ஆனால் அவற்றிற்கு அவர் பௌராணிகத் தொன்மங்களையே துணையாகக் கொள்கின்றார். இவ்வாய்வினூடாக நாடகங்கள் மற்றும் ஆற்றுகைகளில் பௌராணிக மரபினை எடுத்துரைத்து தொன்மவியல் பற்றிய அறிவினையூட்டல், நாடகத்துறைக்குரிய பேராசிரியராக இருப்பினும் பௌராணிகக் கதைகள் ஊடாக தனது நாடகத்தில் சமூகவியல் கருத்துக்களை எடுத்துரைக்கும் முறை, மௌனகுரு அவர்களின் நாடகங்கள், ஆற்றுகைகள் என்பவற்றினூடாகத் தொன்மங்களைக் கையாள்வதன் மூலம் சமூகத்திற்கு எடுத்துரைக்கும் விடயங்கள் என்பவற்றை அறிவதனை நோக்காகக் கொண்டு ஆராயப்படுகின்றது. இவ்வாய்விற்கான தரவுகள் அவரது ஆசான், மாணவர்கள், நண்பர்கள் போன்றோரைச் செவ்விகாண்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டன. அத்துடன் மௌனகுரு எழுதிய நூல்கள், நாடக நூல்கள், நாடகப் பிரதிகள் (scripts), ஆற்றுகை பிரதிகள் (scrips), நாடகம், ஆற்றுகை வீடியோக்கள், மௌனகுரு பற்றிய ஏனையவர்கள் எழுதிய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் குறித்த தலைப்புடன் தொடர்புள்ள இலக்கியங்கள் என்பவற்றில் இருந்து இவ்வாய்விற்கான தரவுகள் பெறப்பட்டன. இவ்வாய்வானது, பகுப்பாய்வு, வரலாற்றாய்வு, விவரண ஆய்வு, முருகியல் (Aesthetic research) ஆய்வு போன்ற ஆய்வுமுறையியல்கள் பயன்படுத்தப்பட்டு ஆராயப்படுகின்றது. இவ்வாய்வினூடாக மௌனகுருவின் நாடகங்கள் ஆற்றுகைகள் என்பவற்றில் பௌராணிகத் தொன்மங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன. அவற்றினூடாக எத்தகைய கருத்துக்கள் சமூகத்திற்கும், மக்களிற்கும் விளக்கப்படுகின்றன. இதற்கு அவரால் மேற்கொள்ளப்படுகின்ற உத்திகள், கோட்பாடுகள் போன்றனவற்றையும் தொன்மங்களினை மறுவாசிப்பிற்குட்படுத்தல், புதிய முறையில் விளக்கத்தினைக் கொடுத்து வியாக்கியானப்படுத்தல், நவீனகால சமூகத்திற்கு விளங்கும் வகையில் மொழிநடையினை இலகுவாகக் கைக்கொள்ளல், தொன்மத்தின் மரபுகளை புதிய முறையில் அணுகுதல் மற்றும் இவற்றின் மரபுரீதியிலான வழக்கங்களை மாற்றி அமைத்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களினை எடுத்துரைப்பதாகவும் காணப்படுகின்றது. இவ்விடயங்களை ஆராய்வதாகவும் அவர் ஏன் இம்முடிவிற்கு வந்தார் என்பதையும் ஆராய்வதாகவும் ஏனைய இது போன்ற நாடகங்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதாகவும் இவ்வாய்வு அமையும்.

**திறவுச் சொற்கள்:** சி.மௌனகுரு, பௌராணிகம், தொன்மங்கள், ஆற்றுகைகள், நாடகங்கள்

# Cooking as a public performance - A study based on 'Ezhuththaani' play

R.Sulaxshana
Department of fine arts, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka
rajendransulaxshana@gmail.com

## Abstract

This paper discusses the importance of recalling and reviving our own local food preparations and cooking practices through Ezhuththaani play. Because of the Colonizing of our mind, there is a myth surrounding with us that we couldn't produce anything for ourselves. In this way, we purposefully omit ourselves from creation and production. Throughout these lifetime practices, we depend on others to fulfill our own needs until now. In this consumer culture, we often consume but we couldn't manufacture anything because of the colonization of our mind. Multinational companies cunningly grow up their business through persuasion that consumers couldn't manufacture. And also alienate ourselves from organic tastes, and addict to some kind of artificial tastes. Among these long-term processes, they had made our own food pattern and food culture forgettable. However, in this critical period, we must recall our own food preparations to protect our lives. In this way, this paper argues the importance of local food culture through Ezhuththaani play. Here we recall our food pattern and culture through performing cooking as a public performance.

**Keywords:** Cooking as a public performance, consumer culture, manufacturer, colonizing

# வவுனியாப் பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் பற்றிக் (Batik) உற்பத்தியினைப் பயிலுவதன் ஊடாக அதன் அழகியல் வடிவமைப்புக்களில் தமிழர் மரபுசார் வடிவமைப்புக்களை வெளிப்படுத்தல்

சதாசிவம் மகிலினி[1], துஷ்யந்தி சத்தியஜித்[2]
[1,2] நுண்கலைத்துறை, கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]makilini96@gmail.com, [2]sathiyajitht@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையில் தனித்துவ ஆடைவடிவமைப்புடன் கூடிய தொழிலாக பற்றிக் உற்பத்தி இடம்பெற்று வருகின்றது. பெரும்பான்மையாக சிங்கள மக்களிடையே பற்றிக் பண்பாடு அதிக தாக்கம் செலுத்திய போதிலும் வடமாகணத்தில் தமிழ் மக்களிடையே சுயகைத்தொழில் முயற்சியாக இது இடம்பெற்று வருகின்றது. வடமாகாணத்தில் அமைந்துள்ள வவுனியா மாவட்டத்தில் அதிகளவாக தமிழ் மக்கள் சுய கைத்தொழில் முயற்சியாக பற்றிக் உற்பத்தியில் ஈடுபட்டு வருமானம் ஈட்டி வருகின்றனர். இங்கு பெரும்பாலும் பொதுவாக காணப்படும் மலர் அலங்கார வடிவங்களே பயன்பாட்டில் உள்ளன. இது இப்பிரதேசத்தில் இவ்வுற்பத்திக்கான நுகர்வுத்தன்மையினை குறைத்துள்ளமை புரிதலுக்குரியது. எனவே தமிழர் மரபுசார் விடயங்கள் அலங்கார வடிவங்களாக மிகக் குறைவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள மையினால் தமிழ் மக்களிடையே பற்றிக் ஆடைகளுக்கான நுகர்வுத்தன்மை ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்றமை தெளிவாகிறது. இதுவே ஆய்வின் பிரச்சினையாக அமைந்துள்ளது. அதனால் தமிழ் மக்களிடையே உற்பத்தியையும், நுகர்வினையும் அதிகரிக்கும் நோக்கிலும் பற்றிக்கில் தமிழர் மரபுசார் அலங்காரங்களை வெளிப்படுத்துவதையும் நோக்காகக்கொண்டு பற்றிக் உற்பத்தியாளர்களுக்கு ஆய்வாளரால் தமிழர் மரபுசார் அலங்காரங்கள் வரைந்து முன்வைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் பற்றிக் உற்பத்தியாளர்கள் இவ்வாறான வடிவமைப்புக்களை முன்னெடுப்பதன்மூலம் பிரதேசம் சார் உற்பத்திகளை தனித்துவ அடையாளங்களுடன் வெளிக் கொண்டுவருதல், உற்பத்தியை அதிகரித்து கேள்வியைக் கூட்டி நுகர்வினை அதிகரித்தல், பிரதேசம்சார் உற்பத்திகளை சமூகத்திற்கு வெளியேயும் பரவலாக்கம் செய்தல் என்பவற்றை பிரதான நோக்கங்களாக கொண்டு இவ்வாய்வு அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்**: சுயதொழில், உற்பத்தி அதிகரிப்பு, பண்பாடுசார் வடிவங்கள், புதிய வடிவமைப்புக்கள், அலங்காரங்கள்

# பெரியதம்பிரான் சடங்காற்றுகையில் ஏற்பட்ட மாற்றங்கள்: மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

சு.சந்திரகுமார்[1*], கு.மதுசாந்[2]
[1,2]நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழம், இலங்கை,
*srckumar20yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைய சமூகங்கள் தோற்றம் பெற்ற காலம் முதலே சமூகக் குழுமங்களும் தோன்றியிருக்கின்றன. இதன் வழித் தோன்றலாக சடங்காற்றுகையில் உள்ள வழிபாட்டு மரபுகளும் நடைமுறையில் இருந்தே வந்துள்ளன. மட்டக்களப்பில் குறிப்பாக ஏறாவூர்ப் பிரதேசத்தில் பெரியதம்பிரான் கோயில் சடங்காற்றுகை நிலவியமைக்கான சான்றுகள் பல காணப்படுகின்றன. இன்றைய நிலையில் இவ்வாறான வழிபாட்டு முறைகள் ஏனைய வழிபாட்டு நுட்பங்களையும் தன்னுள் உட்புகுத்தி பரவலடைந்து வருகின்றன. சாதிக்கொரு கோயில் என்ற மரபின் அடிப்படையில் அமையப்பெற்ற பெரியதம்பிரான் கோயில்களை மையமாகக் கொண்ட இனக்குழுக்கள் தங்களுடைய அடையாளத்தை உயர்த்தப்பட்டோர் எனப்படுகின்றவர்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் நடைமுறைகளைத் தமதாக்கிக் கொள்வதன்மூலம் அழிக்கின்றனர். குறிப்பாக, தாமும் அவர்களைப் போலவே உயர் பண்புடையவர்களாகச் சமூகத்தில் மதிக்கப்படுவோம் என்ற நிலையற்ற மேன்நிலையாக்கத்தினுள் உட்புகுத்தப்படுகின்றனர். இது இந்துத்துவ வர்ணாசிரம தர்மப் பின்புலத்தில் எளிய சாதியினர் என ஊர்களின் வெளிப்புறத்தே ஒதுக்கப்பட்டு விலங்குகளிலும் கேடாக அடக்கி ஒடுக்கப்பட்ட இனக்குழுமங்களைத் தமக்கான பண்பாட்டை அடகு வைத்துத் தமது மரபுகளில் குறிப்பிடப்பட்டவைகளுக்குப் புறம்பாகச் செயற்படுகின்ற நிலையுடன் தமக்குள்ளே தம்மை இரண்டாம் தரப்பினராக்க முயற்சிக்கும் போக்கை ஏற்படுத்தும். ஏறாவூர் பெரியதம்பிரான் கோயில் சடங்காற்றுகை மரபானது வண்ணார் சமூகக் குழுமத்தின் விடியலுக்காய், உள ஆற்றுப்படுத்தலுக்காய் தனித்துவமான பண்புகளைக் கொண்டு இருக்கின்றது. இதற்குப் பல ஆதாரங்களைக் கொண்டு விளக்கியுள்ளதோடு, பெரியதம்பிரான் கோயில் சடங்காற்றுகை மாறுதல்களையும் மேன்நிலையாக்க முயற்சிகளையும் இன்றும் மேற்கொண்டு வருகின்றமையும் அதற்கான காரணங்களையும் மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசங்களில் அமைந்துள்ள பெரியதம்பிரான் கோயில்களை மையமாகக் கொண்டு விளக்கியுள்ளது. அத்தோடு, அதிலிருந்து விடுபடுவதற்கான நடைமுறைசார் கருத்துகள் பற்றியும் வியாக்கியானிக்கப்படுகின்றது. இவ்வாய்வு சலவைத்தொழில் சமூகத்தின் மத்தியில் உள்ள பெரியதம்பிரான் கோவில் சடங்கில் ஏற்பட்ட மாற்றங்களையும், அதற்கான காரணங்களையும் கண்டறிதலாகும். மாற்றங்கள் அதற்கான காரணங்கள், இதனால் அவர்களது வாழ்வியலில் ஏற்பட்ட தாக்கங்கள் பற்றியதாக இவ்வாய்வு அமைகின்றது. இது நேர்காணல், கள ஆய்வு முறையுடன் தகவல்கள் சேகரிக்கப்பட்டு விபரண முறையில் பகுக்கப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:** பெரியதம்பிரான், வண்ணார் சமூகக்குழுமம், நிலையற்ற மேனிலையாக்கம், பண்பாட்டை அடகுவைத்தல், அடையாள அழிப்பு

# இந்துப் பாரம்பரியத்தில் ஓலைச்சுவடி - ஆரையம்பதி பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

வரதராசா வஷ்மியா[1], சாந்தி கேசவன்[2]
[1,2]இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]vasmiya1234@gmail.com, [2]kesavans@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

உலகில் மிகப் பழமையான பாரம்பரியம் இந்துப் பாரம்பரியம் ஆகும். இவற்றை அறிந்து கொள்வதற்காக பல தொல்லியல் ஆதாரங்கள் உள்ளன. அவற்றில் ஓலைச்சுவடியும் ஒன்றாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பழந்தமிழ் கிராமமான ஆரையம்பதி கிராமத்திலுள்ள பாரம்பரியத்தை அறிந்து கொள்வதற்காக பல தொல்லியல் ஆவணங்கள் உள்ளன. அந்த வகையில் ‘‘இந்துப் பாரம்பரியத்தில் ஓலைச்சுவடி - ஆரையம்பதி பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு’’ எனும் தலைப்பின் கீழ் ஆய்வானது ஆரையம்பதி மக்களை நேர்காணல் கண்டு அவர்களின் ஓலைச்சுவடி பாவனையும் அக்கிராமத்தில் பண்டைய மக்கள் ஓலைச்சுவடிகளைப் பயன்படுத்திய விதத்தினையும் மற்றும் இந்துப் பாரம்பரியம் மாறாமல் பின்பற்றும் பழம்பெரும் கிராமமான ஆரையம்பதி கிராமத்தின் சிறப்பு, அங்குள்ள சுவடிகள் பற்றியும், சுவடிகளில் உள்ள விடயங்கள் பற்றியும் எடுத்துக் காட்டுதல், ஓலைச்சுவடியின் புனிதத்தன்மையை வெளிக்கொண்டு வருதல், ஆரையம்பதி கிராமத்தில் மறைந்துள்ள பல விடயங்களை எடுத்துக்காட்டுதல், இது வரை காலமும் ஓலைச்சுவடி பற்றி அறியாத பல தகவல்களை வெளிக்கொணர்தல், ஓலைச்சுவடிப் பாதுகாப்பு பற்றிய தகவல்களை வெளிப்படுத்தல், ஆவணக் காப்பகங்களின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தல், ஓலைச்சுவடி அழிவடைவதற்கான காரணத்தை கண்டறிதல் போன்றவை ஆய்வின் பிரதான நோக்கங்களாகும். ஆரையம்பதி கிராமத்திலுள்ள சோதிடர்கள், வைத்தியர்கள் போன்றவர்களை சந்தித்து அவர்களின் மருத்துவம் மற்றும் சோதிட சுவடிகளையும் மற்றும் குறிப்புகளையும் ஆய்வு செய்து ஆய்விற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அவர்களுடன் உரையாடி சுவடிகளின் புகைப்படங்களும் பெறப்பட்டன. இவ்வாய்விற்காக வரலாற்றாய்வு, விபரண ஆய்வு, பகுப்பாய்வு போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் ஆரையம்பதி கிராமத்தில் மறைந்து உள்ள சுவடிகளையும், ஆரையம்பதி சமூகத்திலுள்ள மக்கள் மத்தியில் ஓலைச்சுவடிகள் பற்றிய சிந்தனைகள் எவ்வாறான நிலையில் காணப்படுகின்றது என்பதையும், இன்றைய காலத்தில் ஓலைச்சுவடிகள் அழிவடைவதற்கு காரணம் சமூகத்தின் மத்தியில் காணப்படும் அறியாமையே என்பதையும், ஓலைச்சுவடி பாதுகாக்கவேண்டிய ஒன்று என்பதையும் வெளிப்படுத்த முடிகின்றது. இதை ஒவ்வொரு சமூகத்தினரும் உணர்ந்து பாதுகாக்கவேண்டும். பாரம்பரிய மருத்துவம், சோதிடம், மாந்திரீகம் மற்றும் அக்கால மக்கள் பின்பற்றி வந்த வாழ்வியல் நடைமுறைகள் என்பவற்றை இவ்வாய்வின் ஊடாக அறிந்து கொள்ள முடிந்தது. இவ்வாய்வு ஓலைச்சுவடிகளின் மகத்துவத்தை அறியவும் பிற்காலத்தில் இது போன்ற ஆய்வுகளை மேற்கொள்ளவும் வழிவகுக்கும் எனலாம்.

**திறவுச் சொற்கள்**: ஓலைச்சுவடி, ஆரையம்பதி, மருத்துவம், சோதிடம், மாந்திரீகம்

# கதிரவெளி வதனமார் வழிபாட்டு முறைகளும் சமூக வழமைகளும்

உ. ஜீவதர்சன்
இந்துநாகரிகத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
u.jeevatharsan861@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

மனித சமூகம் தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உள்ளது என்பதனை என்று உணரத்தலைப்பட்டதோ அன்றே வழிபாடுகள் தோற்றம் பெறத் தொடங்கின. இவ்வகையில் உலகின் பல பாகங்களிலும் பல்வேறு வகையான வழிபாடுகள் தோற்றம் பெற்றன. அந்த வகையில் இந்துசமய மரபில் இந்தியாவிலும் இலங்கையிலும் பல்வேறு வழிபாடுகள் தோற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வடிப்படையில், இலங்கையில் நிலவுகின்ற மரபுரீதியான வழிபாட்டு முறைகளில் ஒன்றாக வதனமார் வழிபாடு காணப்படுகின்றது. அவ்வடிப்படையில், 'கதிரவெளி வதனமார் வழிபாட்டு முறைகளும் சமூக வழமைகளும்'எனும் தலைப்பில் அமையப்பெற்ற இவ்வாய்வானது, தொழில் விருத்தியை நோக்கமாகக் கொண்டு ஆற்றப்படுகின்ற வழிபாட்டுச் சடங்காக வதனமார் வழிபாட்டினை அடையாளப்படுத்துதல், ஆய்வுப் பிரதேசமான கதிரவெளிப் பகுதியில் நிலவுகின்ற வதனமார் வழிபாட்டு முறைகளை அடையாளப்படுத்துதல், அத்தகைய வதனமார் வழிபாட்டின் சமூக வழமைகளை வெளிக்கொணர்தல் போன்ற விடயங்களை நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வில் ஆய்வுப் பிரதேசத்தில் அமையப்பெற்ற கதிரவெளி வதனமார் தாய்க்கோயிலில் நடைபெறும் சடங்கு முறைகளையும் அவற்றில் இடம்பெறும் பிரதான விடயங்களையும் தெளிவுபடுத்தும் வகையில் விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு போன்ற ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இலங்கையில் பல்வேறு இடங்களில் காணப்படுகின்ற வதனமார் வழிபாட்டுச் சடங்குகளில் இருந்து கதிரவெளி வதனமார் வழிபாடானது தனித்துவம் பெற்று விளங்குகின்றது. இத்தகைய தனித்துவத்தின் தன்மை எத்தகையது என்பதை அறிந்து வெளிப்படுத்துவதுடன் அவ்விடயத்தை வெளிப்படுத்த ஏற்ற வகையில் ஒப்பீட்டாய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. வதனமார் வழிபாட்டு முறைகள் கதிரவெளிப் பகுதியில் வாழும் மக்களின் சமூக வாழ்வியலில் சமய நம்பிக்கைகள், வாழ்வாதார தொழில் நடவடிக்கைகள், பழக்கவழக்கங்கள், கலைகள் உள்ளிட்ட இதர வாழ்வியல் அம்சங்களில் பிரதிபலிக்கின்றது. இவ்வழிபாட்டு முறையின் நீட்சி சமூக வாழ்வியலுக்கும் வழிபாட்டிற்கும் இடையிலான பிணைப்பைக் காட்டுகின்றது. சுருங்கக் கூறின் வதனமார் வழிபாட்டு முறையியலினூடாக சமூக வாழ்வியல் அம்சங்கள் பிரதிபலிக்குமாற்றினைத் தெளிவுபடுத்தும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது.

**திறவுச் சொற்கள்:** வதனமார் வழிபாடு, வாழ்வியல், சமூக வழமைகள், பூசாரிமார், போடிமார்

# கதிரவெளிப் பெரியசுவாமி கோயில் வழிபாட்டு மரபுகளும் மாற்றங்களும்

அ.தனோஜன்
இந்துநாகரிகத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
thanujanthano@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட இந்து சமய வளர்ச்சியில் சடங்குகள் காத்திரமான பங்கு வகிக்கின்றன. இத்தகைய சடங்குகளுள் உள்ளூர்ச் சமூகங்களின் கடவுள் நம்பிக்கைகளுடன் சம்மந்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சடங்குகள் இன்றைய காலத்தில் பல்வேறு வகைகளில் முக்கியம் பெற்றவையாக விளங்கி வருகின்றன. அந்த வகையில் கதிரவெளிப் பெரியசுவாமி கோயில் வழிபாட்டு மரபுகளும் மாற்றங்களும் என்னும் இவ்வாய்வானது காலங்காலமாக இடம்பெற்று வந்த வழிபாட்டு சடங்குகள் பற்றியும் அவை தொடர்பான மாற்றங்கள் பற்றியும் வெளிப்படுத்துவதாக அமைகிறது. இவ்வாய்வில் பெரியசுவாமியின் தோற்றம் பற்றிய மரபுவழிக் கதைகள், சடங்கினுடைய தோற்றம் அதன் கலைக்கூறுகள் இதனை முன்னின்று நடாத்தும் சமூகங்கள் அவர்களது சமய கலாசார பண்பாட்டம்சங்கள், கோயில் வளர்ச்சி படி நிலைகள், மக்களின் வாழ்வியல் அம்சங்கள், மரபுவழி மாற்றங்கள் என்பன சிறப்பிடம் பெறுகின்றன. இவையனைத்தும் வெளிக்கொண்டுவரப்படாமையினால் இவற்றினை வெளிக்கொண்டு வருவதை ஆய்வு பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்குரிய மூலங்களாக கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் கள ஆய்வு, பங்குபற்றுதல், அவதானம் மற்றும் நேர்காணல் போன்றவை அமைகின்றன. இவ்வாய்வு பெரியசுவாமி வழிபாட்டை மையப்படுத்தியதாக அமைந்தாலும் சடங்கு தொடர்பான பூரண விளக்கங்கள், விதிமுறைகள், பயன்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கின்றன. மேலும் நூலாசிரியர், காலச்சூழல், நூலின் கட்டமைப்பு என்பவற்றுடன் சமுதாய மக்களின் பண்பாட்டு ரீதியான சடங்குகள், பழக்கவழக்கங்கள், வழிபாட்டு முறைகள், கிராம அமைப்பு, மற்றும் சாதி முறைமை, சடங்கின் தற்கால போக்குகள் என்பன இவ்வாய்வை வலுப்படுத்துகின்றன. இவ்வாய்வில் கூறப்பட்டுள்ள கருத்தியல்களின் மூலமாக இன்றைய சமுதாயத் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றிற்கேற்ப செயற்பட வேண்டிய முறைகளை இந்து சமய சடங்குகளின் ஊடாக இவ்வாய்வு எடுத்துக் கூறுகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நூல் தொடர்பாக இந்து மக்கள் அறிந்து கொள்வதற்கு சமய சீர்திருத்தச் செயற்பாடுகள் அவசியமாகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**திறவுச் சொற்கள்:** கதிரவெளி, பெரியசுவாமி வழிபாடு, பூர்வீக குடிகள், போடிமார், பெட்டகம்

# பத்தாசிசார் வழிபாட்டுப் பாடல்கள் பிரதிபலிக்கும் இந்து சமயப் பண்பாட்டம்சங்கள்

கிருபைரெத்தினம் சர்வேஸ்வரன்
இந்துநாகரிகத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
sarwesh1177@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியங்கள் சமூகத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடிகள் என்று அடையாளப்படுத்தப் படுகின்றன. அதன்படியே பத்தாசிசார் சடங்குப் பாடல்களிலும் தமிழ்ச் சமுதாயத்தின் பல்வேறுபட்ட பண்பாட்டம்சங்கள் விளக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். சங்ககால, சங்கமருவிய கால இலக்கியங்களில் எவ்வாறு அக்கால பழந்தமிழர்களின் வாழ்வியல் அம்சங்கள் பேசுபொருளாக்கப்பட்டிருந்தனவோ அதனைப் போன்றே சடங்குப் பாடல்களிலும் கிராமிய நாட்டுப்புற மக்களது வாழ்வியல் அம்சங்கள் சிறப்புற விளக்கப்பட்டுள்ளன. மருத்துவம், கலை, வழிபாடு, நம்பிக்கைகள், தத்துவம், பக்தி மற்றும் அறிவியல் போன்ற பல்வேறுபட்ட பண்பாட்டியல் கூறுகளைச் சடங்குப் பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அவ்வாறான சடங்குப் பாடல்களின் பண்பாட்டம்சங்களை மையப்படுத்தியதாகவே இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாறான சடங்குப் பாடல்களினுள் அம்மானை, அகவல், காவியம், கும்மி, தாலாட்டு, ஊஞ்சல், குளிர்த்தி போன்ற பல்வேறு வகையான பாடல் வகைகள் காணப்படுகின்றன. அவை இந்துசமயத்தவர்களினால் வணங்கப்படுகின்ற பல்வேறு வகையான தெய்வங்களுக்காகப் பாடப்பட்டவையாக அமைந்துள்ளன. அத்தகைய சடங்குப் பாடல்களில் முக்கியமானவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு நகர்த்திச் செல்லப்படுகின்றது. இவ்வாய்வின் எல்லை மட்டக்களப்புப் பிரதேச சடங்குக் கோயில்களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான முதன்மை மூலங்களாகச் சடங்குக் கோயில்களில் களஆய்வு செய்து பெறப்பட்ட தகவல்களும், கோயிற் பூசகர்களைச் செவ்வி கண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளும் பயன்படுத்தப்பட்டன. துணை மூலங்களாகச் சடங்குப் பாடல்கள் தொடர்பாக வெளிவந்த நூல்களும், அவை தொடர்பான பழமையான ஏடுகளும் எடுத்தாளப்பட்டன. கோயில்களிலும், கோயிற் பூசகர்களிடமும் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு களஆய்வு முறையும், இலக்கியங்களை ஆய்வு செய்வதற்கு விவரண ஆய்வு முறையும், சங்க இலக்கியங்களுடன் சடங்குப் பாடல்களை ஒப்பிட்டு நோக்குவதற்கு ஒப்பியல் ஆய்வு முறையும் ஆய்வு முறையியல்களாகப் பயன்படுத்தப்பட்டன. சங்க கால மற்றும் அறநூற்கால இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு பழந்தமிழர்களின் பண்பாட்டியல் கூறுகள் விளக்கப்படுகின்ற தற்காலத்தில் பாமர மக்களின் பக்தியின் வெளிப்பாடாகத் தோன்றிய சடங்குப் பாடல்களில் இழையோடியுள்ள தமிழர்களின் பண்பாட்டம்சங்களை அடையாளப்படுத்தும் நோக்குடன் இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** சடங்குப் பாடல், பத்தாசி, கோயில், பூசை

# மட்டக்களப்பு இந்துக்களின் வழிபாட்டில் குலக்குறியம்

கோ.ஆரணி[1] & ந.சுபராஜ்[2]
[1]இந்துநாகரிகத்துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[2]இந்துநாகரிகம், மொழித்துறை, கலை கலாசார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]aarani525@gmail.com, [2]subaraj84@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

மட்டக்களப்புத் தமிழகம் பல்லினப் பண்பாட்டையும், பல்லின மக்களின் வாழ்க்கை முறைகளையும் கொண்ட பிரதேசமாகும். இந்துப்பண்பாட்டு மரபின் தனித்துவத்திற்கு இம்மாவட்டமெங்கும் நிறைந்துள்ள சிறியளவும், பெரியளவுமாகிய கோயில்களே சான்று பகர்கின்றன. பண்பாட்டு வேர்கள் ஆழமாகப் புதைந்து போயிருக்கும் இப்பிரதேசத்தின் இந்து வழிபாட்டம்சங்களை பல்வேறு கட்டமைப்பில் வகைப்படுத்த முடியும். அவற்றில் ஒன்றாக குலக்குறி வழிபாடு காணப்படுகின்றது. குலக்குறியியம் மனித வாழ்க்கை முறையோடு காலங்காலமாகப் பரிணாமம் அடைந்து வரக்கூடிய ஒரு அடையாளம் அல்லது குறியீடு சார்ந்த வடிவமாகும். குலக்குறி என்பது “டோட்டம்” (Totem) எனவும், குலக்குறியியம் என்பது “டோட்டமிசம்” (Totemism) எனவும் அழைக்கப்படுகின்றன. இதில் விலங்கையோ பறவையையோ ஒரு பொருளையோ தங்களது குலக்குழு முழுமைக்கும் வழிகாட்டியாக, வணக்கத்திற்குரியதாக, மூதாதையர்களாகக் காண்பர். மட்டக்களப்பு மாவட்டத்தில் குலக்குறி சார்ந்த வழிபாடுகளையும் தெய்வங்களையும் அடையாளங் காணல், அவற்றிலுள்ள குலக்குறி வழிபாட்டிற்கான பண்புகளை விபரித்தல், அவற்றின் இன்றைய நிலைமைகள் பற்றி விளக்குதல் போன்றன இவ்வாய்வின் நோக்கங்களாகக் காணப்படுகின்றன. மட்டக்களப்பில் தனித்துமான வழிபாடாக விளங்கும் ஆகமம் சாரா வழிபாட்டின் ஒரு அங்கமாக குலக்குறி வழிபாடு காணப்படுகின்றது. இருப்பினும் குலக்குறி வழிபாட்டின் தன்மைகளைத் தழுவியே ஆகமம் சாரா வழிபாடுகள் இங்கு நடைபெறுகின்றன எனும் புரிதல் இப்பிரதேச மக்களிடம் காணப்படுகின்றனவா? என்பது ஆய்வுப்பிரச்சினையாக உள்ளது. குலக்குறி வழிபாட்டின் தனித்துவமான இயல்புகளையும் சிறப்புக்களையும் மட்டக்களப்பு மாவட்ட ஆகமம் சாரா வழிபாடுகளில் ஒன்றான ஆண் தெய்வ வழிபாடுகள் குலக்குறி வழிபாட்டின் மரபினை பேணி நிற்கின்றன எனும் கருதுகோளினை முன்வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் புராதன குலக்குறி வழிபாட்டு நெறிகளில் குமார தெய்வம், வதனமார், வைரவர் போன்ற தெய்வங்களுக்கான சடங்குகள் முக்கியம் பெறுகின்றன. இவ்வகையில் மட்டக்களப்பு மாவட்ட ஆகமம்சாரா வழிபாட்டின் தன்மைகளைக் கொண்ட குலக்குறி வழிபாட்டு நெறிகள் இப்பிரதேச மக்களின் வாழ்வில் பாரியளவில் தாக்கத்தைச் செலுத்துகின்றன.

**திறவுச் சொற்கள்:** குலக்குறி, மட்டக்களப்பு, ஆகமம்சாரா வழிபாடு, ஆண் தெய்வங்கள், அடையாளம்

# Discourse Study Conducted on Illegal Sand Mining in Sri Lanka

Kaushalya, G. N.[1*], Liyanage, D. L. N. P.[2] Jayawardene, K. J. A. C. M.[3],
[1,2,3] Postgraduate Institute of Humanities and Social Sciences, University of Peradeniya
*gnnipuni011@gmail.com

## Abstract

Sand is considered one of the most consumed natural resources and it is essential for many sectors including building constructions, industries, and electronics. With this demand, this over-exploitation of sand can be identify in the world and Sri Lanka and it has become a considerable discourse in today's society. Therefore, this study mainly focused on to conduct discourse analysis on illegal sand mining in several areas in Sri Lanka as a qualitative methodological approach. The materials including research papers, reports, newspaper articles, books, periodicals, interviews, and conversations used as the main data source of this study, and data ware analyzed using Discourse Analysis in a qualitative methodological approach. The findings of this research critically recognize that the dominant discourse that was pointed out in these articles is, this sand mining mafia has rapidly increased with the involvement of the government and politically backed paramilitary organizations. The alternative discourses that have been pointed out to the rise of illegal rapid sand mining are: becoming an organized process, abuse of powers, responsible authorities do not take appropriate action, failure to properly punish offenders, failure to enforce the law properly, lack of security in sand mining sites, use of new technology, injustice and inequality problems related to enforcement of rules and regulations, and problems related to judicial action and court decisions. This kind of study enables us to identify real situation regarding the specific discoursal topics in the community in a spatial and temporal manner.

**Keywords:** Illegal Sand Mining, Discourse Analysis, Sri Lanka, Sand, Qualitative Methodological Approach

# பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவில் நிலச்சரிவு அனர்த்தம்: ஓர் இடரீதியான நோக்கு

டேனியல் காமதேனு கிறிஸ்டினா[1], வசந்தகுமாரி செல்வநாயகம்[2]
[1,2] புவியியல் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1,2] christenadk@gmail.com, vasanthakumarys@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் கண்டி மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ள பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவு எதிர்கொண்டு வரும் இயற்கை பேரிடர்களுள் நிலச்சரிவு அனர்த்தம் முதன்மையானதாக விளங்குகின்றது. அண்மைக் காலமாக அதிகரித்து வரும் நிலச்சரிவு அனர்த்தங்களினால் இப்பிரதேசம் அதிகளவிலான சமூகப் பொருளாதார பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றது. இப்பிரச்சினையை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட இவ்வாய்வின் பிரதான நோக்கம் பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நிலச்சரிவு அனர்த்தத்தின் இடரீதியான பாங்கு, காரணிகள், தாக்கங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதாகும். இதன் பொருட்டு பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவில் நிலச்சரிவு அனர்த்திற்கு முகங்கொடுத்துவரும் தண்டுபெதிரூப, வெலிகொடவத்த மற்றும் நாவலப்பிட்டிய தெற்கு ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளும் தெரிவு செய்யப்பட்டு ஆய்வானது முன்னெடுக்கப்பட்டது. கலப்புமுறை ஆய்வாக முன்னெடுக்கப்பட்ட இவ்வாய்விற்கு அவசியமான தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானம், குழுக்கலந்துரையாடல் ஆகிய முதலாம்நிலை தரவு சேகரிப்பு முறைகளின் ஊடாகவும் இரண்டாம் நிலைத்தரவு மூலங்களை பயன்படுத்தியும் பெறப்பட்டன. வினாக்கொத்து ஆய்விற்காக ஆய்வுப் பிரதேசத்தில் நிலச்சரிவு பாதிப்பிற்குள்ளான 56 குடும்பங்களும் தெரிவுசெய்யப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் GIS தொழில்னுட்பத்தின் ஊடாக படமாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் 75% மான பகுதிகள் அதிக ஆபத்தான பகுதியாகவும் 23% மான பகுதி ஓரளவு ஆபத்து கொண்ட பகுதியாகவும் விளங்குவதுடன் 2% மான பகுதி மட்டுமே குறைந்த ஆபத்தை எதிர்கொள்ளும் பகுதியாக விளங்குகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் பாறைச்சரிவு/வீழ்வு, சேறுவழிதல், மண்சரிவு, நகர்ச்சி ஆகியன முக்கிய நிலச்சரிவு வகைகளாக இனங்காணப்பட்டுள்ளதுடன் இடரீதியாக நோக்குகையில் தண்டுபெதிரூப பகுதியே உயர் நிலச்சரிவு ஆபத்து மிக்க பகுதியாக விளங்குகின்றது. ஆய்வுப்பிரதேச நிலச்சரிவிற்கான காரணிகளை பொறுத்தவரையில் மானிட காரணிகளை விட பௌதிக காரணிகளே அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன. பௌதிக காரணிகளுள் சாய்வின் தன்மை, மழைவீழ்ச்சி ஆகியன முக்கிய காரணிகளாக இனங்காணப்பட்டதோடு மானிடக் காரணிகளுள் முறையற்ற வடிகாலமைப்பு முறைமை, சாய்வுகளில் பொருத்தமற்ற குடியிருப்புக்கள் என்பன இனங்காணப்பட்டன. இப்பின்னணியில் அதிகரித்து வரும் நிலச்சரிவு அபாய நிலையினால் ஆய்வுப் பிரதேசமானது வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. சமூக பாதிப்புக்களுடன் பொருளாதார ரீதியிலான பாதிப்புக்கள் உயர்வாக உள்ளமையினால் இப்பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரம் பின்னடைவாகக் காணப்படுகின்றது. ஆபத்தான வலயங்களில் வாழும் மக்களுக்கான மீள்குடியேற்றம், சமூக மட்டத்தில் முன்னெடுக்கப்படும் சில சாய்வு முகாமைத்துவ நடவடிக்கைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுக்கு அப்பால் தொடர்ந்தும் மக்கள் ஆபத்து வலயங்களிலேயே வாழ்ந்து வருகின்றமை அவதானிக்கத்தக்கது. இந்நிலையில் மீள்குடியேற்ற செயற்பாடுகளை துரிதப்படுத்துவதும், அவசியமான முகாமைத்துவ நடவடிக்கைகளை முன்னெடுத்து மக்களுக்கு பாதுகாப்பான வாழ்வினை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

**திறவுச் சொற்கள்:** அனர்த்தம், ஆபத்து, இடரீதியான வேறுபாடு, நிலச்சரிவு, GIS

# கினிகத்தேனை கிராம சேவகர் பிரிவில் நிலத்தோற்றத்துடன் தொடர்புடைய சூழலியல் பிரச்சினைகள்

ஆ.மோகனதர்ஷினி
புவியியல் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
mohanaarumugam03@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட 315A எனும் கிராம சேவகர்பிரிவானது நிலத்தோற்றத்துடன் தொடர்புடைய பல சூழலியல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது. இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டதன் பிரதான நோக்கமானது ஆய்வுப் பிரதேசத்தில் பௌதிக மற்றும், மானிட காரணிகளுடன் தொடர்புடைய நிலத்தோற்றம் சார்ந்த சூழலியல் பிரச்சினைகளை அடையாளப்படுத்துதல், அதனை GIS தொழில்நுட்பத்திற்கூடாக படமாக்கல் மற்றும் அவற்றினை தடுப்பதற்கு ஆய்வு பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் எவையென கண்டறிதல் போன்றனவாகும். அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கலப்பு முறையில் முன்னெடுக்கப்பட்ட இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகளாக வினாக்கொத்து, நேரடி அவதானிப்பு, ஒளிப்படங்கள் மற்றும் நேர்காணல் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளதோடு இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பு முறைகளாக பிரதேச செயலக புள்ளிவிபரவியல் அறிக்கை, ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள் இணையத்தளங்கள் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி ஆய்வு பிரதேசத்தில் இனங்காணப்பட்ட பௌதிக ரீதியிலான நிலத்தோற்றத்துடன் தொடர்புடைய சூழலியல் பிரச்சினைகளாக இயற்கை அனர்த்தங்களான நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு என்பனவும் மானிட ரீதியிலான காரணிகளில் அதிகரித்த பைனஸ் மரங்களினது உருவாக்கம், மலைகளை தகர்த்தல், இயற்கையான நீர் வழிகளை மறித்தல், சனத்தொகை அதிகரித்தல் என்பனவும் இனங்காணப்பட்டுள்ளன. அத்தோடு ஆய்வு பிரதேசத்தினை பொறுத்தவரையில் நிலத்தோற்றத்துடன் கூடிய சூழலியல் பிரச்சினைகளை தடுப்பதற்காக கல்வேலி அமைத்தல், காடழிப்பினை தடுப்பதற்கான நடவடிக்கைகளினை முன்வைத்தல் என்பன இங்கு முக்கிய காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆய்வின்படி கினிகத்தேனை பிரதேசமானது அதிகளவிலான நிலத்தோற்றத்துடன் தொடர்புடைய சூழலியல் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளதோடு சமூக பொருளாதார அடிப்படையிலும் பாதிப்புக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு ஒப்பீட்டு ரீதியில் பௌதிக ரீதியான காரணிகளை விடவும் மானிட காரணிகளினாலே ஆய்வு பிரதேசத்தில் அதிகளவிலான நிலத்தோற்றங்களை அடிப்படையாகக் கொண்ட சூழலியல் பிரச்சினைகளை அவதானிக்க முடிந்தது. போதிய பொருத்தமான முகாமைத்துவ முறைகளை கடைபிடிக்காமையே இத்தகைய பிரச்சினைகளை மேலும் தூண்டுவதற்கான காரணங்களாக காணப்படுகின்றமை அடையாளங்காணப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** நிலத்தோற்றம், சூழலியல், பௌதிக காரணிகள், மானிட காரணிகள், அனர்த்தம், பாதிப்புக்கள்

# வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் காணப்படும் சூழலியல் பிரச்சினைகளும் அவற்றை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளும்

தேவசகாயம் என்டன் சகாயராணி
புவியியல் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
dhevasagayamantonsagayarani@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

அம்பகமுவ பிரதேச செயலகப்பிரிவிற்குற்பட்ட வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவானது பசுமையான சூழலை கொண்டுள்ளதுடன் அவை சார்ந்த பிரச்சினைகளும் காணப்படுகின்றன. இங்கு சூழல்சார் பிரச்சினைகளை தோற்றுவிப்பதில் பல்வேறுப்பட்ட இயற்கை மற்றும் மானிடக் காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. சூழலின் வனப்பு அற்றுப்போதல், தாவரபோர்வை அழிவடைதல், சூழலில் வெறுக்கத்தக்க மணம் வீசுதல் ஆகிய ஆய்வுப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டுள்ளது. வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் காணப்படும் சூழலியல் பிரச்சினைகளையும் அவற்றை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளை அடையாளம் காணல் ஆய்வின் பிரதான நோக்கமாகக் காணப்படுகிறது. மேலும் வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் சூழலியல் பிரச்சினைகளுக்ப் பொறுப்பான இயற்கை காரணிகளை கண்டறிதல் மற்றும் வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவில் சூழலியல் பிரச்சினைகளுக்கு பொறுப்பான மானிட காரணிகளை கண்டறிதல் ஆகிய உப நோக்கங்களையும் இவ்வாய்வானது கொண்டமைந்துள்ளது. மேலும் குறித்த ஆய்வில் பண்பு ரீதியான, அளவு ரீதியிலான இரு ஆய்வு முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்கு தேவையான தரவுகள் முதலாம் நிலைத்தரவு என்ற ரீதியில் நேரடி அவதானிப்பு, கள ஆய்வு, கலந்துரையாடல் மற்றும் வினாக்கொத்து என்ற அடிப்படையிலும், இரண்டாம் நிலை மூலங்களில் இருந்தும் பெறப்பட்ட தரவுகள் ஆய்வுக்காக பெறப்பட்டு விபரண மற்றும் பண்பு ரீதியான பகுப்பாய்வு முறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வின் பெறுபேற்றின் படி வெஞ்ர்சர் கிராம நிலதாரி பிரிவில் நீரின் அளவு மற்றும் தரம் குறைவடைதல், மண் தரமிழத்தல், தாவர போர்வை அழிவடைதல், நிலத்தோற்றம் மாற்றமடைதல் போன்ற சூழலியல் பிரச்சினைகள் காணப்படுவது கண்டறியப்பட்டது. மேலும் இதனை தூண்டும் காரணிகளாக அபிவிருத்தி நடவடிக்கைகள், இரத்தினக்கல் மற்றும் மணல் அகழ்வு செயற்பாடு, முறையற்ற கழிவகற்றல் முறைகள், வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டுத்தீ, விவசாய நடவடிக்கைகள் மற்றும் நீர்மின் உற்பத்தி என்பன காணப்படுகின்றமையும் கண்டறியப்பட்டு சூழல் மாசடைவை இழிவளவாக்குவதற்கான வழிமுறைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** வெஞ்சர் கிராம நிலதாரி பிரிவு, சூழல் மாசடைவு, மண் தரமிழப்பு, தாவரப்போர்வை

# நந்தினிசேவியரது சிறுகதைகள்: உள்ளடக்கம், உருவம் பற்றிய ஆய்வு

அரியநாயகம் சிவரூபினி[1], நதிரா மரியசந்தனம்[2]
[1,2]தமிழ் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
[1]asivaroopini@gmail.com, [2]nadiraeusl@yahoo.co.in

**ஆய்வுச் சுருக்கம்**

நந்தினிசேவியரது எழுத்துக்கள் ஈழத்து இலக்கிய உலகில் முக்கியத்துவமுடையனவாகவும், தனித்துவமிக்கனவாகவும் அமைகின்றன. அந்தவகையில் நந்தினிசேவியரது சிறுகதைகள்: உள்ளடக்கம், உருவம் பற்றிய ஆய்வு என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுள்ள நந்தினிசேவியரது சிறுகதைகளை உள்ளடக்க, உருவ ரீதியாக ஆராய்தல் என்ற வகையில் அமைகிறது. ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியமானவர் என்ற வகையில் நந்தினிசேவியரின் படைப்பாளுமையையும், அவரது சிறுகதைகளின் தனித்துவத்தையும், முக்கியத்துவத்தையும் வெளிக்கொண்டு வருவது இவ்வாய்வின் நோக்கமாகும். நந்தினிசேவியரது கிடைக்கப்பெற்ற சிறுகதைகளே ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நந்தினிசேவியர் எழுதிய சிறுகதைகள் முழுமையாக ஆய்வுக்குட்படுத்தப்படாதது ஆய்வுப்பிரச்சினையாக அமைகின்றதுடன் இவ்வாய்வானது விமர்சன மற்றும் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்விற்காக நந்தினிசேவியரின் சிறுகதைத் தொகுப்புகள், நந்தினிசேவியரின் தொகுப்பு நூல்கள் மற்றும் சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவந்த அவரது ஆக்கங்கள் முதலாம் நிலைத்தரவுகளாகவும், நந்தினிசேவியரின் உறவினர்கள் மற்றும் இலக்கிய நண்பர்களுடனான நேர்காணல்கள், சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் நந்தினிசேவியர் படைப்புகள் பற்றி ஏனையோர் எழுதிய கட்டுரைகள், இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொண்ட நந்தினிசேவியர் பற்றிய தகவல்கள் என்பன இரண்டாம்நிலைத்தரவுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. எனவே நந்தினிசேவியரின் சிறுகதைகள் பெறுகின்ற முக்கியத்துவத்தை இலக்கிய உலகிற்கு வெளிக்கொண்டு வருதல் என்ற அடிப்படையில் இவ்வாய்வானது முக்கியத்துவம் பெறுகின்றது.

**திறவுச் சொற்கள்:** நந்தினிசேவியர், படைப்பாளுமை, எடுத்துரைப்பு உத்திகள், தனித்துவம், சாதிப்பிரச்சினை

# சடங்குப் பாடல்கள் வெளிப்படுத்தும் இலக்கியச் சிறப்புக்கள் - ஆரையம்பதி பிரதேசத்தில் பயில்நிலையிலுள்ள சடங்குப் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

கஸ்தூரி சர்வேஸ்வரன்[1], சி.சந்திரசேகரம்[2]
[1,2]தமிழ் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
warankasthuri1284@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இலக்கியங்கள் என்பவை குறிப்பிட்ட சமூகத்தின் பண்பாடு, வரலாறு போன்ற இன்னோரன்ன அம்சங்களை வெளிப்படுத்தும் காலத்தின் கண்ணாடிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன. குறிப்பாகப் பிரதேசம் சார்ந்து எழுகின்ற இலக்கியங்கள் அப்பிரதேசத்தின் பின்னணியை தெளிவுற எடுத்தாளுகின்றன. அதனடிப்படையில் நோக்குகின்றபோது ஆரையம்பதி பிரதேசத்தில் பயில்நிலையிலுள்ள சடங்குப் பாடல்களும் அத்தன்மையானவையே. இச்சடங்குப் பாடல்கள் மொழி, வடிவம், பொருள் முதலான இலக்கிய ஆக்கக் கூறுகளைக் கவனத்திற்கொண்டு படைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் சடங்குப் பாடல்கள் குறித்த பிரதேசத்தின் சடங்கு வழிபாட்டம் சங்களை எடுத்துரைக்கும் அதேவேளை இலக்கிய நெறிமுறைகளுக்கு உட்பட்டும் அவை பாடப்பட்டுள்ளன. அவ்வாறான சடங்குப் பாடல்களில் சுட்டப்படும் இலக்கியச் சிறப்புக்களை மையப்படுத்தியதாகவே இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வின் எல்லை மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி பிரதேசச் சடங்குக் கோயில்களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான முதன்மை மூலங்களாக சடங்குக் கோயில்களில் களஆய்வு செய்து பெறப்பட்ட தகவல்களும், கோயிற் பூசகர்களைச் செவ்வி கண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளும் பயன்படுத்தப்பட்டன. துணை மூலங்களாகச் சடங்குப் பாடல்கள் தொடர்பாக வெளிவந்த நூல்களும், அவை தொடர்பான பழமையான ஏடுகளும், எடுத்தாளப்பட்டன. கோயில்களிலும், கோயிற் பூசகர்களிடமும் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு களஆய்வு முறையும், இலக்கியங்களை ஆய்வு செய்வதற்கு விவரண ஆய்வு முறையும், சங்க இலக்கியங்களுடன் சடங்குப் பாடல்களை ஒப்பிட்டு நோக்குவதற்கு ஒப்பியல் ஆய்வு முறையும் ஆய்வு முறையியல்களாகப் பயன்படுத்தப்பட்டன. பாமர மக்களின் பக்தி இலக்கியங்களாகக் காணப்படும் சடங்குப் பாடல்களில் காணப்படும் இலக்கியச் சிறப்புக்களை அடையாளப்படுத்துவதனை முக்கிய நோக்காகக் கொண்டு இவ்வாய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** இலக்கியச் சிறப்பு, சடங்குப்பாடல், கோயில், பிரதேசம், ஏடுகள், பூசகர்

# சைவசித்தாந்த சிந்தனைகள் தொடர்பான ஆய்வுகள்: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆய்வரங்க கட்டுரைகளை அடிப்படையாக் கொண்டது

தி.குறிஞ்சி
இந்துநாகரிகத் துறை, கலை கலாசார பீடம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை
sivakurinchy95@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இந்திய தத்துவச்சிந்தனைகளுள் ஒன்றாகச் சைவசித்தாந்தம் சிறப்புற்று விளங்குகிறது. வேதாகமங்களை பிரமாண நூல்களாகக் கொண்டமைந்த சைவசித்தாந்தமானது சிவசம்பந்தமுடையதாகக் கருதப்படுகின்றது. வடமொழி மரபில் அஷ்டப்பிரகரணங்களையும் தமிழ் மரபில் சங்க இலக்கியம், பக்தி இலக்கியம் எனும் இலக்கியங்களின் வழி சைவசித்தாந்தம் பெருவளர்ச்சி கண்டது. சாத்திரங்கள் சைவசித்தாந்தத்தைக் கோட்பாட்டு நிலைப்படுத்தின. இந்த வரலாற்று முறைமையில் திருமுறைகளின் பங்களிப்பு அளவற்றது எனலாம். சமண, பௌத்த செல்வாக்கு தமிழகமெங்கும் நிறைந்திருந்த வேளையில் வணிகமரபில் இருந்துவந்த பெண்மணியான காரைக்காலம்மையார் சைவத்தின் அடிநிலைக்கருத்துக்களைத் தன் பாடல்களின் வழி முன்வைக்கிறார். அவரது தடத்தில் தேவாரமுதலிகள் சைவத்தை சமய, தத்துவ மரபின் வழி வளர்த்தெடுக்கின்றனர். திருமூலர், மாணிக்கவாசகர் மற்றும் பல்லவர், சோழர் காலங்களில் வாழ்ந்த ஏனைய நாயன்மார்கள் அதனை மேனிலைப்படுத்துகின்றனர். அந்த அடிப்படையில் பன்னிரு திருமுறை சைவத்தின் பன்முக அடையாளமாகத் திகழ்கின்றது. ஈழத்தின் அரச திணைக்களமாகத் திகழும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து சமயம் சார்ந்து பல்வேறு பணிகளைக் காலங்காலமாக முன்னெடுத்து வருகின்றது. அவற்றுள் தலையான ஒன்றாக வருடாவருடம் நடாத்தி வருகின்ற ஆய்வரங்குகள் அமைந்துள்ளன. அவை பல்வேறு பொருண்மைகளைக் கொண்டவையாக இந்து சமயத்தின் பல்பரிமாணக் கூறுகளை காலம், கருத்து என்ற பல்வேறு தளங்களில் வெளிப்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன. அந்த அடிப்படையில் இவ்வாய்வரங்குகளில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் பின்பு நூலுருப்பெற்று வெளிவந்துள்ளன. அந்த ஆய்வரங்கக் கட்டுரைத் தொகுப்புக்களை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது. குறிப்பாக இக்கட்டுரைத் தொகுப்புக்களில் சைவசித்தாந்த சிந்தனைப்புலம் எவ்வெவ்வாறு எவ்வெவற்றினூடாக ஆராயப்பட்டுள்ளது, அதன் பொருத்தப்பாடு என்பவற்றை விமர்சன ரீதியில் மதிப்பீடு செய்கின்றது. இந்தவகையில் திணைக்களத்தின் ஆய்வரங்கக் கட்டுரைகள் எவ்வளவு தூரம் சைவசித்தாந்த சிந்தனைகளை முழுமையாக வெளிப்படுத்துகின்றன என்பதே இங்கு ஆய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது. அதே போல இந்த ஆய்வின் நோக்கம் ஆய்வரங்கக் கட்டுரைகள் சைவசித்தாந்த சிறப்பினை வெளிக்கொண்டு வருவதற்கு உதவுமாற்றை அறிவதே ஆகும். இவ்வாய்வின் எல்லையாக பத்தாம், பதினொராம், பன்னிரெண்டாம் திருமுறைகள், சோழர்கால மற்றும் சமஸ்கிருத இலக்கியங்கள், உந்தி, களிறு பற்றிய ஆய்வுகள் என்பனவற்றில் காணப்படும் சைவசித்தாந்த சிந்தனைகளே எடுத்தாளப்படுகின்றது. இவ்வாய்வில் விவரணஆய்வு முறையியல், பகுப்பாய்வு முறையியல் என்பன பயன்படுத்தப்படுகின்றன. அனேக சந்தர்ப்பங்களில் தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு (Analytical Method) உட்படுத்தப்படுகின்றன. இவற்றின் வழி இவ்வாய்வரங்கக் கட்டுரைகள் சைவசித்தாந்த சிந்தனைகளை கருத்தியல் ரீதியிலும், வாழ்வியல் நோக்கிலும் அணுகி விமர்சன நோக்கில் பகுப்பாய்வு செய்கின்றன. இதனூடாக சைவசித்தாந்தம் சார்ந்த சமகால வாசிப்புக்கள் ஆராயப்படுதல் இந்த ஆய்வின் பயனாக அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** சைவசித்தாந்தம், திருமுறை, திணைக்களம், ஆய்வரங்கக் கட்டுரைகள், கருத்தியல், வாழ்வியல்

# சைவ சித்தாந்தம் மற்றும் கிறிஸ்தவ வேதாகமம் கூறும் ஆன்மா எனும் எண்ணக்கரு - ஓர் ஒப்பீட்டு ஆய்வு

சித்திரவேல் மேரி ஆஞ்சலா[1], சோ.ஜெகநாதன்[2]
[1,2]தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்
[1]anjalasuthan@gmail.com, [2]jeganathans@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

தற்கால சமூகத்தில் நடைபெறுகின்ற பாரிய பிரச்சினையாக ஒழுக்க மீறல்கள் காணப்படுகின்றன. ஒழுக்கம் என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறைமையாகும். இதனால் மனிதனே தன்னால் உருவாக்கப்பட்ட ஒழுக்கத்தை பின்பற்ற அஞ்சுகிறான். ஆனால் இவ்வொழுக்கம் தொடர்பான விடயங்களை இறைவன் கூறினார் என்றால், அதனை எந்த வித சந்தேகங்களுமின்றி ஏற்றுக்கொள்வான். அந்த வகையிலேயே உலகில் சமயங்களும் அதனைப் பின்பற்றும் சட்டங்களும் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்து மற்றும் கிறிஸ்தவ சமயங்கள், ஆன்மாவைப் பற்றி விளக்கும் போது பல்வேறு வகையான ஒழுக்கங்களைக் கூறி நிற்கின்றன. அவற்றினைத் தெளிவுபடுத்துவதன் மூலம் இச்சமயங்களைப் பின்பற்றுபவர்கள் மட்டுமல்லாது ஏனையவர்களும் ஏற்கும் வகையில் அறத்துடன் தொடர்புபட்டதாக இவ்வாய்வு காணப்பபடுகின்றது. இந்த ஆய்வானது சைவ சித்தாந்தம் மற்றும் கிறிஸ்தவ வேதாகமம் கூறும் ஆன்மா தொடர்பான விடயங்களை ஒப்பிடுவதுடன், ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலம் வரை நிலவி வருகின்ற ஆன்மீகம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான பிரச்சினைகளுக்கு சைவசித்தாந்தத்திலும் கிறிஸ்தவ வேதாகமத்திலும் கூறப்படுகின்ற ஆன்மா தொடர்பான கருத்துக்கள் மூலம் எவ்வாறான தீர்வுகளை முன்வைக்கலாம் என்பதனை முக்கிய நோக்கமாகவும் கொண்டது. இந்நிலையில் இவ்வுலகில் வாழுபவர்கள் சரியானது எது பிழையானது எது என்று அறிந்தும் கூட நன்மையானவைகளை விடுத்து தீமைகளையே அதிகம் செய்கின்றனர். இவ்வாறான நிலை தொடர்ந்தும் காணப்பட்டால் இவ்வுலகமானது மிகவும் பிரச்சினைக்குரிய ஒன்றாக மாறிவிடும். சூழலை மாசுபடுத்துவதனால் இப்பூமியானது வெகு சீக்கிரத்தில் அழிந்து விடும் என்று எவ்வாறு விஞ்ஞானிகள் அஞ்சுகின்றார்களோ அதே போலவே இவ்வுலகில் ஒவ்வொரு மனிதன் செய்யும் தீமையான காரியங்கள் சமூகத்தை சீரழித்து விடும் என்பதும் அச்சத்துக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. இந்நிலையினை மாற்றியமைக்க ஆன்மா தொடர்பான விழிப்புணர்வும் புரிதலும் கட்டாயமானதாகக் காணப்பட வேண்டும் என்பதை விபரிப்பு, ஒப்பீட்டு, விமர்சனம் முதலான முறையியலினூடாகத் தெளிவுபடுத்த இந்த ஆய்வு முனைகிறது. .

**திறவுச் சொற்கள்:** கிறிஸ்தவ வேதாகமம், சைவசித்தாந்தம், அறநெறி, பசு, ஆத்துமா

# இலங்கை முஸ்லிம்களின் சமய, சமூக எழுச்சிக்கு மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் - ஒரு வரலாற்றுப் பார்வை

ஏ. ஜ.்.பர் ஹுஸைன்
இஸ்லாமிய கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
hussainaj@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

அறேபியர்களின் வழிகாட்டல்களின் மூலம் கிடைக்கப்பெற்ற இஸ்லாம் எனும் மார்க்கத்தை இலங்கை முஸ்லிம்கள் பின்பற்றிவிடாமல் தடுப்பதில் ஈடுபட்ட ஐரோப்பியர்களின் சதித்திட்டத்திற்கு எதிராக மார்க்கப் பணி செய்து வழிகாட்டிய தென்னிந்திய இஸ்லாமிய அறிஞர்களுள் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். இவ்வகையில் இவ்வறிஞர் மேற்கொண்ட சமய மற்றும் சமூகப் பணிகள் மற்றும் அவரின் தகைமைகள் ஆகியவைகளை வெளிக்கொணர்தல் இவ்வாய்வின் நோக்கங்களாகும். பண்புரீதியில் அமைந்த இவ்வரலாற்றாய்வு இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். மேலும் இவர் தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் வரலாற்று ஆவணங்கள் என்பன மீளாய்வு செய்யப்பட்டன. அதன்படி மார்க்கப் பணிகளை மேற்கொள்வதற்குரிய அடிப்படைத் தகைமைகளை கொண்டவராக ஆலிம் அவர்கள் திகழ்ந்தார். அறபு மொழி, வரலாறு, தத்துவம், மெய்ஞ்ஞானம் போன்ற கலைகளில் பாண்டித்தியம் பெற்றதோடு, அல்குர்ஆன் மீது கொண்ட பற்று அவரை ஹாபிழாக வடிவமைத்தது. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இலங்கை முஸ்லிம்களின் நிலை அவருக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியதன் விளைவாக அவரது வியாபாரத்தை இரண்டாம் நிலைக்கு மாற்றி மத்ரஸதுல் பாரியை உருவாக்கி அதன் மூலம் அறிவுப் பணிபுரிந்தார். முஸ்லிம்கள் மார்க்கக் கடமைகளைப் புரிந்து கொள்ள பத்ஹுல் மதீன், பத்ஹுத் தையான், பத்ஹுஸ் ஸலாம் ஆகிய பிக்ஹ்சார்ந்த நூல்களை எழுதி மக்களின் அறியாமைக்கு முற்றுப்புள்ளிவைத்தார். இவை அனைத்தையும் தொகுத்து 'மஙானி' எனும் சட்டத்தொழுப்பை உருவாக்கி மார்க்கக் கடமைகளை மேலும் தெளிவுபடுத்தினார். அன்றைய சூழ்நிலையில் அறபு மொழியில் இடம்பெற்ற குத்பா பிரசங்கங்களை அறபுத் தமிழில் தொகுத்ததோடு, அந்நியக் கலாசாரத்துடன் முஸ்லிம் பெண்களுக்கு இருந்த தொடர்பை நீக்க தலைப்பாதிஹாவை உருவாக்கி பாத்திமா நாயகியின் வரலாற்றை பெண்கள் தெரிந்துகொள்ள வழிசெய்தார். மேலும் பல தரிக்காக்களை உருவாக்கி இன்றுவரை முஸ்லிம்களை ஆன்மீக உயிரோட்டத்தில் இணைய வழிசெய்தார். எனவே, முஸ்லிம்களுக்கு வழிகாட்டுவதற்கான தனிமனித ஆளுமைகளின் அவசியம் வலியுறுத்தப்படுவதோடு, அதற்கான முன்னெடுப்புக்கள், வழிகாட்டல்கள் பற்றிய முன்மொழிவுகளைத் தருவதாகவும், எதிர்காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** தென்னிந்தியா, மாப்பிள்ளை லெப்பை ஆலிம், இலங்கை முஸ்லிம்கள், சமய – சமூகப் பங்களிப்புக்கள், மஙானி

# ‘பெண் ஏன் அடிமையானாள்?’, ‘இரண்டாம் பாலினம் (The Second Sex)’ ஆகிய நூல்களின் நோக்கில் பெண் விடுதலை - ஒரு பெண்ணிய மெய்யியல் ஒப்பீட்டாய்வு

சந்திரபோஸ் பபிதாதர்ஷி[1], இரத்தினசபாபதி பிரேம்குமார்[2]
[1,2] தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]bbi2428dharshi@gmail.com, [2]premkumarr@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

மானுடத்தின் உயர்ந்த பண்பே மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமென்பதே. ஆனால் பெண்களை ஆண்களின் உலகமானது சக உயிரியாகக்கூட மதிப்பதில்லை. ஒத்த தகுதியுடைய இரண்டு கூறுகளிடையே எப்போதும் முரண்பாடுகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். இதனால் தான் ஆண், பெண் என்ற இரு உயிரிகளுக்கிடையே போராட்டங்கள் தொடர்ந்துக்கொண்டே இருக்கின்றன. பெண்ணுக்குரிய சமூக ஏற்றத்தாழ்வு என்பது சமத்துவமின்மையை தான் கொண்டுவருகின்றன என்பது கண்கூடு. அந்தவகையில், ‘பெண் ஏன் அடிமையானாள்?’, ‘இரண்டாம் பாலினம்’ ஆகிய நூல்களின் நோக்கில் பெண் விடுதலை - ஒரு பெண்ணிய மெய்யியல் ஒப்பீட்டாய்வு’ எனும் இவ்வாய்வானது ‘பெண்விடுதலை’ என்பதனை அடிப்படையாகக் கொண்டது. பெண்ணிய விடுதலைக்கு ‘இரண்டாம் பாலினம்’ மற்றும் ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்ற நூல்கள் அடிப்படையில் ஏறத்தாழ ஒரே கருத்துக்களைக் கொண்டுள்ளன என்பதோடு சமூகத்திற்கு பெண்மை பற்றிய ஒரு தீவிரத்தன்மையை ஒட்டிய தீர்வினை வழங்கியுள்ளன என்ற கருதுகோளை இவ்வாய்வு அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது, பண்பு ரீதியானதாக காணப்படுவதுடன் இரண்டாம் நிலைத்தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் கட்டுரைகள் என்பனவும் மூன்றாம் நிலைத்தரவான இணையத்தள மூலங்களும் பயன்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுப்பாய்வின் மூலம் மேலைத்தேய பெண்ணியமும் கீழைத்தேய பெண்ணியமும் பொதுவில் ஒன்று போலவும் தீவிரவாதத்தன்மை கொண்டவையாகவும் காணப்படுகிறது என்கிற முடிவினை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் இவ்வொப்பீட்டாய்வின்படி, ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்ற நூலும் ‘இரண்டாம் பாலினம்’ எனும் நூலும் பெண் விடுதலை பற்றிய ஒருமித்த கருத்தினை கொண்டிருப்பதனை காணமுடிகின்றது. மேலும் இவ்வாய்வு பெண்ணானவள் அடையவேண்டிய விடுதலைக்கான பரிந்துரைகளையும் முன்வைப்பது குறிப்பிடத்தக்கது..

**திறவுச் சொற்கள்:** பெண் விடுதலை, பெரியார், பெண் ஏன் அடிமையானாள்?, இரண்டாம் பாலினம், சைமன் டீ பெவாயர்

# திருக்குறளிலும் நாலடியாரிலும் நட்பு எனும் எண்ணக்கரு – ஒரு தத்துவார்த்த ஒப்பீட்டு ஆய்வு

அ.அணேஜா
தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்
anejaariyarethnam@mail.com


## ஆய்வுச் சுருக்கம்

தமிழர் மெய்யியலின் ஆய்வுப் பொருண்மைகளில் திருக்குறள் மற்றும் நாலடியார் எனும் இரு பதினெண் கீழ்க்கணக்கு நீதி நூல்களும் தனித்துவமான இடத்தினைப் பெற்றுக்கொள்கின்றன. இப்பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறத்தினை வலியுறுத்தும் முக்கிய நூல்களாகவே இவ்விரு நூல்களும் விளங்குகின்றன. திருக்குறள் அறம், பொருள், இன்பம் என மூன்று பிரதான பகுதிகளையும், ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து குறள்கள் உள்ளடங்கலாக நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. இதில் பொருட்பாலில் உள்ளடங்கும் எழுபத்து ஒன்பது தொடக்கம் எண்பத்து மூன்று வரையான ஐந்து அதிகாரங்களான நட்பு, நட்பாராய்தல், பழமை, தீ நட்பு, கூடா நட்பு என்வற்றில் உள்ள ஐம்பது குறள்களிலும் நட்பு தொடர்பாக பேசப்பட்டுள்ளது. நாலடியார் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரதான பகுதிகளையும், அறத்துப்பாலில் இரண்டு இயல்களும், பொருட்பாலில் ஏழு இயல்களும், காமத்துப்பாலில் இரண்டு இயல்களுமாக மொத்தம் பதினொரு இயல்களில் நாப்பது அதிகாரங்களையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து பாடல்கள் உள்ளடங்கலாக நானூறு வெண்பா பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதில் பொருட்பாலில் உள்ளடங்கும் நட்பியலில் இருபத்து ஒன்று தொடக்கம் இருபத்து மூன்று வரையான மூன்று அதிகாரங்களான சுற்றம் தழால், நட்பு ஆராய்தல், நட்பிற் பிழை பொறுத்தல் என்பவற்றில் உள்ள முப்பது வெண்பா பாடல்களிலும் நட்பு தொடர்பான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எனவேதான் நாலடியாரிலும் திருக்குறளிலும் நட்பின் சிறப்பு மற்றும் கூடா நட்பு தொடர்பான விடயங்களை பகுத்தறிந்து சிறந்த நட்பிற்கான அடையாளத்தினை இனங்கண்டு கொள்வதனை பிரதான நோக்கமாகக் கொண்டதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இதற்காக நாலடியார் மற்றும் திருக்குறளின் மூலநூல்களும் தெளிவுரைகளும் மற்றும் இவை தொடர்பாக இணையத்தளத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களும் இரண்டாம் நிலைத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டு பண்புசார்ந்ததாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நட்பின் பல பரிமாணங்களிலிருந்து மிகச்சிறந்த நட்பினை கண்டறிவதில் நாலடியார் மற்றும் திருக்குறளில் உள்ள தத்துவ சிந்தனைகள் எவ்வாறு பிரயோகிக்கப்பட முடியும் என்ற ஆய்வுப் பிரச்சினையினை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. நாலடியாரிலும் திருக்குறளிலும் நட்பின் சிறப்பு மற்றும் கூடா நட்பு போன்ற விடயங்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன?, இவ்விடயத்துவங்களில் இரண்டு நூல்களும் எவ்வகையில் ஒருமித்த கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன?, நட்பின் சிறப்பு மற்றும் கூடா நட்பு என்பன பற்றிய முன்வைப்புக்களில் இரு நூல்களிலும் உள்ள தத்துவார்த்த போக்கு என்ன? என்பன குறித்த ஆய்வு வினாக்களிற்கு விடைகளைக் கண்டறியும் முயற்சியாக இவ்வாய்வு உள்ளது. இவ்வாய்வின் மூலம் சிறந்த நட்பின் பண்புகளையும், நட்பின் முக்கியத்துவத்தினையும், சிறந்த நண்பர்களை அடையாளம் காண்பதற்கான அடிப்படைகளையும், தீய நட்பினை அறிந்து கொள்ளவும், எத்தகைய தன்மை கொண்டவர்களை நண்பர்களாகக் கொள்ளாமல் தவிர்ப்பது என்பது குறித்தும் அறிந்து கொள்வதோடு நட்பிற்கான சரியான அர்த்தத்தினையும், பண்டைய தமிழர் வாழ்வில் ‘நட்பு’ எத்தகைய சிறப்பிடம் பெற்றிருக்கின்றது என்பதனையும் விளங்கிக்கொள்ளவும் முடியும்.


**திறவுச் சொற்கள்:** நட்பின் சிறப்பு, நாலடியார், திருக்குறள், கூடா நட்பு

# சமூக சீர்திருத்த திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற மாற்றீட்டுத் தண்டனை ஏற்பாட்டினால் சிறு குற்றமிழைத்தோர் எதிர்நோக்கும் சமூகத்தாக்கம் - மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசங்களை மையப்படுத்திய ஓர் ஒழுக்கவியல் ரீதியான ஆய்வு

சபேசன் சஜிதா,[1] முனியாண்டி ரவி[2]
[1,2]தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
[1]sabeshanshyllu@gmail.com, [2]vijiarts@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய காலகட்டத்தில் சிறு குற்றவாளிகளுக்கான மாற்றீட்டுத் தண்டனை முறையானது மிகவும் முக்கியமான விடயமாக காணப்படுகின்றது. மனித வரலாற்றினை எடுத்து நோக்குவோமானால் தவறுகளின் திருத்தமே மனித நாகரிகமாகிறது. மனிதப் பரிணாமம் ஆனது அவன் செய்யப்பட்ட செயல்களில் உள்ள தவறுகளை திருத்துவதன் மூலமே விருத்தியடைந்தது எனலாம். அந்தவகையில் தவறுகள் மனித குலத்திற்கு மிகவும் அவசியமானதொன்றாகவே காணப்பட்டு வந்துள்ளது. மேலும் மனித சமூகத்தில் தவறானது தவிர்க்க முடியாத ஒன்றாகவும் மனிதர்கள் தங்கள் வாழ்நாட்களில் தெரிந்தோ, தெரியாமலோ சில பல, சிறிய பெரிய தவறுகளை ஆற்றுகின்றனர். ஒரு மனிதன் தான் செய்யும் செயல் தவறு என்று தெரிந்தும் மீண்டும் அதனை ஆற்றுவான் ஆயின் அது சமூகத்தின் பார்வையில் அச்செயல் குற்றம் ஆகிறது. அந்தவகையில், அவர்கள் ஆற்றும் குற்றங்களின் தாக்கத்திற்கு ஏற்ப குடும்பத்தாரால் வழங்கப்படும் தண்டனை, சமூகத்தால் வழங்கப்படும் தண்டனை மற்றும் நீதிமன்றினால் வழங்கப்படும் தண்டனை என தண்டனைகள் வழங்கப்படுகின்றன. எவ்வாறாயினும், நீதிமன்றினால் வழங்கப்படும் தண்டனையே சமூகத்தில் அதிகம் தாக்கம் செலுத்துகிறது. அவ்வாறு நீதிமன்றினால் வழங்கப்படும் தண்டனைகள் பலவகை உண்டு. அதில் இவ்வாய்வானது நடைமுறையில் சிறைப்படுத்தப்பட்டுள்ள கைதிகளில் இரண்டு வருடங்களுக்கு குறைவாக உள்ள அல்லது தண்டப்பணம் செலுத்த முடியால் சிறைப்படுத்தபட்டவர்களுக்கான மாற்றீட்டு தண்டனை முறையாக சிறு தவறு செய்த குற்றவாளிகளை சமூதாயசீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துவதன் மூலம் அந்நபரின் வாழ்வில் ஏற்படும் சமூக, பொருளாதார, உளவியல் ரீதியாக எவ்வாறான சாதகங்களை பெறுகின்றனர் என்பதை மெய்யியல் ரீதியாக ஆராய்வதாக அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** மாற்றீட்டு தண்டனை முறை, சிறு குற்றம் இழைத்தோர், சமூதாயசீர்திருத்த திணைக்களம், சமூகத்தின் நோக்கு

# குடும்ப பிரச்சினைகளும் தீர்வுகளும் - ஒரு குடும்ப உளவளத்துணை நோக்கு களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப்பிரிவை மையப்படுத்திய ஆய்வு

சுரேஸ்குமார் யுகானா[1], சோ.ஜெகநாதன்[2]
[1,2]தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்,
[1]anjalasuthan@gmail.com, [2]jeganathans@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

"குடும்பம் எனும் எண்ணக்கரு – மெய்யியல்சார் உளவளத்துணை நோக்கு" ஆய்விற்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட சூரையபுரம் ஆய்வுப் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டு ஆய்வு இடம்பெற்றுள்ளது. சுனாமி பேரலைக்குப் பின்னர் குடியேற்றப்பட்ட கிராமமாக இது அடையாளங் காணப்படுகிறது. இங்கு குடும்பத்தினுடைய பிரச்சினைகள் அறியப்படுவதோடு அதனால் ஏற்படும் பாதிப்புக்களை தெளிவுபடுத்திக் கொண்டு அதற்கான உளவளத்துணை அறிவுகளை மேம்படுத்துதலை மையமாகக் கொண்டு இவ்வாய்வானது இடம்பெறுகின்றது. குடும்பங்களுக்கிடையிலான பிரச்சினைகள் ஏற்படுவதும் அது நிச்சயமாக தீர்க்கப்பட வேண்டியதுமாகும் என்பதனால் குடும்ப உளவளத்துணையினது இன்றியமையாமையானது தெளிவுபடுத்தப்பட்டு எவ்வாறு உளவளத்துணை மேற்கொள்வது குறித்த பிரச்சினைகளை மாற்றியமைக்க வாய்ப்புக்களை நல்கும் எனவும் விளக்கப்படுகிறது. இவ்வாய்வின் மூலமாக சமூகத்தினுடைய முக்கியமான அங்கமாக திகழும் குடும்பத்தினுடைய பிரச்சினைகளை குறைப்பதும் மற்றும் அதற்கான வழிகாட்டியாக குடும்ப உளவளத்துணையினை பங்கு கொள்ளச் செய்தலும் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. எதிர்காலத்தின் வாழ்வினுடைய நிலையாமையையும் அறியப்படாத விடயங்களினை விழிப்புணர்வின் மூலம் அறியச்செய்தலுமே இவ்வாய்வினது எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** உளவளத்துணை, குடும்பம், உளநோய், சமூகம், விழிப்புணர்வு

# கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் பிரச்சினைகள் - உளவியல் நோக்கு (மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவை மையப்படுத்திய ஆய்வு)

பவளசிங்கம் சசித்தா
தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
sasiththa96@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

கணவனை இழந்த பெண்கள் என்று நோக்கும் போது இயற்கையாகவோ, விபத்து மூலமாகவோ, தற்கொலை செய்து கொண்டோ அல்லது யுத்தத்தில் பாதிக்கப்பட்டோ கணவன் இறந்த பின் தனது குடும்பச் சுமையை தாங்கி நிற்கும் பெண்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறான பெண்கள் சமூகத்தில் பல வகையான நெருக்கீடுகளை சந்திக்கின்றனர். இறந்த கணவனின் உறவுகள் முலம், சமூக உறவுகள் மூலம், பொருளாதார ரீதியாக, சமய கலாசார ரீதியாக, உடலியல் மற்றும் உளவியல் ரீதியாக என பல வழிகளில் ஏற்படும் சவால்களை எதிர் கொண்டு வாழ்கின்றனர். அந்த வகையில் ‘‘கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் பிரச்சினைகள் - உளவியல் நோக்கு’’ எனும் தலைப்பில் மட்டக்களப்பின் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தை மையமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மனிதனின் வாழ்க்கையானது பல்வேறு பிரச்சனைகளின் மூலமாக தீர்வுகளை தேடுவதன் மூலம் நகர்வதாக அமைகின்றது. பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பாரிய அளவில் பேசப்படுகின்றது. அதிலும் கணவனை இழந்த பெண்களின் பிரச்சினைகள் குறிப்பிட்டுக் கூறக்கூடியது. கணவனை இழந்த பெண்களின் வாழ்வியல் பிரச்சினைகள் எவ்வாறாக அவர்களின் உளநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை அடிப்படையாகக் கொண்டதும், சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக ஏற்படும் பிரச்சினைகள் உளவியல் ரீதியாக எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பவற்றை உள்ளடக்கியதாக இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

**திறவுச் சொற்கள்:** கணவனை இழந்த பெண்கள், உளவியல், பொருளாதாரம், சமூகம், கலாசாரம்